தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு எண். 256

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பன்னிரண்டாம் தொகுப்பு

## (வைத்தியப் பகுதி)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதிமகால் நூலகச் சங்கம்

1988] [விலை ரூ. 15-00

முதற் பதிப்பு 1988

வெளியீடு :

தஞ்சை சரசுவதிமகால் நூலகச் சங்கம்

தஞ்சாவூர்

பதிப்பகம் :

அழகு அச்சகம்

கீழராசவீதி,

தஞ்சாவூர்

தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு எண். 256

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பன்னிரண்டாம் தொகுப்பு

*[வைத்தியப் பகுதி]*

சிறப்புக் கேண்மை பதிப்பாசிரியர்
புலவர். **வி. சொக்கலிங்கம்**
தமிழ்த்துறை (ஓய்வு)
*சரசுவதிமகால் நூலகச் சங்கம்*
**தஞ்சாவூர்**

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**
**சரசுவதிமகால் நூலகச் சங்கம்**

**1988]** **[விலை ரூ. 15-00**

# வெளியிடுவோர் முகவுரை

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பது செயல்" என்பார் திருவள்ளுவர்.

அவ்வாறு நோய்வரலாறு கண்டு அதனைத்தீர்க்கும் முறைகளை கண்டறிந்த அறிவாளர்கள் அவற்றைச் சுவடிகளில் பொறித்து வழங்கியுள்ளனர். அவற்றுள் பல சுவடிகள் உலகப் புகழ் வாய்ந்த நம் சரசுவதி மகாலில் இடம் பெற்றுள்ளன.

இச்சுவடிகளை ஆய்ந்து அவற்றில் பதிக்கப் பெற்றுள்ள மருத்துவ மகத்துவங்களை வெளியுலகிற்கு வழங்கும் பணியினை தற்போது மகால் வேகமாக மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முனைப்பான வெளியீடுகளில் இந்நூல் பன்னிரண்டாம் தொகுதி-யாகும். இதுநாள் வரையில் 504 சுவடிகள் அவற்றிற்கான விளக்கக் குறிப்புகளுடன் எமது நூலக வெளியீடாக பதினொன்று தொகுதிகளில் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஐந்து தொகுதிகள் இலக்கிய விளக்கங்களைக் கொண்டதாகும்.

இப்பன்னிரண்டாம் தொகுதியில் 505 முதல் 666 வரை-யிலான சுவடிகளின் விளக்கத் தொகுதியில் சித்த வைத்திய முறைச் சுவடிகள் மட்டுமின்றி, ஆயுர்வேத வைத்திய முறைச் சுவடிகளும் உள்ளன. மூலிகைகளின் இரசாயன முறைகளைப் பற்றிய சில சுவடிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இது வைத்திய முறைகளுக்கு உதவியாயும் இருக்கும் என்று கருதுகிறேன்.

எமது சரசுவதி மகால் முன்னாள் தமிழாசிரியர் புலவர். வீ. சொக்கலிங்கம் அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமது ஆழ்ந்த புலமையினைத் துணைகொண்டு ஒவ்வொரு ஏட்டிலும் உள்ள செய்தியைத் தெள்ளத்தெளிய ஆய்ந்து உகந்த விளக்கங்-களுடன் இத்தொகுதியினைப் பதிப்பித்து தமக்கும், நூலகத்-திற்கும் பெருமை சேர்த்துள்ளார். அவர் தம் பணி போற்றுதற் குரியது.

இப்பன்னிரண்டாம் தொகுதி வெளிவரப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கு என்றென்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம். இதுபோன்ற நல்ல நூல்கள் விரைவில் வெளிவர ஆர்வத்துடன் பணியாற்றி வரும் நிர்வாக அதிகாரி திரு. சீ. கிருஷ்ணன் அவர்களுக்கும் நூலக வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் எம்.ஏ.,பி.லிப்.எஸ்சி., அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். நன்முறையில் அச்சிட்டுத் தந்த அழகு அச்சகத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருமைபெறத் தக்க அரிய பெரிய ஓலைச்சுவடிகள், எங்கெங்கோ முடங்கிக் கிடக்கின்றன. அவை சரசுவதி மகால் நூலகத்தை அடைந்தால் இதுபோன்ற பதிப்பாக மலர்ந்து மக்கட்குப் பெரும் பயன் நல்கும் என்பதால் எவ்வகைச் சுவடியாயினும் அவற்றை சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பர்களும், பெரியோர்களும் வழங்கி மகிழ முன்வரவேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மா. இராமு இ.ஆ.ப.,**
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலக சங்கம்

தஞ்சாவூர்
14-3-1988

# முகவுரை

"நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்" என்று கேட்டார் வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார். நோயின் கொடுமை அவ்வளவு வலிது. 'நோயின்மை' என்பது பதினாறு வகையான செல்வங்களுள் ஒன்று, அதனால் நோயின்றி வாழ்தலே சிறப்பாகும். எவ்வளவுதான் செல்வம் பெற்றிருந்தாலும், படித்திருந்தாலும், உடல் நலம் (ஆரோக்கியம்) இல்லையானால், அவன் நல்வாழ்வு வாழ இயலாது.

ஊழ்வினைப் பயனாலும், தீயொழுக்கத்தாலும், தூய்மையின்மையாலும், தீமை பயப்பவற்றைத் தெரிந்திருந்தும் உண்பதாலும் பலவற்றாலும் நோய்கள் வரும். இவற்றைப் போக்கும் வழிகளைச் சித்தர்களும், முனிவர்களும் அறிஞர்களும் கண்டறிந்தனர். தம் அனுபவத்தினைச் சொல்லியும், ஏட்டில் எழுதியும், வழிவழியாகப் பழக்கியும் வந்தனர். அவ்வாறு எழுதிவைக்கப்பட்ட பனை ஓலைச்சுவடிகள் பல, அவற்றுள் மிகுதியான சுவடிகள், தஞ்சை சரசுவதி மகாலில் இடம்பெற்றுள்ளன.

இவற்றுள், 504 சுவடிகள், 3, 4, 5, 8, 9, 11 ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1, 2, 6, 7, 10 ஆகிய தொகுதிகள் இலக்கியம்.

தற்போது இந்த பனிரெண்டாவது தொகுப்பு வெளிவருகின்றது. இதில், சுவடி எண் 505 முதல் 666 வரை, (D / எண் 1101—1300) உள்ள சுவடிகளின் விளக்கங்கள் அடங்கியுள்ளன. இதனைத் தொடர்ந்தும் தொகுதிகள் வெளிவர உள்ளன.

அரிய பெரிய செய்திகளை உள்ளடக்கிக்கொண்டிருக்கும் இப் பனிரெண்டாவது தொகுப்புதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த எமது மகால் முன்னாள் இயக்குனரும் முன்னாள் மாவட்ட ஆட்சியருமான திருவாளர் **து. இரா. இராமசாமி** இ. ஆ. ப. அவர்கட்கும், தற்போதைய இயக்குனரும் மாவட்ட ஆட்சியருமான

திருவாளர் **மா. இராமு** இ. ஆ ப. அவர்கட்கும், இதனைப் பதிப்பிக்கப்பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், நூலகநிருவாக அதிகாரி பொறுப்பு திருவாளர் அ, பஞ்சநாதன் எம். ஏ. பி. லிப் சி. அவர்கட்கும், நன் முறையில் அச்சிட்டுத்தந்த அழகு அச்சகத்தாருக்கும், எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலகத் தமிழ் மருத்துவப் பிரிவில். பழனி, ஆர். எம். கே. வேலுச்சாமி, சித்த வைத்திய சாலை, சித்தர் ஆர். எம். கே. சிவசுப்பிரமணிய ஓம் முதலானவர்களிடமிருந்து மருத்துவச்சுவடிகள் அன்பளிப்பாக வந்து சேர்ந்துள்ளன. இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. சுவடிகளைப் பராமரிப்பது மிகவும் கடினம்.

ஆகவே, தங்கள் தங்களிடமுள்ள சுவடிகளை எம்மிடம் தந்து தங்கள் பெயரை நிலைநாட்டிப் புகழடைவதோடு அவைகள் மற்றவர்கட்கும் பயனடையச் செய்வார்கள் என நம்புகிறேன்.

இதில் காணும் குற்றங் களைந்து, குணம் பொருந்தி வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,

புலவர் **வீ. சொக்கலிங்கம்,**
தமிழாசிரியர் (ஓய்வு)
**சரசுவதி மகால் நூலகம்.**

தஞ்சாவூர்
**20—2—87**

# பொருளடக்கம்.


| நூற்பெயர் : | D. எண். |
|---|---|
| அகத்தியருக்கு உபதேசம் பண்ணின சூத்திரம் | 1193 |
| அகத்தியர்-3-ம் காண்டம்-சாலம்-300 | 1140 |
| அகத்தியர்-8 | 1114 |
| அகத்தியர் அடுக்குநிலை போதகம்-10 | 1111 |
| அகத்தியர் அட்டவணை சாத்திரம் | 1104 |
| அகத்தியர் அட்டாங்க தண்டக பட்சனி-81 | 1153 |
| அகத்தியர் எந்திர சிந்தாமணி | 1107 |
| அகத்தியர் கரும காண்டம்-1200 | 1187 |
| அகத்தியர் கரும சூத்திரம்-300 | 1210 |
| அகத்தியர் கர்ம நிவர்த்தி-300 (நடுக்காண்டம்) | 1167 |
| அகத்தியர் கும்மி | 1211 |
| அகத்தியர் குரு-105-க்கு சூட்சம் | 1208 |
| அகத்தியர் குழம்பு | 1212,1213 |
| அகத்தியர் சாலம் -300-3-ம் காண்டம் | 1140 |
| அகத்தியர் சூத்திரம் | 1190 |
| அகத்தியர் சூத்திரம் -16 | 1191 |
| அகத்தியர் சூத்திரம் -35 (36) | 1196 |
| அகத்தியர் சூத்திரம் -48 | 1202 |
| அகததியர் சூத்திரம்- 50 | 1195 |
| அகத்தியர் சூத்திரம்-150 | 1113 |
| அகத்தியர் சூத்திரம்- 205 | 1198 |
| அகத்தியர் செயசூத நூல் | 1189 |
| அகத்தியர் சௌமிய சாகாம் - 1000 | 1298 |
| அகத்தியர் ஞானகாவியம்-பஞ்சநாதாக்கள் உபதேசம் | 1300 |
| அகத்தியர் தண்டகம் | 1184 |
| அகத்தியர் நடுக்காண்டம்-கர்மநிவர்த்தி-300 | 1167 |
| அகத்தியா-நூல் | 1115 |
| அகத்தியர் பச்சை வெட்டு-16 | 1112 |
| அகத்தியர் பட்சணி | 1205,1206 |
| அகத்தியர் பன்னிரண்டு லட்சத்துக்கு சூத்திரம்-1200 | 1168 |
| அகத்தியர் பின்னூல்-80 | 1201 |
| அகத்தியர் பெருநூல் -500 | 1101 |
| அகத்தியர் பெருநூல் - நாலாங்காண்டம் மாந்திரீகம்-300 | 1101 |
| அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் | 1176 |

அகத்தியர் வல்லாதி-600 1209
அகத்தியர் வாகடம் நஞ்சுதின்றபேருக்கு 1296
அகத்தியர் வைத்தியக் கோவை-1000 1207
அகத்தியர் வைத்தியம்-80 1203
அகத்தியர் வைத்தியம் 110 1200
அகத்தியர் வைத்தியம் பின்னூல்-80 1204
அகராதி நிகண்டு - தன்வந்திரி 1292
அடுக்குநிலை—நயன சாத்திரம் 1251
அடுக்குநிலை போதகம்-10- அகத்தியர் 1111
அட்டவணை சாத்திரம் - அகத்தியர் 1104
அட்டாங்க தண்டக பட்சணி - 81 அகத்தியர் 1153
அட்டாங்க பட்சணி - இராமதேவர் 1285
அய்யனார் சித்தர் முறை 1214
அனுபான வைத்தியர்-205 1169
அனுபோக வைத்தியம் 1146

ஆ

ஆயுர்வேத வைத்தியம் 1215

இ

இராச சண்டேசுரன் 1231
இராமதேவர்-500 1284
இராமதேவர் அட்டாங்க பட்சணி 1285
இராமதேவர் சாத்திரம்-500 1284
இராமதேவர் சூத்திரம்-500 1290
இராமதேவர் பட்சணி 1218, 1219, 1220
இராமதேவர் பூசாவிதி, சிவயோகம்-200 1216
இராமதேவர் வசியம் சூத்திரம் 1217

எ

எந்திர சிந்தாமணி - அகத்தியர் 1107
எலிகடி விஷத்துக்கு மருந்தும் குணமும் 1222

ஔ

ஔஷத கக்கிஷ்ட படலம் 1223

க

கடைக்காண்ட சூத்திரம்—கொங்கணர் 1282
கடைக்காண்ட சூத்திரம் - 11-கொங்கணர் 1229
கந்தரசஷ்டி கவசம் [இலக்கியம்] 1118

கம்பளிச்சட்டை கைலாசநாதர் சூத்திரம் 1164
கருக்கடை—பிரம்மமுனி வைத்தியம் 1137
கருக்கிடை சூத்திரம் 200...தன்வந்திரி 1171
கருக்கிடை சூத்திரம் 384-பிரம்மமுனி 1257
கருக்கொண்ட பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் 1166
கருமகாண்டம் - 1200 அகத்தியர் 1187
கரும சூத்திரம்...300 அகத்தியர் 1210
கருவூரார் 300 நொண்டி 1154
கருவூரார் நொண்டி 300 1154
கருவூரார் நொண்டி நாடகம் 1224, 1225
கருவூரார் பலதிரட்டு 1105
கருவூரார் பூசாவிதி 1286
கலர்பகத்தில் நிகண்டு 1293
கலைக்கியானம்-200-கொங்கணர் 1165
கர்மநிவர்த்தி-300 அகத்தியர் 1167
கஸ்தூரி 1230

கா

காசவகை 96க்கும் சௌபாக்கிய சுண்டி 1226

கு

கும்பமுனி சித்த வல்லாதி 1297
கும்மி—அகத்தியர் 1211
குருமுனி வாக்கியம்-பூசாவிதி 1291

கை

கைலாசச் சட்டைமுனி நிகண்டு 1227
கைலாசநாதர் சூத்திரம்—கம்பளிச்சட்டை 1164

கொ

கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம் 1232
கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம் 11 1229
கொங்கணர் கடைக்காண்டம் ... 500 1109, 1162
கொங்கணர் கலைக்கியானம்—200 1165
கொங்கணர் சரக்கு வைப்பு—100 1228
கொங்கணர் தண்டகம் 1185
கொங்கணர் முதற்காண்டம்—500 1161

கோ

கோரக்கர் நொண்டி சிந்து—105 1134

கௌ

கௌமதி வைத்தியம்-400 1233

### ச


சடாட்சர கவசம் - வாலசண்முக [இலக்கியம்] 1119
சட்டைநாதர் வகாரசூத்திரம்—25 1136
சட்டைநாதர் வகாரம்...200 1239
சட்டைமுனி நிகண்டு - கைலாச 1227
சட்டை முனியார் முப்பு-50 1135
சண்டேசுரன் - இராச 1231
சண்முக கவசம்-வாலசடாட்சர 1119
சத்தியாரூடம் 1234
சரக்குக்கட்டு-பலதிரட்டு 1241
சரக்கு வைப்பு 100 - கொங்கணர் 1228
சரக்கு வைப்பு 800 - மச்சமுனி 1292
சலக்கழிச்சலுக்கு வாகடம் 1240


### சி


சிதம்பரபட்சணி - தட்சிணாமூர்த்தி 1221
சித்தர் சிந்தூர முறை - அய்யனார் 1214
சித்த வல்லாதி - கும்பமுனி 1297
சித்திராரூட நொண்டி 1236
சித்திராரூட நொண்டிச் சிந்து 1237
சித்திராரூடம் 1235
சிந்தூர முறை - அய்யனார் சித்தர் 1214
சிவயோகம் 200 - இராமதேவர் 1216


### சு


சுந்தரமூர்த்தி - 36 1186
சுந்தரானந்தர் அதீதம் 1243
சுந்தரானந்தர் கேசரி 1102
சுந்தரானந்தர் சூத்திரம் - 36 1242


### சூ


சூத நூல் - அகத்தியர் 1189
சூதமுனிக்கு நந்தீசர் உபதேசித்த சூத்திரம் - 110 1197
சூத்திரம் 11 - கொங்கணர் 1229
சூத்திரம் 16 - அகத்தியர் 1191
சூத்திரம் 25 - சட்டைநாதர் 1139
சூததிரம் 35 - (36) - அகத்தியர் 1196
சூத்திரம் 36- சுந்தரானந்தர் 1242

சூத்திரம் - 48 திருநடன 1249
சூத்திரம் - 50 அகத்தியர் 1195
சூத்திரம் 50-ரோமரிஷி 1270
சூத்திரம் - 100 ரோமரிஷி 1269
சூத்திரம் – 110 நந்தீசர் சூதமுனிக்கு உபதேசித்தது 1197
சூத்திரம் 150 அகத்தியர் 1113
சூத்திரம்-200 தன்வந்திரி கருக்கிடை 1171
சூத்திரம் - 205 – அகத்தியர் 1198
சூத்திரம் 300-அகத்தியர் 1210
சூத்திரம் 384- பிரம்மமுனி 1257
சூத்திரம் - 500 இராமதேவர் 1290
சூத்திரம் - 1200 அகத்தியர் 1168
சூத்திரம் – 1200க்குச் சுருக்கம்-65-தட்சிணாமூர்த்தி 1244
சூத்திரம் - அகத்தியருக்கு உபதேசம் பண்ணினது 1193
சூத்திரம் - அகத்தியர் 1190
சூத்திரம் - இராமதேவர் 1217
சூத்திரம் – கம்பளிச்சட்டை கைலாசநாதர் 1164

**செ**

செய சூத நூல்-அகத்தியர் 1189

**சௌ**

சௌபாக்ய சுண்டி-காசத்துக்கு 1226
சௌமியசாகரம் - 1000 அகத்தியர் 1298

**ஞா**

ஞானகாவியம் அகத்தியர்— 1300
ஞானகாவியம்-1000-தட்சிணாமூர்த்தி 1299

**த**

தட்சிணாமூர்த்தி-205 1163
தட்சிணாமூர்த்திகாவியம்-100 வாக்கியம் 1143
தட்சிணாமூர்த்தி கேசரி – 50 1288
தட்சிணாமூர்த்தி சிதம்பரபட்சணி 1221
தட்சிணாமூர்த்தி சூத்திரம் - 1200 க்குச் சுருக்கம் - 65 1244
தட்சிணாமூர்த்தி ஞானகாவியம்-1000 1299
தட்சிணாமூர்த்தி ரசகுளிகை - 14 1245
தட்சிணாமூர்த்தி ரத்தினச்சுருக்கம் 1129
தட்சிணாமூர்த்தி வாக்கிய காவியம் 1000 1143
தண்டக பட்சணி - 81 அகத்தியர் 1153

தத்துவக்கட்டளை 1253
தன்வந்திரி கருக்கிடை சூத்திரம்—200 1171
தன்வந்திரி சித்தர் அகராதி நிகண்டு 1292
தன்வந்திரி தாது நிதானம் 1247
தன்வந்திரி வாகடம்—நஞ்சுதின்றபேருக்கு 1295
தன்வந்திரி வைத்தியம்—500 1246

**தா**

தாது நிதானம்—தன்வந்திரி 1247

**தி**

திரட்டு வாகடம் 1248
திருநடனசூத்திரம்—48 1249
திருமத்திரம்—31 1174
திருமந்திரம்—வைத்தியம் 1172
திருமூலர் தண்டகம் 1183
திருமூலர் பாடல் 1173

**தே**

தேரையர் வாகடசாத்திரம் 1144
தேரையர் வைத்தியம்—1000 1287
தேவியாரூடம் 1238

**ந**

நஞ்சுதின்றபேருக்கு அகத்தியர் வாகடம் 1236
நஞ்சுதின்றபேருக்கு தன்வந்திரி வாகடம் 1295
நந்தீசர் சூதமுனிக்கு உபதேசித்த சூத்திரம்—110 1197
நயன சாத்திரம்..அடுக்குநிலை 1251
நயனவிதி வாகடம் 1250

**நா**

நாகக் கட்டு 1254

**நி**

நிகண்டு—சட்டைமுனி 1227
நிகண்டு தன்வந்திரி 1292
நிகண்டு பல கலம்பகத்தில் 1293
நிகண்டு வாகடம் 1294

**நொ**

நொண்டி—கருவூரார் 1224. 1225
நொண்டிச்சிந்து...105—கோரக்கர் 1134
நொண்டிச்சிந்து—சித்திராரூடம் 1237

ப

பச்சைவெட்டு –16 அகத்தியர் 1112
பஞ்சநாதாக்கள் உபதேசம் 1300
பட்சணி இராமதேவர் 1218, 1219, 1220
பட்சணி தட்சிணாமூர்த்தி 1221
பரப்பிரம்மமூர்த்தி வயிரவ சாமியாருக்கு அருளியது 1199
பலகலம்பகத்தில் நிகண்டு 1293
பலதிரட்டு—100புலிப்பாணி 1260
பலதிரட்டு — கருவூரார் 1105
பலதிரட்டு — சரக்குக் கட்டு 1241
பலதிரட்டு -- புலிப்பாணி --முப்பு முறை 1149
பலவகை வைத்தியம் 1148
பன்னிரண்டு லட்சத்துக்கு சூத்திரம் 1200 அகத்தியர் 1168

பி

பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம்—38¼ 1257
பிரம்மமுனிபாடல்—50 1255 1256
பிரம்மமுனி வைத்தியம் கருக்கிடை 1137
பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் 1166
பிள்ளையுண்டான பெண்களுக்கு முதலியன 1130

பு

புண்ணாக்கீசர் பெருநூல்—800 1258
புலத்தியர் வைத்தியம் 1259
புலிப்பாணி ஜாலம்—200 1142
புலிப்பாணி துருசுச்சுன்னம் 1103
புலிப்பாணி பலதிரட்டு—200 1260
புலிப்பாணி பலதிரட்டு—முப்புமுறை 1149

பூ

பூசாவிதி—40—போகர் 1289
பூசாவிதி—200—இராமதேவர் 1216
பூசாவிதி—கருவூரார் 1286
பூசாவதி –குருமுனிவாக்கியம் 1291
பூசாவிதி—52—போகநாதர் 1106
பூபதி வைத்தியம் 1261

பெ

பெண்களுக்கு பிள்ளையுண்டான (மருந்து முதலியன] 1130
பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் 1166
பெருநூல்—800—புண்ணாக்கீசர் 1258

**போ**

போகநாயனுர் சுருக்க வைப்புமுறை-25 1108
போகநாயனுர் பூசாவிதி—52 1106
போகர் எழுநூற்றுத்திரட்டு 1155
போகர் சுவாமிகள் பூசாவிதி—40 1289

**ம**

மச்சமுனி சரக்குவைப்பு—800 1262

**மா**

மாதரிச் சுருக்கம் 1252
மாந்திரீகம் 1101

**மி**

மிக்கேல் ஞானியார் ஆச்சரியம்-வைத்தியத்திரட்டு 1179

**மு**

முப்பு—50—சட்டைமுனியார் 1135
முப்புமுறை—புலிப்பாணி பலதிரட்டு 1149

**மூ**

மூலிகை கக்கிஷம் 1263
மூலிகை வகை 1264
மூலிகை வண்ணம் 1265

**மே**

மேகவாகடம் 1271

**ர**

ரசகுளிகை—14—தட்சிணுமூர்த்தி 1245

**ரெ**

ரெத்தினச்சுருக்கம்—அகத்தியர் 1176
ரெத்தினச்சுருக்கம்—தட்சிணுமூர்த்தி 1129

**ரோ**

ரோமரிஷி—100 1122, 1138
ரோமரிஷி—500 1141, 1266
ரோமரிஷி சுருக்கம்—16 1267, 1268
ரோமரிஷி சூத்திரம் — 100 1269
ரோமரிஷி வாதசூத்திரம்—50 1270

**லி**

லிங்கக்கட்டு 1272

**லோ**

லோகபற்பம்—வைத்தியத்திரட்டு 1170

**வ**

வகார சூத்திரம்...25..சட்டைநாதர் 1139
வகாரம்—200 சட்டைநாதர் 1239
வசியம் சூத்திரம்...இராமதேவர் 1217
வயிரவ சாமியாருக்கு பரப்பிரம்மமூர்த்தி அருளியது 1199
வவல்லா—கும்பமுனி 1297

**வா**

வாகட சாத்திரம்..தேரையர் 1144
வாகடச்சுவடி 1127
வாகடநிகண்டு 1294
வாகடம்—அகத்தியர் 1296
வாகடம்—சலச்சுழிச்சலுக்கு 1240
வாகடம்—தன்வந்திரி 1295
வாகடம்—பாடல்—40 1145
வாதசூத்திரம்—50—ரோமரிஷி 1270
வாதபித்தகுணமருந்து 1145
வாலசண்முக சடாட்சர கவசம் (இலக்கியம்) 1119

**வி**

விஷக்கடி மந்திரம் 1151
விஷத்துக்கு மருந்தும் குணமும்-எலிக்கடி 1222
விஷப்பாடம் 1116

**வை**

வைத்தியக் கருக்கடை—பிரம்மமுனி 1137
வைத்தியக்கோவை—1000—அகத்தியர் 1207
வைத்தியசாத்திரம் 1152
வைத்திய சிந்தாமணி 1150, 1177
வைத்தியத்திரட்டு 1110, 1117, 1120, 1123, 1124, 1125
1126, 1128, 1131, 1132, 1133, 1139
1147, 1156, 1157, 1158, 1159, 1160,
1170, 1175, 1178, 1179, 1180, 1181
1182, 1188, 1192, 1194, 1273, 1274
1275, 1276, 1277, 1278, 1279, 1280
1281, 1282

| | |
|---|---|
| வைத்திய நூல் | 1121 |
| வைத்தியம் | 1283 |
| வைத்தியம்—80—அகத்தியர் | 1203, 1204 |
| வைத்தியம்...—110—அகத்தியர் | 1200 |
| வைத்தியம்—205 அனுபான | 1169 |
| வைத்தியம் . 400...கௌமதி | 1233 |
| வைத்தியம்...500... தன்வந்தரி | 1246 |
| வைத்தியம் . . 1000...தேரையர் | 1287 |
| வைத்தியம்...ஆயுர்வேதம் | 1215 |
| வைத்தியம்...திருமந்திரம் | 1172 |
| வைத்தியம்...பலவகை | 1148 |
| வைத்தியம்...புலத்தியர் | 1259 |
| வைத்தியம்...பூபதி | 1261 |
| வைப்புமுறை சுருக்கம்...25...போகநாயனர் | 1108 |

வரிசை எண். 1101 சுவடி எண். 505

# அகத்தியர் பெருநூல் - நாலாங் காண்டம்

## மாந்திரீகம் - முன்னூறு

ஏடுகள் : 62. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6–8 வரிகள். அளவு : 26 × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ்: கி. எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம்**

**காப்பு**

முன்னுரைத்த காண்டவளி முத்தமிள்க்கு மாந்திரிய
மின்னுரைத்த திங்கள்மட்டும் வேணியாய்ப் — பன்னுரைத்த
குஞ்சரமே மூலக் குமார விநயகனார்
கஞ்சமலர்ச் சேவடியே காப்பு. க

**நூல்**

சேவேறு மென்குருவே மாந்த ரீயஞ்
சிகச்சால மாடவுந்தான் செப்ப வேண்டி
மாவேறுங் கருவிடையி விருந்த சோதி
மளவிடைமே லேறிமலர்ப் பாதம் போற்றி

**முடிவு:**

வேண்டியபூ மாந்திரிய நால்வே தத்தால்
விளம்பினேன் வேதாந்த மேவு மேவு
ஆண்டவனே விட்டகுறை யுரைத்தார் சொன்னே
னைந்தத் திரிகாண்ட முன்னூறு முற்றே. எ

மூன்டாங்காண்டம் (?) யெழுதி நிறவேறினது.
முற்றும்

**காலம்:**

இல்லை.

**குறிப்பு :**

இதில் ஏடுகள் 1 முதல் 83 வரை இருப்பினும் 29-32,

40, 42-48, 53-56, 60, 65-68, 78 ஆகிய ஏடுகள் இல்லை. தலைப்பில் நாலாங்காண்டம் என்றும், முடிவில் மூன்றாங்காண்டம் முற்றும்' என்றும் உள்ளது.

இதில் கணபதி மந்திரம், பிரட்டி, சிதம்பர விஞ்சை, பஞ்சபூத வீடு, அச்சரம், சிதம்பரலக்கம், அஷ்டடெகசம், தென் (தேனு) முத்திரை பூசாவிதி, தீட்சாவிதி. அரிமந்திரம், ஏகாச்சரம், சரசுபதி, லெச்சுமி, பிறம்மா விஞ்சை, விஷ்ணு சக்கரம், குறளி பாவை, தீப்பாஞ்சகன்னி, யிந்திரசாலம், பாம்பு வாய் தேரை, பல்லி வாயினால், பச்சை வாய் எலி, கெருடன் வாய் சற்பம், மயில்வாய் சர்ப்பம், கீரி வாய் சற்பம், மணியன் வாய் சற்பம், ஆந்தைவாய் சர்ப்பம், பாம்புவாய் எலி முதலியனஉள்ளன.

---

வரிசை எண். 1102 சுவடி எண். 506(a)

## சுந்தரானந்தர் கேசரி

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு; 5-7 வரிகள். அளவு : 25 · 2½ செ. மீட்டர். எழுத்து : தமிழ் சி எண்ணிக்கை : 300. ஆசிரியர் : சுந்தரானந்தர். முழுமை : குறைபாடுடையது

தொடக்கம் :

ஞயான் துணை

### சுந்தரானந்தகேசரி

கேளப்பா விநோதவித்தை கோடி உண்டு
கேசரிபோல் சுருக்கொண்டு மில்லை யப்பா
மாளப்பா மாண்டவிடன் நெடுத்து வந்து
மனிதற்தான் வணங்காத விடத்தில் போட்டு

முடிவு :

தூளப்பா மேகமென்ற யிருபத் தெட்டும்
தூட்டிப்பாற் அவிபாயிந்த தூடு போலாம்
வேளப்பா யெரித்தசிவன் சொன்ன மாற்கம்
வெட்டவெளி யாகவுந்தான் வீசி னேனே. 55.

சுந்தரானந்தகேசரி முற்றும்.

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் 7-வது ஏடு இல்லை. 10 வது ஏடு முதற்பகுதி முறிந்துள்ளது. மை மூலம் பூமியிலுள்ள புதையல் எடுப்பதற்கு முறை முதலியன சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண். 1103 சுவடி எண். 506 (b)

# புலிப்பாணி துருசுச் சுன்னம்

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 5- 7 வரிகள். அளவு : 25×2½ செ. மீட்டர் எழுத்து : தமிழ். கி எண்ணிக்கை : 60. ஆசிரியர் : புலிப்பாணி. முழுமை : முற்றும்.

**தொடக்கம் :**

குருவே துணை

**துருசுசுன்னம்**

தீருமே துருசுக்கு வேண மட்டும்.
திறமாக ஒருகட்டி வாங்கி வந்து
விறுமே கலசமதில் சுன்ன கல்லை
விதமாக கால்கலசம் உள்ளேப் போட்டு
நீருமே கட்டிதன்னை மேலே வைத்து
நிச்சயமாயி கால்கலசம் கல்லை போட்டு
சீருமே பாசாண மிடிச்ச தண்ணீர்
சிரப்பாகத் தான்தெளிப்பாயி சிருகத் தானே.

**முடிவு :**

போமேநீ அரைத்தகெந்தி தனைவ ளித்து
போங்கமுடன் பீங்கானில் ரவியில் வைக்க
தீமேநீ வெயில்பட்டுத் தயில முண்டாம்
திறமாக சுருக்கிடவே சறக்கெல்லாம் கட்டும்
தாமேனீ ரசத்துக்குத் தாக்கில் மையிந்தா
தயவுடனே சமமாக வங்கம் கட்டும்;
நாமேநீ போகருட கிடாட்சியத் தாலே
நலமாக புலிப்பாணி பாடி னேனே.

**காலம் :** இல்லை

**குறிப்பு :**

இதில், துருசு சுன்னமாகும் முறை முதல் வங்கம் கட்டும் வரை சொல்லப்பட்டுள்ளன.

---

வரிசை எண். 1104 சுவடி எண். 506 (c)

# அகத்தியர் அட்டவணை சாத்திரம்.

ஏடுகள் : 34. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு : 5-7

வரிகள். அளவு : 25 × 2 ½ செ. மீட்டர். எழுத்து ; தமிழ்
கி. எண்ணிக்கை : 450 ஆசிரியர் : அகத்தியர் முழுமை : முற்றற்றது

**தொடக்கம் :**

(22-வது ஏட்டின் பின்பக்கம்)

## பகளம் பஷ்ப்பம்

பகள புத்து வாங்கி, மூசல் ரத்தத்தில் நாலு சாமம் ஊற வையித்து வட்ட ஓட்டில் வைத்து ஏழு சீலைமண் செய்து கெசப்புடம் போட்டு யெடுத்துக் கொள்ளவும்.

## பகள பஸ்ப்பம்

ஷை பகளத்தைப் பசுவின் பாலில் நாலு சாமம் ஊறவைத்து நிழலில் உலர்த்தி நன்றாயுணற்ந்த பின் குண (பூ) டனிச் சாத்தில் நாலு சாமம் ஊறவைத்து (23 வது ஏடு இல்லை)

**முடிவு :**

2¼ விருட்டிக்கு – 9- சீலைமண், புடம் 10
2½ விருட்டிக்கு 10-சீலை மண், புடம் 10
2¾ விருட்டிக்கு 11-சீலை மண், புடம் 10
3 விருட்டிக்கு 12-சீலை மண், புடம் 10

**காலம்:** இல்லை

**குறிப்பு :**

இதில், 23, 31, 33, 36 ஆகிய ஏடுகள் இல்லை. இது 22ம் ஏட்டின் பின் பக்கத்திலிருந்து தொடங்குகிறது.

இதில் பகள பஷ்ப்பம், சிங்கி பஸ்ப்பம், கருவங்கம் சுன்னம் லிங்கக்கட்டு, சூட்சமான சேங்கொட்டை லேகியம், பகள முறை, இந்திராவனிக் குளிகை, வராகத்தின் தயிலமுறை, தாம்பூரச் செந்தூரம், மேகத்தைப் பற்றின சிரங்குக்கு எண்ணெய், வால ரச மிரக்கு கிற முறை, அயச்செம்பு, வெள்வங்கச்சுன்னம். வெங்காரச்செயநீர், செயநீர்முறை, துருசுச்சுன்னம் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 1105 சுவடி எண். 507.

## கருவூரார் பலதிரட்டு

ஏடுகள் : 71. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு :

7–8 வரிகள். அளவு : 27 × 3. செ. மீட்டர். எழுத்து : தமிழ்
கி. எண்ணிக்கை : 1400. ஆசிரியர் : கருவூரார். முழுமை : குறைபாடுடையது.

## தொடக்கம் :

பாடுகிறேன் பலதிரட்டு முடிவை யெல்லாம்
பதராமல் சிதராமல்.................. ..................
பாடுகிறேன் சாஷ்த்திரமுஞ் சூஷ்த்திரமு மாக
பாசையெல்லாம் சுருக்கியே.................. ..................
பாடுகிறேன் குருக்கிடையும் கருக்கிடையும் பாத்து
பராபரத்தி னிலைமுதலாய்ப்
பாடுகிறேன் வேதாந்த முடிவை யெல்லாம்
பராபரைக் கிணேசன்.................. ..................

## முடிவு :

வளங்கினதோர் சாத்திரமுஞ் சூத்திரமும் பாத்து
மைந்தனே பலதிரட்டுச் சூத்திரமே பாத்து
வளங்கினதோர் கருவெல்லாம் யென்னூல் சொன்னேன்
வேறொன்றும் ஒளிப்பில்லை விரும்பிப் பாரு
அளங்கினதோர் மனத்தோடே பலநூலைத் தேடி
அலையாமற் பூசித்து அமுற்தங் கொண்டு
தளங்கினதோர் மனத்தோடே கற்பங் கொண்டு
சாதகமாய் ஏறிவா திரட்டு முற்றே. 299

பலதிரட்டு முகிந்தது முற்றும்.

## காலம் :

ஆங்கில வருடம், மாற்களி மாதம், 27-ம் தேதி வெள்ளிக் கிழமையும், சுக்கிர வாரமும் கூடின சுபதினத்தில், **கருவூர் நாயனார்** பலதிரட்டு முன்னூறு சிதம்பரம் யேடு.

நாகலிங்கம் நெட்டெழுத்து

குருவே துணை

## குறிப்பு :

இதில் 7, 54, 55, 72-வது ஏடுகள் இல்லை. முழுதும் இருக்கிறது. எதுகை ஒன்றுகச் செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன.

இதில் பாசாணக்கட்டு, செம்புசுத்தி, நாகபற்பம், சூதவெள்ளை கட்டுக் கொடி வாலை மையி, நரியிலந்தை மையி, சாரணை மையி, முதலை

மை, ஆடுதின்னுப்பாளை மை, கொடுப்பை மை, அருக்கன் மை, அமுக்கிரு மை. கலியுக சாபங்கழிக்குமிடம், சாத்திரத் தொகுப்பு முதலியன உள்ளன.

வரிசை எண். 1106 சுவடி எண். 508

## போகநாயனுர் பூசாவிதி — 52

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு ; 6-7 வரிகள். அளவு : 26½×3 செ. மீட்டர். எழுத்து ; தமிழ். கி. எண்ணிக்கை : 250. ஆசிரியர் : போகர். முழுமை : முற்றுமுள்ளது.

தொடக்கம் :

### வாலை சக்கரம்

வாலையைப் பூசை செய்து
மவுனத்தின் வழியைப் நோக்கி
காலையா முச்சி யந்தி
கருத்துடன சுழினை நாடி
வேலைகள் பலவும் விட்டு
விதியினை விரைந்து யோசிச்
சாலவே நடுவில் நீர்க்கச்
சச்சுதா னந்த மாமே.

### பாயிரம்

பாரப்பா வாலையுட பூசைவிதி கேளு
பாங்காக நவகோணம் நவதுவா டிட்டு
சேரப்பா யிருவளையம் வாசல் நாலு
சிறப்பாக வீங்காரம் தூளப் போட்டு

முடிவு:

காணப்பா பானத்தின் மகுத்துவங்க ளெல்லாம்
காரணத்தின் குருச்சொல்ல களங்கம் தீத்தேன்
ஞணப்பா ஆண்பிள்ளை யாரெண் டாக்கா
லமுற்தமுண்டு நிலையில்நின்றே னவனே சித்தன்
வீணப்பா மத்தப்பேர் ஞய்வால் தொட்டு
வெள்ளத்தைக் கடப்பேனு நென்ற வெத்தி
பூணப்பா யிந்தனூல் யாருங் காணற்
பொருளருள்சேர் சூத்திரந்தா னந்த முத்தே
போகர் சூத்திர முத்தும்

காலம் : இல்லை.

குறிப்பு :

இதில் வாலை பூசை, யோகம், குளிகை, காடைபுடம், மெஞ்ஞானம் மணிக்குகை, பானத்தின் பேர் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 1107 சுவடி எண். 509

## பெயர்: அகத்தியர் எந்திர சிந்தாமணி

ஏடுகள் : 12 ஏட்டின் நிலைமை; மிகப்பழுது பக்கத்திற்கு : 6-7 வரிகள், அளவு 26½ × 2½ செ.மீட்டர். எழுத்து : தமிழ் கி.எண்ணிக்கை : 200. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

### அகஸ்த்தியர் நாயன் எந்திர சிந்தாமணி நூறு

விநயகன் வட்டம் பிரணவக் கோட்டை வீரித்தெழுதி
அநைகத வீட்டில் அகார யிகார உகாரமிட்டு
பநைக்கம் விடம்பிணி வஞ்சினை பூதப்பி சாதுவிடத்
தனுதுரு னூறு அதிலோதி தண்ணி தலையில் விடே க
யிட்டது சட்டி அறுகோண வீட்டை விரைந்தெழுதி
தொட்டது ஓம்நம சிவாய முன்னிட்டுற சூலமிட்டு
வட்டது வில்லைந்தாக வாதப்போக்கு வைப்பான தெல்லாம்
சுட்டிட சாப மறியாது சொன்னவண்ணஞ் சரியே. உ

முடிவு:

ஆனந்தமுலக் குருவாணை யம்பலத்........................
மணியாணை நவின்றவர்தா
னனந்தத் தாண்டவரை தாண்டவே ...............

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

................................................................................. (எய் அ)

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், சல்லியவேர், மலைதாங்கி, திருமந்திரம், நாள், மதிபால் வஸ்த்து, விஞேதிமுனே, மூலநோய் தொடுகரு, மெளுகு, ஸ்ரீவசியம் இடு, யெதிரி, குளித்தயிலம் முதலியன உள்ளன. ஆணேயிட்ட இடம் முதலியன உள்ளன.

கடைசி இரண்டு ஏடுகள் முறிந்துள்ளன. இதனல் கடைசியில் குறைபாடுடைய செய்யுட்கள் எயள வரை உள்ளன. 9 வது ஏடு இல்லை.

வரிசை எண் ; 1108 சுவடி எண் 501

# போகநாயனுர் சுருக்க வைப்புமுறை — 25

ஏடுகள் : 8 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு 6 வரிகள். அளவு : 27 × 3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்த எண்ணிக்கை : 120. ஆசிரியர் : போகர். முழுமை : குறைபாடுடையது

**தொடக்கம் :**

தந்திமுகத் தங்கரன்ற னருளே போற்றத்
 தாய்எனக்குக் கருணேபுரிந் தளித்த வற்கு
வந்தெனக்கு நந்தீசர் சொன்ன
 வைப்புமுறை யறுபத்தி னலும் பாட
மந்திரமெக் கருவாகுங் குருவாம் பட்டை
 மகத்தான வாசமப்பா அறிய வேணும்
இந்திரரும் நாலுபத்து வாச மஞ்சு
 இயல்வாக கொண்டமுறை இறக்கி டாயே

**முடிவு :**

சுளுகாகு மின்னூல்போல் யொன்று மில்லை
 சொல்ப்பெரிய காலாங்கிஅய்யர் பாதம் போத்தி
சுளுகாகு மின்னூல்தான் யிருப்பத் தஞ்சில்
 சூட்டினேன் கருகுருவு நந் திறமா யப்பா
சுளுகாகும் யென்னூல்தான் கிட்டி னுக்கால்
 சுகமாக எனேப்போலே வாழ்வார் பாரு
சுளுகாகு மிதில்ச்சரக்கு வைப்புக்கு திறவு கோலாம்
 சூஸ்திரமாய் பாடியதோர் காட்சி முற்றே.

*திறவுகோல் சூத்திரம்*

**காலம் .**

இல்லை.

குறிப்பு :

இதில் அபினி வைப்பு, திறவுகோலஞ்சினம், துருசுவைப்பு, முதலியன உள்ளன.

இதில் 2வது ஏடு இல்லை

---

வரிசை எண் : 1109 சுவடி எண் : 511

## கொங்கணர் கடைக்காண்டம் — 500

ஏடுகள் : 155. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு 8—11 வரிகள் அளவு ; 15X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கிரந்த எண்ணிக்கை : 3000. ஆசிரியர் ; கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

அண்டாண்டங் கடந்தபொரு நிற்குணமாய் நின்ற
தளவில்லா நிற்மலமே சூட்சா சூட்சம்
யென்றிசையும் பரந்தநிரஞ் சனமே யாகி
யேகசச்சி தானந்தத் தப்பால் ஞானங்
கொண்டதொரு பூரணமென் னுளுங் காப்பு
குறியான களிப்பாழும் வெளிப்பாழுங் காப்பு
புண்டரிக வேதாந்தஞ் சுழிணை மேவும்
போதமுறும் வேதாந்தங் காப்புத் தானே.

முடிவு :

விட்டகுறை யாலேதான் தேவி தோத்திரம்
விளம்பினேன் பொறிபுலன்கள் கற்ம வாய்வு
பட்டணமா மண்டல —— க ளண்ட பிண்டம்
பரமபத மறிவேண்டிச் சொன்னே னையா
நெஷ்டையெல்லா மொன்றான யேக வஸ்து
..........................................................................
..........................................................................
........................................—.................. ருளக

காலம் :

இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடிஎண் 352 (d)/D 698 போன்றது. பிற்பகுதி மிகவும் பழுதுபட்டுள்ளது.

வரிசை எண் : 1110 சுவடிஎண் : 512 [a]

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 118 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு 3—6 வரிகள். அளவு : 16X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கிரந்த எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : பலர் முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

### சொற மாத்திரை

| | | |
|---|---|---|
| லிங்கம் வராகனெடை | | க |
| தாளகம் | ,, | க |
| வெள்ளைபாஷாணம் | | க |

பசுவின் மோர் விட்டறைத்து பாசிப்பயற் அளவில் மாத்திரை செய்து நிழலில் ஒணத்திவைத்துக்கொள்ளவும். பாஷாணத்தில் 3 தரம், துணி சுத்தி 3 தரம் வண்ணுநிடத்தில் வெள்ளாவியில் வைத்தெடுக்கவும்.

## முடிவு:

அண்ட ஓட்டில் துருசுயிட்டு, அதில் மூங்கில் இலை சாற்விட்டு மேல் ஓடு சீலைமண் செய்து சுண்ணும்புக்காளவாயில் வைத்து சுண்ணும்பு வேகமட்டும் வைத்து யெடுக்க சுண்ணமாகும்,.

## காலம் :

இல்லை.

தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலுக்கா வலங்கைமான் கண்ணடியன்தெரு வ. ப அ. மு. முருகையன் செட்டியார் சுவடி.

## குறிப்பு :

இதில் பெலத்த வாயுவுக்கு மருந்து, பாலகிருஷ்ண விடுவேலை அயவெள்ளை, அனுமாற்மந்திரம், காடிகார சுன்னம். சகலத்துக்கும் பஞ்சகரண மாத்திரை, வயற்றெத்தம், சீதம்போகுதற்கு. கோரோசனை மாத்திரை, பேதி மாத்திரை, கருப்பு பிளாஸ்திரி, வெள்ளை பிளாஸ்திரி, துவர்யெண்ணை, பஞ்சமாரணம், வீட்டுக்கு விழுப்பு காலத்தில் வயத்துவலிக்கு மருந்து, மோகினி வெட்டையின்பேறில் நீற்போகிறதற்கு கியாழம், லிங்ககட்டு, சீனுக்காரம் கட்டுகிறது ஃ பரசமயர் முதலியன உள்ளன.

---

*

திருநெல்லைப் பாசமய சோளரியார் பிள்ளைத்தமிழ் என்ற நூலில் உள்ள கணபதி வணக்கச் செய்யுளாகுமிது.

இந்நூல் எமது சரசுவதி மகாலில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் இச்செய்யுள் இருக்கிறது பதிப்பாசிரியர் புவர். வீ. சொக்கலிங்கம்.

விலை ரூ. 5-00

வரிசை எண். 1111 சுவடி எண், 512 (b)

# அகத்தியர் அடுக்குநிலை போதகம் : 10

ஏடுகள் :10. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திறகு; 4, வரிகள். அளவு : 16×3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

தொடக்கம் :

சிவமயம்

## அகத்திய மகாமுனிவர் அருளி செய்த அறுபத்நாருவது அடுக்குநிலை போதகம்

பாட்டு-10.

சொல்லிறந்த விடமெங்கே முப்பா ழெங்கே
துவாறபா லகரெங்கே முதற்பா ழெங்கே
நல்லசங்கு நதியெங்கே வைகுந்த மெங்கே
நாரணனும் ஆலிலைமேற் படுத்த தெங்கே
அல்லல்படும் ஐம்பூத மொடுக்க மெங்கே
ஆறஞ்சி யிதந்ரெண்டும் முளைத்த தெங்கே
சொல்லவல்லா ருண்டானா லவரை னுமும்
தொழுதுகுரு வெனப்பணிந்து வணங்க லாமே, க

முடிவு :

இருள்பிறந்த விடமெங்கே ஒடுங்கிடமு மெங்கே
யிரண்டுதிருச் சங்குநின்ற விடமு மெங்கே
அருள்பிறந்து பாடிநின்ற விடமு மெங்கே
அருத்தடைத்த வாசலொன்று கண்ட தெங்கே
திருபிறந்த விடமெங்கே ஏழுகெணரு மெங்கே
திருக்கணத்தி லிருக்கின்ற ஏத்த மெங்கே
விருப்பமுட னடுக்குநிலை போத கத்தை
விளம்பினேம் மெய்ஞ்ஞானம் அறிவுள் ளோர்க்கே. 10

அகஸ்த்தியர் அடுக்குநிலை போதகம்
முற்றிற்று.

காலம் :

இல்லை.

குறிப்பு:

ஞானக்கண் முதலானவற்றை அறிந்தவர்களே குரு என்ற கருத்தினை அடுக்கிக் கூறுவது இந்நூல்.

வரிசை எண். 1112. சுவடி எண். 513 (a)

# அகத்தியர் பச்சைவெட்டு - பதினாறு

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 22×3. செ. மீட்டர், எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 75. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

அரிதாரம் பிறதிவி யாகி நிற்கும்
  ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரியே தேயுவு மாகும்
  பின்னுமொரு வெள்ளைதாள் வாய்வு மாகும்
அரிதான லிங்கமடா ஆகாச மாகும்
  அஞ்சுமே பட்சையுடன் ஆட லாகும்
தெரியாத வயித்தியறுக்கு லின்னூ லப்பா
  சித்தறப்பா சொன்னவித்தை சிகத்தில்ப் பாரே. க.

**முடிவு :**

ஏத்திடில் சன்னி தோஷம்
  யெழும்பியே குட்ட ரேகம்
பாத்திடில் பறங்கி தூலை
  பூத்திடில் தீரு மென்றே
பொருள்தனை மூடித்துச் சொன்னார்,

தேவி சகாயம்
மீனைச்சி துணை.
குருவே துணை.

**காலம் :**
இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 185 (b) / D. 292. அகத்தியர் பச்சை பதினாறு போன்றது. ஆயினும் பாடவேறுபாடுகள் மிகுதியும் உள்ளன.

இதில் அரிதாற பற்பம், வெள்ளைப்பாஷாணப் பற்பம், காந்தச் செந்தூரம், ஆவாரங்கரி, லிங்கச்சூரணம், மூலத்திற்கும், பவுத்திரத்திற்கும், புகை, சன்னிக்கு, மூச்சிலிழுக்கும் புகை வகைகள், வல்லாதிச் சூரணம், கெந்தித் தயிலம் முதலியன உள்ளன.

மேலும், இது எமது சுவடி எண். 308 (b) / D. 552. அகத்தியர் பச்சைவெட்டு - 16 போன்றது.

வரிசை எண் 1113 சுவடி எண். 513(b)

# அகத்தியர் சூத்திரம் நூற்றைம்பது

ஏடுகள் : 13. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு : 22×3.செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : அகத்தியர் முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

சீறணி கொன்றை சூடுஞ்
    சிவனிரு பாதம் (போற்றி)
(வாறண முகத்) தோன் பாதம்
    வணங்கியே நூத்தன்ப துக்கும்
பூறணி வாலை ஞான
    சறசோதி பாதம் போத்தி
காறண மான தெஞ்சொல்
    கற்மதூஷ்த் திறங்காற்ப தாமே.

## முடிவு :

போட்டது பத்துளை வயித்தியங்கள் நல்லச் சுத்தி யாச்சு
ஆட்டகல் மதத்தின் சுத்தி அமுரியில் கழுவிப் போடு
நட்டது நல்ல சுத்தி நேற்வாள சுத்திக் கேளு
நாட்டது மேதிச் சாணி காடியில் கரைத்து நன்றே

## காலம் :

இல்லை

## குறிப்பு :

இதில், லிங்கம்சுத்தி, கற்பூரசுத்தி, வெள்ளைசுத்தி, தெவுரிசுத்தி, குதிரைப்பல், பாசாணசுத்தி, மனோசிலைசுத்தி, பவளப்பத்துசுத்தி, அரிதாரசுத்தி, சலாசத்துசுந்தி, கல்நாருசுந்தி, கெருடப்பச்சைசுத்தி, சீனக்காறம் பொறிக்காறம் சுத்தி முதலியன உள்ளன.

இதன் பின்னர் ஒரு ஏட்டில், சிவமயம், திரிச்சித்தம்பலம், வாணி நமஷ்து என்ற தலைப்புடன் வினாயகர் துதிப்பாடல்கள் உள்ளன.

இது, எமது சுவடிஎண் 269(b)/D 483/ 324(b)/D 637 போன்றது பாடவேறுபாடுகள் மிகுதியும் உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. 4 பாடல்கள்களே உள்ளன. எஞ்சியவை இல்லை.

வரிசை எண். 1114 சுவடி எண். 514.

# அகத்தியர்-8

ஏடுகள் : 3 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 17 × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை. 50. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம்

(பாரப்பா) சித்தரெல்லாஞ் சொன்ன மாற்க்கம்
பாங்கான வயித்தியரே யென்னூல் பாரு
வாரப்பா மாந்தமது பிணிகள்க் கெல்லாம்
வகையான தோசமொடு கஷிகள்க் கெல்லாம்
சேரப்பா பதினெட்டுப் பேருங் கூடி
திரமாக கோருவையாய் பாடி னார்கேள்
யாரப்பா யிதைக்குறிக்கி ஒருகுளுகைக் குள்ளே
அப்பனே சிவகுளிகையாய்ப் பாடி னேனே.

## முடிவு :

கேளப்பா கிருமியொடு கஷிகள்க் கெல்லாம்
குருவையாயி நொச்சியிலைச் சாத்தி லோடும்
வாளப்பா (சயி)னியொடு யிரும லுக்கு
மைந்தனே வேலியுட சாத்தில் போகும்
வேளப்பா கறப்பனுக் கெல்லாந் தானும்
விதமான அமுக்கிரு யிலையில் போகும்
ஆளப்பா கு(ழ)ந்தைக்கி வந்த நோய்கள்
அப்பனே சிவகுளிகை அடக்க (முற்றே)

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இது, எமது சுவடி எண். 248 (g) D 438 அகத்தியர் எட்டு : என்ற சுவடியின் வேறுபட்டது மேலும் எமது சுவடி எண் 347 (m)/D 688 அகத்தியர் சூத்திரம் 8-ன் வேறுபட்டது

இதில் சிவகுளிகை பற்றிப் பேசப்படுகிறது.

வரிசை எண். 1115. சுவடி எண். 515,

## அகத்தியர் நூல்.

ஏடுகள் : 3 ஏட்டின் நிலைமை : சிறிது பழுதுபட்டது: பக்கத்திற்கு : 9-11 வரிகள். அளவு : $18\frac{1}{2}$X4. செ. மீட்டர். எழுத்து தமிழ். கி. எண்ணிக்கை : 75. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும் என்று இல்லை.

தொடக்கம் :

### சூ 500 லுள்ள அமுதாதி சூரணம்.

அமுக்கிருக் கிளங்கு பாலில்ச் சமைத்து உலத்தி யிடித்துத் தூள்ப்பண்ணி வஸ்த்திர காயம்பண்ணி பலம் 5. சீனி பலம் $2\frac{1}{2}$. திரிகடுகு சாதிக்காய், சாதிப்பத்திரி

அதிமதுரங் கிரும்பு கடுகுரோகணி, அசமதாகம்
குரோசாணி யோமம் ஆக மருந்து பத்தும் வகைக்கு பலம் $\frac{1}{4}$ அனலில் வெதுப்பித் தூள்ப்பண்ணி வஸ்த்திர காயம் பண்ணி ஆக மூன்று வகையும் ஒன்ருகக் கலந்து வைத்துக் கொண்டு

முடிவு :

பன்னிரெண்டு திங்க ளுண்ணில் தேகம் பொன்னிறம் போ லாகித்
தேகஞ் சிவந்து வேத்துருவ மாகி சகத்திர கரிப்பில முண்டாகும்,
ஆமப்பா கணமதெல்லாந் திண்ணெண்ணுது
ஆச்சரிய மிதன்பெருமை யார்கண் டாரே !

காலம் :

இல்லை.

குறிப்பு

இதில் உடல்பெருக்க, உடல்இளைக்க எலிகடிக்குமருந்து தேளுக்கு மருந்து, பிள்ளையில்லாதாருக்கு முதலான நல்லவைத்திய முறைகள் உள்ளன.

வரிசை எண். 1116 சுவடி எண். 516.

## விஷப்பாடம்

ஏடுகள் ; 7. ஏட்டின் நிலைமை : மிக மிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : $16\times2\frac{1}{4}$ செ, மீட்டர். எழுத்து:

தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : அரியக்கூடவில்லை. முழுமை : முற்றும் என்று இல்லை.

**தொடக்கம் :**

**சுவாமி குருவே.**

அஞ்சு கரத்தனே ஆனை முகத்தனே
இந்து விளம்பிறை போத மகிந்தனை
த(ந)ந்தி முகத்தனை ஞானக் கொழுந்தனை
பொந்தி வயிற்றனைப் போற்றி கொண்டோமே.

**முடிவு :**

எங்கள் நயினர் ... ... ... மெல்லா மாளப்பட்டவள்
என் தாயாரல்லவா ... ... ... தீயா யெரிப்பாள்
சீயிங் கில்லைப் பொய்கண்டத் திற்கறுப் புள்ளோனே !
கருதியே மனதிற் கொண்டேன்
எங்குரு நாதனுணை அங்கொரு வீதமுமில்லை
மஸ்த்தகத்திற் கடித்த விஷம் மட்டிலே யுருளவே
சத்தி விஷ மத்தனையும் இங்கே விஷமில்லையே!

**காலம்**

இல்லை.

**குறிப்பு :**

இதில், நீண்ட ஆசிரியப்பா வடிவில் மந்திரம் அமைந்துள்ளது எழுத்துக்கள் அழகாக உள்ளன. செய்யுள் உருக்கமாக இருக்கிறது.

முதல் மந்திரம் பாடல் முடிந்ததும், தனகடி மந்திரம் என்ற தலைப்பில் பாடல் உள்ளது.

---

வரிசை எண். 1117. சுவடி எண். 517 (a)

## வைத்தியத் திரட்டு.

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : மிக மிகப் பழுது பக்கத்திற்கு : 4-8 வரிகள். அளவு : $19\frac{1}{2} \times 3$. செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 500. ஆசிரியர் : பலர் முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

## விநோத வித்தை (எண்ணெய் மாற)

நீர்முள்ளி வேறும் நாயுருவி வேறும் பொடி பண்ணி
செக்கில் போட்டால் யெண்ணையை மாத்தும்.

## மாத்து

காயி வாள மூவேர் பொடி பண்ணிப் போட்டால்
யெண்ணை வறும்.

## நெருப்பில் நடக்க

சங்கம்வெர் தோலே உருச்சு செறுநீறு வாத்து அரைச்சு
காலிலேபூசி நெருப்பிலே நடந்தால் கால் வேகாது.

**முடிவு :**

குத்து குத்து, கிளி கிளி, கட்டு கட்டு, தூக்கு தூக்கு, மகாண கரை சேரு சேரு, சுடு சுடு, மாரு மாரு, சுவாஹா, மசி வய நமசியநமசிவ நமசிவய, மசிவயந சிவயநம உருது உயரு ○ ப * □ △ இதுகளில்ருயக அடைத்து உரு சேத்து மாரினல் உரு கருவாகி மாரும். தூசை மது மாங்கிழய் தவர

**காலம்:**

இல்லை.

**குறிப்பு :**

இதில் விநோத மந்திரங்கள். வாத சுரத்துக்கு, அதிசார சுரத் துக்கு. சனி, சகல தோஷம், கிரணிக்கி, சகல சுரத்துக்கு, யிருமலுக்கு, விக்கலுக்கு. வில்வாதி லேகியம், யிருமலுக்கு ஆடாதோடைகொளம்பு, புண்ணு மருந்து, உப்புகட்டு, அஞ்சுயெண்ணை தயிலம், மேகத்துக்கு உதிரவேங்கைப்பட்டைத் தயிலம், பாண்டுரோகத்துக்கு, மாட்டு மசாலே, குதிரை மசாலே, சகல தோஷத்துக்கும் சிந்தாமணிக் கொளம்பு, பஞ் சாஷறம் மாற, முதலியன உள்ளன.

இதன் பின் 48-வது ஏடு, பஷ்சி சாத்திரம் என்றுளது. 'வெள்ளியும் திங்களும் விரும்பும் புதன்' என்று தொடங்கி, உண்டு, நடந்து உலகாண்டே தூங்கி சாம ருத்திரிக்கு உண்டு உலகாண்டு, என்று முடிகிறது. 7 வரிகளே' உள்ளன.

வரிசை எண். 1118. சுவடி எண். 517 (h)

## கந்தர் சஷ்ட்டி கவசம்.

ஏடுகள் : 8 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-9 வரிகள். அளவு : 19X1½3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150. ஆசிரியர் : தேவருய சுவாமி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சஷ்ட்டியை நோக்க சரஅண பவனர்
சிஷ்ட்டிருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம்மி ரெண்டும் பன்மணி சதங்கை
கீத' மாட கிண்கிணி யாட

**முடிவு :**

படம்பா போத்தி கந்தா போத்தி
வெத்தி யுனையும் வேலா போத்தி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் ... வேலா மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முக சரணம்
சரணம் சரணம் முருக சரணம்

(இதன்பின், அரி நமொ நாருயணய............வாலை முறுகர் வருக........வருக......... என்றுளது) (அதன்பின் வால சண்முக சடாட்சர கவச எந்திரம் என்று தலைப்பிடப்பட்ட" சதுர்க்கோணத்தில் நாலு வாசல்......... சுப்பிரமணிய தேவாயா வா வா சுவாஹா உரு லெஷசம்' என்ற ஒரு ஏடும் காணப்படுகிறது)

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது முருகன் துதியாகும். இது அச்சிடப்பட்டுள்ளது. இது எமது தமிழ் இலக்கியச் சுவடி எண். 819/D. 1290, 932 (b)/ D. 1339 போன்றது.

oooooooooooo

வரிசை எண். 1119 சுவடி எண். 517 (c)

## வால சண்முக சடாட்சர கவசம்.

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 19½ × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : (?) முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

சம்புமுனி குறுமுனி வேதமுனி போதமுனி
சாமி அகத்தீஷ் பாறு
சரிகையும் கிரிகையும் யோகமும் ஞானமும்
சகலகலைக் காணபரனே
கும்பமுனி கவசமுனி ஆராறு வரைகாண்டு
குட்டமா முனியே வாலை
கோமளம ஞேன்மணிதாய் பாலனையே நாடியுடன்
கூடியாடும் பரனே

முடிவு :

பகர் செந்திலம் பதிநாயகா ஸ்ரீ ஓம் சரவணபவ நமா
அரகரு சிவசுப்பிரமணிய தேவே
குலுங்கு சடையும் நவமணி மகுடமும்
குழையிடு தோடுகுண் டலங்களும்............விளிலுஞ்
சீவனுதவி____________ மும் ங்கு மாரு.....................
புந்திறுவயறு முந்தித்த.....................

காலம் :

இல்லை.

குறிப்பு :

சுப்பிரமணியதேவா என்ற ஈற்றினைகொண்டு முடிகிறது. இதுவும் முருகன் தோத்திரமாகும்.

வரிசை எண். 1120 சுவடி எண். 518

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 19. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 5-7 வரிகள். அளவு : $16 X 2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

### நீற்கட்டு உடைக்க

முள்ளி தண்டு, நீர் முள்ளி தண்டு, நெரிஞ்சி வேர், செறுக்கீரைவேர், ஆனை அருடு, பெறஞ்சிரகம், மு ள கு இதுகளைக் கொண்டு வந்து கசாயம் போட்டு சாப்பிட்டால் நீரு [உ] டைக்கும்.

முடிவு :

யிது யெந்த வியாதிக்கி குடுக்கிற தென்ருல் மேகசூலை மேக வாயிவு யிதுகளுக்கு பன வெல்லம் சுக்கு அனுபானம். புளிதன்ளுபடி சன்னிக்கி தேன் அனுமானம் சுறத்துக்கு தேன் சுக்கு அனுபானம் பசி தீபனத்துக்கு நெயி அனுபானம்.

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில், நீர்கட்டு உடைக்க, வயத்துள்ள திருணிக்கும்,தரளகச் சூரணம், செறத்துக்கு, மயற்மாணிக்கம், லிங்க செந்தூரம், கறப்பான் கட்டுக்கு யெண்ணை, வெடியுப்பு, பகல்பஷ்ப்பம், லிங்க செந்தூரம் புள்ளைகள்யெண்ணை, புண்ணுக்கு, பித்தசூடு, மஞ்சக்காமாலைக்கு மருந்தும் தயிலமும் வெடியுப்புச்சுன்னம், வயத்துவலிக்கு வம்மகட்டிக், குடுக்கிறது, சுறந்துக்கு கஷாயம், தாளக செந்தூரம், தாளகபறப்பம் லிங்கத்தங்க செந்தூரம் முதலியன உள்ளன.

வரிசை எண் 1121 சுவடி எண் 519

## வைத்திய நூல்

ஏடுகள் 11. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : 13×3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150 ஆசிரியர் : (?) முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

செய்திட்ட வாதிமகன் வைத்திய னுல்
சேருசுர சரக்குகள்ளாம் கட்டக் கேளு
வைத்திட்ட அடிமுடியின் வெடிநீர் தன்னல்
மடக்கியே மூன்றுதிரம் வயற்றநீ ருறதனல்
குத்திட்ட யுமியோடில்த் தேய்த்து வாட்ட
யுறவான சரக்கெல்லாம் கட்டிப் போகும்
கைத்திட்டஞ் செவ்வாது காரங் கூட்டி
கைமுறையா [யுரு]க்கிடவே புகைந்து டாதே. க

**முடிவு :**

ஊட்டுவா யவள்திருச் செம்பவழ வாய்கே
உண்டரு ளென்ருள்பு லித்துநீ வேருகி
யூட்டுமனம் பொதிப்பதி பாய்ந்தி டாமல்ப்
புண்ணியகா லெட்சுமியைப் பூசிப் பூசி
நா[ட்]டியே பூசிதெட்ட மாய்க்கடங் கொடுக்கு
முமையாள் வைய்த்த சேஷமுன்
பாத்திரந்தான் கொடுத்து வாங்கே 22

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் பற்பம் முதலான மருத்துவச் செய்திகள் சொல்லப்படுகின்றன. தலைப்புக்கள் இல்லை.

வரிசை எண். 1122 சுவடி எண். 520.

# ரோமரிஷி - நூறு

ஏடுகள் : 32. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள், அளவு: 23x2 செ.மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

மூலவட்டக் குருபாதந் தானே காப்பு
முத்திக்கி வித்தான முதலே காப்பு
மேலவட்ட மானபர பிறமம் காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு
காலவட்டத் தங்கிமதி அமுற்தப் பாலைக்
கண்டுபசி யாத்திமனக் கவடு நீக்கி
ஞாலவட்டச் சித்தாகும் பெரியோர் பாதம்
நம்மனதால் ரோமனென்ற பேர்ஞாயென் றுனே க

## முடிவு :

உப்பல்லோ பிண்டத்திற் சேர்ந்த போது
உடலுயிரு மொன்றாகித் தண்ணீ ராச்சு
அப்பல்லோ முப்பூவுக் காணி யாணி
அதைவிட்டால் கட்டாது வழலை மாற்கம்
செப்பல்லோ பந்துக்கு மூட லாச்சு
தீட்சணமா மிந்தனூல்த் தெளிவோ ரெ(ர)ம்ப
முப்பொருளு மொன்றாக நின்ற சோதி
மூலவட்டக் குருவாலென் மொளிதான் முற்றே. 100

## காலம் :

இல்லை

## குறிப்பு :

இது எமது சுவடி எண் 272/D.488. 'ரோமரிஷி சூத்திரம் நூறு' போன்றது. அதற்கும் இதற்கும் பாடவேறுபாடுகள் ஏராளமாக உள்ளன.

இதில் வழலை, சிங்கிகுரு, தாம்புர பஸ்பம், தங்கபஸ்பம், வெள்ளி அய பஸ்பம், காந்த பஸ்பம், கருவங்க பஸ்பம், வெள்ளிவங்க பஸ்பம், நாக பஸ்பம், திரு பஸ்பம், வெங்கலம் பித்தளை பஸ்பம், அப்பிரகம் நிமிளை பஸ்பம், ரத்த பஸ்பம், சாதிலிங்க பஸ்பம், லிங்க பஸ்பம்.

கெந்தகச் சுன்னம், ரசமணி முதலான தலைப்புக்கள் உள்ளன.

வரிசை எண். 1123 சுவடி எண். 521

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 4-5 வரிகள். அளவு : 22×2 செ.மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : பலர் முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

### குஷ்டத்துக்கு

சித்தாமணக்குக் கொட்டை யெண்ணை சேர்துப் பசுவின்பால் சேர்சப யெழும்பிச்சம் பழம் சேர்ப வெங்காயம் படி½ வெந்தியம் படி வ வெந்தியத்தை வறபோட்டு அரச்சு, வெங்காயம் பொடியாயி நருக்கி யெண்ணையோட போட்டு கலக்கி நவியில் ரெண்டு ஞெளக்கி வயித்து யெடுத்து கொண்டு காச்சி யெறக்கி வயித்துக் கொண்டு கோரோசனை ரூ ½ மாச்சிக்கா ரெண்டு யிதுகளை பொடி செய்து கொண்டு

**முடிவு :**

அறைத்து து லெஷ்சம் சிவம்பண்ணி அறைக்குறது. பசுவின் நெய் விளக்கெண்ணை கலந்து காச்சிவிட்டு அறைக்கிற போது • லெட்சம் சிவம் பண்ணி அறைத்து யெடுத்து சிமளில் அடைக்கிறது.
விக்கினஷ்பறுக்கு பூசை பண்ணி யெடுத்துக் கொள்ளுகிறது

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில், குஷ்டத்துக்கு அந்திமாலை, கட்டிப்புண்ணுக்கு பவள பஷ்பம் ரெங்கசாமி ஆசான்சாமி, சிங்கபழம் பஷ்பம், தாளகக்கட்டு, பித்தத் துக்கு கிஷசாயம், கலப்பு பஷ்பம், மண்டைக்குத்தலுக்கு, தியானம், சூதகவாய்வுக்கு, காச்சலுக்கு, ரெத்த பிறமயம்சீ பிறமயம், வெட்டைக்கி செம்பு முதலியன உள்ளன. இதில் மந்திரங்களும் அடங்கியுள்ளன.

வரிசை எண். 1124 சுவடி எண், 522

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 45. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திறகு; 6-8 வரிகள். அளவு : $21\frac{1}{2} \times 3$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 700. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

## விரேசனத்துக்கு

ஒத்தைச்சேரை ரேவாரப் பொறிச்சி-தின கூட சீரகம் பற்றுப்போட்டு ஒறுபடி தண்ணி வய்த்து வேக வய்த்து குடுக்கவும். வாந்தி நிக்கும். விநயகன் துணை, சரஷ்பதி துணை யிறுந்து ரட்சிக்கவும்.

முடிவு :

## தாது புஷ்ட்டிக் குளிகை

வாலரசம் கழஞ்சி 3 குலமாந சாதிலிங்கம் கழஞ்சி 1 கூறுகிறேம். வெங்காரம் கிரும்பு, கஞ்சாலமான முறுங்க வீதை சாதிக்காயும் சாதிப் பத்திரி, முத்தக்காசு, அபினி, பூனக்காலிவித்து, க.................கூட்டே கூட்டிடுவாயி பூமிசக்கரக் கிழங்கு கண்மாசவக்ககி அள ப்பலந்தான் கூட்ட நாட்டிடுவாயி பொடி செய்து தேங்காயிக்குள்ளே போட்டிடு வாய் யேழுப்புடம் கைட்டது முறுங்க க்ஷாகத்தாலரைத்து குளுக செய்யே.

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதன் முகப்பு ஏட்டில் முருகன் உள்ளிட்ட சித்திரங்கள் உள்ளன, இதில் விரேசனம், வாய்வுக்கு, சேத்துமத்துக்கு, உஷணத்துக்கு, கண்ணில் பூ விழுந்தால், அஞ்சனம், எலிகடிக்கி, கோடாசூளிக்கிகுளிகை தோஷத்துக்கு, தண்ணி தாபத்துக்கு, வாலசுப்பிரமணி, உதயராகம் காடை நூல், கரிக்குருவி நூல், கறப்பனூல், காக நூல், ஆந்தை நூல், நச்சேத்திரகாதல் முதலியன உள்ளன

இதன்பின் ஒரு ஏட்டில் மரணயோகம், அமிர்தயோகம் ஆகியன உள்ளன.

வரிசை எண் : 1125 சுவடிஎண் . 523

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 129 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுதுபட்டது. ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. பக்கத்திற்கு : 6—7 வரிகள். அளவு : $20\frac{1}{2}$X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2500 ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஒருவேளை யிச்சாபத்தியம் கைகண்டது.

### க்ஷயரோகத்துக்கு

கால்சேர் வேப்பெண்ணெயில் ஒரு விராகனெடை பெருங்காய மிழைத்து 3 நாள் சாப்பிட தீரும். கைகண்டது.

### சயத்துக்கு

முத்தின வேப்பிலை கொண்டு மிளகு பூண்டு கூடவைத்து அரைத்து இரண்டு கொட்டைப்பாக்களவு சாப்பிடத் தீரும். பத்தியமில்லை.

**முடிவு :**

### கருமேகத்துக்கு

பூரம், வீரம், கெந்தகம் 3-ம் ஓட்டில் படி 4 மேனிச்சாறு சுருக்கிடவும். மறுபடி நல்லா 2 சாமமரைத்து உழுந்து பிரமாணம் உண்டை பண்ணி வச்சுக் கொண்டு கருமேகத்துக்கு குடுக்கவும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் 1-11, 14-22 ஆகிய ஏடுகள் இல்லை ஏடுகள் ஒடிந்து துண்டாக உள்ளன. எலி கடித்த ஏடுகளாக உள்ளன.

இதில் பலவிதமான வியாதிக்கு மருந்துகள் இருப்பதோடு லேபனத்துக்கு, வெட்டைக்கு, ரெத்த வெட்டைக்கு, வாயுவுக்கு ரசகெந்தி லேகியம், வெங்குஷ்டத்துக்கு கெந்தகம், விக்கலுக்கு, சன்னிக்கு, மேகத்துக்கு அஷ்ட்ட குன்மத்துக்கு கோழிமுட்டை, ரெங்கன் மஞ்ச செந்தூரம் கெந்தகத் தயிலம், திராவகம் குன்மத்துக்கு, சகல சயங்களுக்கும் சூரணம் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 1126 சுவடி எண். 524

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 172. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். அளவு : 40½X4 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 6500. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றும்.

**தொடக்கம் :**

## நெற்குண்டித் தயிலம்

*சீர் கொண்ட பூங்குழலாள் சிவனை யடிதொழுது*

................... ............................ ...........................

பொன்னே யமுதே புகல்கிள்ளை ஓதிபமே
மின்னேயதன் பெருமை விளம்பக்கேள் — சொன்னமறை
நொச்சித் தழுதாழை நுவலரி வாகையுடன்
அச்சமில்லா வேம்பு அக்ஷகமுமே — மெச்சிய
தொடிசத்திச் சாட்டறணை தயங்கிடவே லிப்பருத்தி
மெச்சியமுக் குறட்டை வெள்ளறுகு — உச்சிதமாம்

**முடிவு :**

இந்தப்படிக்குப் பிள்ளை பிறந்த முப்பது ளுள் மட்டும் அப்பால் பனிரண்டு மாதம் பனிரண்டு வருஷம் மட்டுக்கும் அந்தந்த............... ளுளிலே அதனையிற் பெயின் பேரும் அதினுட குண குணங்களும் அதுக்குப் பெலியுஞ் சொன்னே .. அந்தந்த ளுளில் உபத்திரப....... வந்தால் அந்தப்படி பெலி மன்னகலி லிட்டு அந்தந்த பேயின் பேர் கூறிப் பின்னை ..............லச்சு சுத்தி அ ........... க்கும் சொன............ ளிகளிவிலே வைக்கப் பத்திரம் நிற்க்கும்

குருவிருந்து துணைச்செய்வார்

சிவமயம்

ஶ்ரீம செயம்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் நெற்குண்டித் தயிலம், பஞ்சாட்சரத் தயிலம், விக்கல், வாந்தி, பழுவரை நோய்க்கு, ஆனந்த வயிரவம் பூபதி ரசம், சிந்தாமணி மாத்திரை அமுற்த சஞ்சீவி, அற்தனுரீசுபரம், பூறண சந்திரோதயம், பராங்குசம், அக்கினி குமாரன், மகா வில்வாதி லேகியம், எலி கடிக்கு, சுவாச காசத் துக்கு, பீனிசத்துக்கு, கல்லெரிப்புக்கு வலம்சலம் அடைத்தால் மருந்து, நீர்க்கடுப்புக்கு மருந்து, வலம்சலம் அடைப்புக்கு மருந்து, கல்லடைப்புக்கு மருந்து, முதலானதலைப்புக்கள் உள்ளன. பின்பகுதி ஏடுகள் பாதியாக அரித்துள்ளன. இதன் பின்னர் ஒரு ஏட்டில் வெட்டைக்கு மருந்து எழுதியது உள்ளது பின்பக்கம் மேகசஞ்சீவி எண்ணெய் மேகத்துக்கு எண்ணை எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண். 1127 சுவடி எண். 525.

# வாகடச்சுவடி.

ஏடுகள் : 75 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். அளவு 39 x 3செ.மீட்டர். எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை. 3500. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : குறைபாடுடையது.

## தொடக்கம்

(ஏட்டு எண் 4.)

சயனமாந் தடாக மெத்த
தாநெழல் நீரை போக்கும்
கவனமரம் பச்சி லைத்தூள்
கண்ணது குளிற்ஷி நன்று
தவள்மறம் பருத்தி யுஸ்ட்டிணம்
தண்டுல மிலவ பஞ்சு
புவணமுஞ் சிலப்புல் பத்தி
நீழுமந் தாரம்நல் மறமே. 30.

## முடிவு :

திருவார் சிரகிரிவாள் செவ்வந்தி யானே
மருவார் கமலபதம் வாழ்த்தித் தெருளவே
வாகடத்தால் பேடசத்தை வண்டமிழ் வெண்பாவாய்
பாகடறச் சொல்வேன் பரிந்து. 125/

தேவி சகாயம்

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில் 1-3:6, 7-9, 11,13, 15, 17, 19, 22, 30, 33, 34, 38, 40, 44, 45 49-52, 94 ஆகிய ஏடுகள் இல்லை.

இதில், தானியவகை, ஊசல், பாயாசம், களி, கச்சாயம், அடை குதிரைவாலி, காடைக்கன்னி, கோதும்பை, மூங்கில், பொது, எள், பயறு உளுந்து, தட்டப்பயறு, வெண்பயர், கொள்ளு, தானியப் பொது, முதலியன உள்ளன.

இதன் பிறகு இதுபோன்ற இன்னும் அநேக தலைப்புக்கள் உள்ளன.

வரிசை எண். 1128 சுவடி எண். 526(a)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 78 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 5–6 வரிகள். அளவு : 21×3செ, மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர் : பலர் முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

வாவாவென்-ஞயகனே வாவாவென் ஞவுதனில்த்
தாவா விருந்து தழைக்கவா - தேவா
அரிபிரு காதிவண்பம்பல் வரதன் புதல்வா
கரிமுகவா கருணைபுரி வாச

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய முணர்விக்கு மென்னம்மே - தூய
யிருட்பளிங்கு போல்வாளெம் முள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

வாலையம்பிகை துணை

## முடிவு :

பிறவைபங் கான்னி யாகம் சிறுமுன்ள அந்தகறும
சாத்தியமாகும் பினியாசஞ் சிதாங்கமருக்குத் தாக மேத்தமுடன்
கண்ட குச்சவிக்கினுதம் மியல்பக்கு நேத்திரமாத்
தாட்டிக மசீகம் சத்தி யேழு வகையும் சாத்தியமே யாகுஞ்
சகலகுண வயித்தியர் முன் சாற்றிக் காணே. உயக

தெண்டாயுதபாணி துணை

## காலம் :

இல்லை

## குறிப்பு :

இதில் வங்கார பற்பம், இசிவுக்கு ஒத்தடம், தோஷம், சுகரகசாயம், தோஷத்துக்குக் கண்டாவிழ்சதம், கிருணி, நவநீதம், இந்த்திரக் குளம்பு, மேகம் 21க்கும் பற்பம், திசதீட்சை குளம்பு, தாம்புரம், வாய்வு லேகியம், உஷ்ண வாய்வு, விஷ வாய்வு, வாய்வு குன்மத்துக்கு பஞ்சாக்கினி சூரணம், அண்டவாதம் கெற்ப தவள சுரம், பதிமூன்று சன்னிக்கி ஒத்தடம், சந்நி நசியம், சன்னிப்புகை, பூ மோந்து பார்க்கப் பேதி, அண்டவாதம் முதலியன உள்ளன.

இச்சுவடி எல்லாச் சுவடிகளைப் போலல்லாமல் ஏட்டின் தொடக்கத்திலேயே தொளையிடப்பட்டு கோர்க்கப்பட்டுளது

வரிசை எண் 1129 சுவடி எண் 526. (b)

# தட்சிணாமூர்த்தி ரத்தினச் சுருக்கம்

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : 21X3செ,மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

செய்யும் பித்த சுரந்தன்னிற்
திகழுங் குணங்கள் நாவுலரும்
யெய்யுஞ் சிறுநீர் சிவந்திருக்கும்
பிதற்றுஞ் சத்தி யோங்காரம்,
மெய்யும் வெதும்பும் வாய்கசக்கும்
மிடறும் வாயும் புண்ணுண்டாம்
நெய்யக் களியு மலமுடனே
நயனந் தானு மஞ்சணித்தே.

## முடிவு :

முழச்சீலை யிருபுறமும் பூசிக் குன்றுக் காவி
யலத்தில் திரித்துக் குணசெட்டி திரினுழைத்த
மாதான செய்து கன்று கத்திரி நால் விரல்க்
தமரிலேற்றிக் சுதிக்க நால் முழயடித்து
வழை நாவிட்டோ யிட்டபந்தல் மேல்ச் சட்டி

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில் பித்தசுரம், மந்தபித்தசுரம், சதுர்முகக்குரு, காந்த சத்து, அயச்சத்து, உஷ்ணத்துக்கு, அரையாப்பு, படர்தமரைதூலை, விசம், கிரந்தி, குஷ்ட்டம், அரிதாரபற்பம், அரையாப்பு, கெற்பநோய். வெள் வங்க பற்பம், பேதிக்கு கருங்கோளிச் சூரணம், வீக்கம், யிருமல், சுவாச காசம், மேகம். சயம், தாளிசபத்திரி வடகம், கட்டு, மலக்கட்டு. தோஷத்துக்கு குங்குமாதித் தயிலம், தோஷத்துக்கு சாரங்க பற்பம், அந்தரதாக, ஒத்திடம் முதலியன உள்ளன.

இச்சுவடி எல்லாச் சுவடிகளைப் போலல்லாது, ஏட்டின் தொடக் கத்திலேயே தொளையிட்டு கோர்க்கப்பட்டுளது.

வரிசை எண் 1130. சுவடி எண். 527,

# பிள்ளையுண்டான பெண்களுக்கு மருந்து

ஏடுகள் : 28 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு ; 9–10 வரிகள். அளவு : 25X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 900. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

### பிள்ளையுண்டாகி கெற்பமாயிருக்கையில் குடுக்க மருந்து கைகண்டது.

நற்சீரகம் ஒரு சிரங்கை, கருஞ்சீரகம் ஒரு சிரங்கை, கணவன் மிளகு ஒரு சிரங்கை ஆக 3-ம் செம்பொன் னெருஞ்சி சமூலம் ஒரு பிடி, குளிமிட்டானிலை ஒரு பிடி ஆக பச்சையிலை 2-ம் கடைமருந்தை யும் வெவ்வேறே அரைத்து புதுக்கலசத்தில் உண்டை உண்டையாகப் போட்டு அதில் கால்ப்படி நல்ல சிலம் வார்த்து வண்டுகட்டி காலமே வண்டவிழாமல் ஷை சிலத்தை வார்த்துக் குடிக்கவும்.

## முடிவு :

4 மரக்கால் சிலம் விட்டு, 1 மரக்காலாகக் காச்சி வடித்துக் கொண்டு அதில் பசுவு நெய் படி 2 விட்டு பசுவின் பால் படி 2 ஆலவேற், அரசவேர் பட்டை வகைக்கு பலம் 10 யிடித்துப் போட்டு ……… ……… 8 மரக்கால் சிலம் விட்டுக் காச்சி ஒரு மரக்கால் லாக்கி கொண்டு ஷை நெய்யில் விட்டுக்கொண்டு, அதிமதிரம், யேலம், கிரும்பு லவுங்கப்பத்திரி, கடுக்காய் தானிக்காய், நெல்லிப்பருப்பு, விலாம்பழக் கோது, நல்லசந்தணம் தேவதாரம்.

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில் 87-ம் ஏடு முதல் உள்ளன. 95-97, 110-122 ஆகிய ஏடு கள் இல்லை. 130 ம் ஏடு முடிய உள்ளன. 126-ம் ஏடு வரை ஒரு கை எழுத்தாகவும், மற்றது ஒரு கையெழுத்தாகவும் உள்ளன.

இதில் பிள்ளையுண்டாகி யிருக்கையில் குடுக்க மருந்து, கெற்பக் காரிக்கு ரெத்தம் சாய்ந்தரலதற்கு மருந்து செரரை சாயிரதற்கு மூலிகை குளிசம், பெண் பிள்ளைகளுக்கு விடாமல் கரைபட்டால், கறைபடுகிற தற்கு நீறு, பிள்ளை பெற்றவள் களிச்சலுக்கு சன்னை, மீனில், பிள்ளை யுண்டா யிருக்கிற பேருக்கு உள்ளுக்கு பிள்ளை பிறவிசெனுக்க முதலியன உள்ளன. இது ஒரு சிறந்த சுவடியாகத் தெரிகிறது.

வரிசை எண். 1131. சுவடி எண். 528:

# வைத்தியத் திரட்டு.

ஏடுகள் :78 ஏட்டின் நிலைமை : மிகப் பழுதுபட்டது: பக்கத்திற்கு: 10–11 வரிகள் அளவு : 43X4. செ மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் . அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

..............................வென்போன் தொழில் கோடி முறை
கோடி துறை கோடி வழக்கங் கோடி மன்னுந்
துருக்கோடி களங் ... ..............
.....................ளிகை கோடி தண்ணுன உதாரணச் சொல்லிதிலே
கோடி தயங்காத சத்துவகை தொழிலோ கோடி
அன்னுன பிறக் கண்ட ....................
.................. .. து அசடர் பாரே.

## முடிவு :

மவுனமுன்ன மவுனமுன்ன மவுனமாகும்
மாசியத்த மவுனமது வந்து தாண்டும்
ம ................ கெளும் வாய்மூட ஓங்கி நிற்கும்
மவுனந் தானே 1048.
.............. பேர்கள் கையவ ..................
...........ரவிபோலே கோடா கோடி
ஊணப்பா வகண்டத்தில் லடை ..............

## காலம்:

இல்லை.

## குறிப்பு :

இதன் தலைப்பு இல்லையாதலால் இது இன்ன நூலென்று அறியக்கூடவில்லை.

இதில் கல்லுப்புக்கட்டு, அண்டவேதை, லிங்கக்கட்டு, அமுரி உப்பு துரிசு, கொங்கணவாக்குவாதம், துரிசிக்குரு, யோக வாசி, துரிசிசுத்தி, வங்கச்சுன்னம், துரிசிசுத்தி, வாதமுறை, பால்முறிவு துரிசிலிங்கம், லிங்கமெழுகு, பஞ்சபூதவிபரம், ஞதாக்கள்னூல்விபரம் மகாதுரிசிக்குரு, நூல்குடுக்க(ப)ருவம், லிங்கக்கட்டு முதலியன உள்ளன

பிற்பகுதியில் தலைப்புகள் தெரியாவண்ணம் பழுதுபட்டுள்ளது, முற்பகுதியிலும் பலஇடங்கள் அப்படி உள்ளன.

வரிசை எண் 1132 சுவடி எண். 529.

# வைத்தியத் திரட்டு.

ஏடுகள் : 47. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். அளவு : 23 × 3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 800. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது

**தொடக்கம் :**

## கட்டுவிப்புருதி

## கெற்பவிப்புருதிக்கு

யிண்ட ஞரைக் காடியில் பிசைந்து கு ........... .....

## கெற்பரோகக்குணம்

திரண்டு புளிக்கும் உருண்டு வரும். தீருச் செயலும் ப
த்தி வரும்யமுங் கெட்டுத்தாதுந் திரண்ட மடந்தைய
உருண்ட புளுக்கை உள்மூல உலையுங் கெற்பரோகமிதே

**முடிவு :**

## அண்டவாதத்துக்கு

கிளிச்சிப்பருப்பு 15
கோளிமுட்டை 6

தட்டிப்போட்டு ஆறவைத்துச் சாப்பிடவும்
யிந்தப்பிறகாறம் 3வேளை சாப்பிடவும். புளிதவிர்க்கவும்.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் 18வது ஏடுமுதல் உள்ள ஏடுகளில், 47, 61, 63, 67, ஆகிய ஏடுகள் இல்லை. முன்பகுதி சில ஏடுகள் பாதியாக உள்ளன.

இதில் லேவனமில்லாத பேற்க்கு, பவுந்திரத்துக்கு, கண்டமக்கு மேகவெட்டை 15ம் வசைய, கோள்முட்டைத்தயிலம், சன்னி பதிமூன்றுக்கு, வாத அரக்குளிகை, சன்னியில் பல்கிட்டி அலகுதிறக்க அஞ்சனம் போடவும். சன்னி, பயித்தியம், பாண்டுரோகத்துக்கு, மூலவாய்வு, உள்மூலம், பிறமூலம், ஆணி மூலம் விழ மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் 1133 சுவடி எண். 530

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 4-7 வரிகள். அளவு : 32X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

......ஞதவளர்த்தி ............ ச்சோரியாளைச் சோரிபீலி
யியல்பில்லா றேனங்களல்லா மொழி
சிலைப்போகும் ................

முடிவு :

சக்கறம் பாசத்தால் கட்டிப்பதற அடித்து
ஈசுவறணே இழுத்துக்கொண்டுவா
கூடிய பிசாசுக் கூட்டம் குலைந்து தேடிய பிசாசு
திசைகெட்டு நின்றுபாடிய ஆனந்தி பார்வதியாணே
ஓடிவா, ஓம்காளி, ஓம்பிடாரி, ஓம்நமசிவய
ஊஞற் தேவதை ஒதுங்கி நிற்க சுவாகா.
ஓம் ஐய்யும் எறி எறி ஓம் நமசிவாய ஸ்ரீயும்.
(சக்கரம் இருக்கிறது)

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் இரண்டு வகையான, அளவுள்ள ஏடுகள் இருக்கின்றன. ஒருவகையில் மை பூசப்பட்டிருக்கிறது மற்றொன்றில் மை பூசப்படவில்லை. சக்கரங்கள் சில உள்ளன.

இதில் நமநாச மெழுகு, யானைக்கால் தீரலேகியம் அக்கரசஞ்சீவி மாத்திரை, பிள்ளைகளுக்கு பேதிக்கு மாத்திரை, கட்டுவாதி மாத்திரை, பச்சைகற்பூர மாத்திரை, சிறுபிள்ளைகளுக்கு கட்டுவாதி ரத்தக்கோட்டல் ரத்தபேதிக்கு சூரணம். அமிர்தசஞ்சீவிக்குளிகை, சிறுபிள்ளை காதில் சீ வடிந்தால் தயிலம் சிறுபிள்ளை பெருக்கநெய், குழந்தைகளுக்கு வாந்தி கண்டால், குழந்தைகளுக்கு சிறுசிரங்கு பெருஞ்சிரங்கு பூச்சுத்தயிலம் பிரசோபிக்கமாட்டாத பேர்களுக்கு, முதலியன உள்ளன. அடுத்து மந்திரங்கள் வசியம், செட்டிப்பரதேசி முறை, இடுமுறை, முதலியன உள்ளன.

வரிசை எண். 1134. சுவடி எண். 531.

## கோரக்கர் நொண்டிச் சிந்து-105

ஏடுகள் : 32. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 8-10 வரிகள். அளவு : 25X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 800. ஆசிரியர் : கோரக்கர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

ஆன அரன் பாடியனூ லகத்தீசர் பாத்து
அதிசியமென் றேயெடுத்து கண்ணிலேதான் வைத்து
னுமினி பாடுகுரேன் அஷ்டகர்ம வித்தை
நன்றாகப் பாடினு ராயிரத் திரனூறு
வேணுமென்று சித்தரெல்லாம் வெகுகோடிம நகரம்
விதவிதமாய்ப் பாடிவைத்தார் னூா மேளகு
வான அஷ்ட்ட கர்மமந்தரம் வகைவிபரமாக
வாக்குமந்த்ரஞ் சித்திக்கும் வகையாம் பெரியோர்க்கே. க

## முடிவு :

பாருஅஷ்ட்ட கர்மமெல்லாம் பாடிபோட்டோம் பாரு
பரிவாக சாஷ்த்திரனூல் பார்த்துநித்த பரிந்தால்
சேருஞ்சிவம் ஓம்கும்பம் மந்திரத்தை நித்தம்
செபமாக பாற்தவர்க்கு சித்தியாகும் பாரு
காரு நித்தங் குருபதத்தை வணங்கிப்பாரு தொளிலே
கைகண்ட வித்தையிது அஷ்டகர்மத் தோளில்தான்
ஊரிலுள்ள பேர்களுக்குக் குடுக்கலாகா மின்னூலே
உற்றசண்டாளருக்காகா சூஸ்திரனூல் முற்றே 105

முற்றும்
குருகிடாக்ஷம்
சிவசுப்பிரதீபந் துணையாகவும்
வேல்முருகன் துணை
அம்பாள்துணை வருகவே.

## காலம் :

சூஅளசாளவது பிரபவா வருஷம் பிரட்டாசி மாதம் சப்ட்டம்பர் மாதம் 3ந்தேதி வியாழக்கிழமை, அகண்ட பரிபூரண சக்ஷிதானந்த சாக்ஷாத்காரமாய் விழங்கும் யெமது குருவாக்யபூப குமரசிவம் (பூபதி பரசிவம் ?) மளித்த கோரக்கர் அஷ்ட கர்மம் குருகிறுபையினுலே முடிவாயிற்று.

சென்ன பட்டணத்தில் யென்றறியவும்.
இவை கிருஷ்ணுருவு சாஷ்த்திறம்
குருகடாக்ஷ பூபதியே துணை
வேணும், முற்றும்.

## குறிப்பு :

இதில், பேதனம், முச்சாட்டினம், மாறணம், அழைப்பு, ஆக்கிருஷணம் வசீகரம், மோகனம், வித்துவேஷணம், ஆகிய அஷ்ட கர்மங்களும் கூறப்பட்டுள்ளன.

மேலும், ஐங்காய விபரம், வசீகரம், ஸ்ரீ வசியம், திலதவாடைபொடி, ஈடு முதலியன உள்ளன.

வரிசை எண் 1135 சுவடி எண் 532

# சட்டைமுனியார் முப்பு - 50

ஏடுகள் : 13. ஏட்டின் நிலைமை : நல்லநிலை பக்கத்திற்கு : 5-8 வரிகள். அளவு : 26X3செ.மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 250. ஆசிரியர் : சட்டை முனியார். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் வாழ்மலரு
ளேக்குண்டா மேனி னுடங்காது - பூக்கொண்டு
துப்பா திருமேனி தும்பிக்கை ஒன்பாதம்
தப்பாமல் சாறுவாய் தமக்கு
குருவே துணை

### நூல்

### சட்டமுனியார் முப்பு அன்பது

மயமான முப்பூவின் மாற்கந் தன்னை
வயித்தியம தாக்கியே விரித்துச் சொல்ல
சியமான கணபதியுங் கந்தன் தானும்
சிவநோடு பருபரன் திருவாணி தானும்

## முடிவு :

துருவுமா வாய்செலான் திருவுடைய சீஷனுவாய்
சிந்தையிலே களங்கமற்ற சிற்றனவாய்
நாலான னமனிபெரும் பிரம்மன் சொன்னார்
நலமுடைய சட்டைமுனி வாக்கு முற்றே
விநாயகர் துணை
குருவே துணை
சரவணபவ மூற்தி துணையாகவும்

## காலம் :

1863-ம் வருஷம் ஜனவரி-மீ 28-ம் தேதி புதன்கிழமை பகல் மூனு மணிக்கு யெழுதி முடித்தார். முற்றும்.

விநாயகர் துணை
குருவே துணை
சரவணபவ மூற்த்தி துணையாகவும்
சிவசுப்பிரமணியன் துணை ஃது

## குறிப்பு :

இதில் 47-ம் பாடலுக்குப் பிறகு 50-வது பாடல் உளது.

இதில் முப்பு, நாகசுத்தி, வகாரம், வெள்ளைக்கல் மூப்புச் சுன்னம், ஆகிய தலைப்புக்களே உள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

வரிசை எண், 1136 சுவடி எண் . 533

# சட்டைநாதர் வகார சூத்திரம்-25

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 25×3 செ: மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர் : சட்டைமுனி. முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

ஆகம பூருண வேத ரிமரிவுடன் சாஸ்தி ரங்கள்
யேகமும் மொளியொன் ருகி யெவ்வுயிர்க் காத்தும் தானய்
மோகமாய் யாண்பெண் ணுகி முடியிலே வெளியு மான
தேகமும் நின்ற பூருணம் சிவகுரு கந்த னமே. 1

## முடிவு :

காட்டுவார் அகாறமுதல் உகாறம் ரெண்டும்
கருத்தாக அடிமுடியில் வைத்துக் கொண்டு
ஊட்டுவார் மைய்யமெனும் கண்டத்தி
லூாமையெனு மயிங்காறத்தை சொல்வா றப்பா.
பூட்டுவார் மவுனமென் றிதுவே யாகும்
புலையருக்குக் காட்டினுல் தலைதெறித்துப்போகும்
நாட்டுவாற் றவறெப்ப டித்தான் சொல்வார்
னுன்சொன்னேன் சூஷ்திர மிருபத்தஞ்சு முற்றே.

குருகிடாக்ஷ முன்னிற்க வேண்டியது.
முற்றும்.

## காலம்:

பிறவறிக வருஷம் 7ந் தேதி சனிக்கிழமை முடிந்துது.
கிருஷ்ணுஜிருவு செவுடி
சிவசுப்பிறமண்ணியம்

## குறிப்பு :

இதில். நாக செந்தூரம், உப்பு மெழுகு, கெவுரி செந்தூரம், கருநெல்லி மெழுகு, துருசுச்சுன்னம், மறப்பூ தியானம், அஷ்டகற்மம், ஆகியவை உள்ளன.

---

வரிசை எண், 1137 சுவடி எண் : 534

# பிரமமுனி வைத்தியக் கருக்கடை

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 7-8 வரிகள், அளவு : 25×3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர் : பிரமமுனியார். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

252-ம்பாட்டு

சீருன வாதமென்ன வயித்திய மென்ன
செய்முறையோ டவுழதங்கள் செய்வ தென்ன
பாருன பலனூலும் பாற்க வேணும்
பார்த்தறிந்து செய்கிறதோர் பாகம் வேணும்
கூருன சறக்குவகை யினமறிய வேணும்
குருவாசான் கைதொட்டுக் காட்ட வேணும்
சாற்வாக யிதைவிட்டு முறைதப்பா செய்து
சாஷ்த்திரத்தைப் பொய்யென்பான் சண்டாழன் தானே 253

**முடிவு :**

தழுகாது சூதவெண்ணெ வேதையிரு சார..........
......னதான செய்குளிகை கெவுன மாகும்
கழுகாகும் ரசவாதம் வயித்தியந்தான் ரெண்டும்
கருதியே சூஷ்த்திரத்தில் கலந்தொன் ருகப்
பழுதில்லா நவமணிகள் கோர்த்திட் டாப்போல்
பாகமாய்கை முகையாய்ப் பாடினேனே. 266

(இதன் பின்பக்கத்தில்)

தவசு முருங்கை சாற் படி$\frac{1}{4}$ விட்டு 2 பலம் ரசத்தை 2 சாமம் அரைக்க வெண்ணெயாம். 1 விராகனிடை அபினியை பழத்தாலரைத்து பூசி அனிஞ்சகதலி 6 உரித்து பிசைந்து சட்டியில் பாதி யிறுத்து மணி வைத்துமேலும் படமிட்டு சிறு தீ போட சுத்தி தீ பந்து மப்பற கசகசப்பா யிருக்கும். அப்பொழுது பக்குவத்தில் எடுந்து பழச்சாத்திலிட யிருக்கும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் 253 முதல் 266 வது செய்யுள் வரை உள்ளன. இதில் 255ம் பாடல் எண் 355 என்றுளது. எழுத்துக்கள் நன்ருக உள்ளன. பிரமமுனி வைத்தியக்கருக்கிடை 252ம் பாட்டு என்று தலைப்புளது. ஆனல் தொடக்கம் 253 ம் பாடலாயுள்ளது

---

வரிசை எண். 1138 சுவடி எண். 535

## ரோமரிஷி-100

ஏடுகள் : 35 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 24X3 செ, மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 600. ஆசிரியர் : ரோமரிஷி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

மூலவட்ட மானகுரு பாதங் காப்பு
முத்திக்கு வித்தான முதலே காப்பு
மூலவட்ட மானபரப் பிறம்மங் காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு

**முடிவு :**

செப்பல்லோ பந்துக்குள் மூட லாச்சு
தீஷ்ச்சரணமாய் யிந்தநூல்த் தெளிவோ ரெம்ப
முப்பொருளும் (மொன்ருகி) நின்ற சோதி
மூலவட்டக் குருவருளால் மொளிதா (ன் முற்றே) 100

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், கிருணிக்கு, சூட்சகாரணம், தாமரைபற்பம், தங்கபற்பம். வெள்ளிபற்பம், வெள்வங்கபற்கம், ஞைபற்பம், சாதிலிங்க பற்பம், ஆகிய தலைப்புக்களே உள்ளன. பிற்பகுதியில் தலைப்புக்கள் இல்லை.

இது எமது சுவடிஎண் 272 / D 488 ரோமரிஷி சூத்திரம் 100 போன்றது. அதற்கும் இதற்கும் பாடல் வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண். 1139 சுவடி எண். 536

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 100. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு, 3—6 வரிகள். அளவு 26 X 2 செ. மீ எழுத்து : தமிழ். கி எண்ணிக்கை: 1000 ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**சிந்தாதி எண்ணை**

| | | |
|---|---|---|
| வெலக்கண்ணை | சேர் | 1 |
| தேங்காய்பால் | சேர் | 8 |
| உத்தாமணிசார் | சேர் | 8 |
| வாலம் | பலம் | 1 |
| கடுக்காய் தோல் | சேர் | 2 |
| பூண்டு | சேர் | $\frac{1}{4}$ |
| பெருங்காயம் | பலம் | $\frac{1}{4}$ |

இந்துஉப்பு
வெங்காரம்
கருஞ்சிரகம்
குகை நீர்
வகைக்கு பலம் $\frac{1}{4}$

முடிவு :

## காந்தூர லேகியம்

| | |
|---|---|
| காந்தம் பலம் 1 | மல்லி பலம் ½ |
| அரைபொடிபலம் ½ | அரைக்க எலும்பிச்சை |
| சுக்கு பலம் ½ | பழசார்விட்டு அரைக்கவும் |
| மிளகு பலம் 1/2 | கத்தாழைசார் |
| திப்பிலி பலம் 1/2 | பித்தவெட்டை |
| சீரகம் பலம் 1/2 | சேர்க்க ரெத்த ஊறல் காணும் |

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பலவகையான மருந்துகள் கூறப்பட்டுள்ளன. பிழைகள் மலிந்துகிடக்கின்றன. எழுத்துக்கள் தெளிவில்லாததால் தவறுகள் நிறைய உள்ளன.

வரிசை எண். 1140 சுவடி எண். 537

# அகத்தியர் 3-ம் காண்டம்-சாலம் — 300

ஏடுகள் : 52. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு; 6-7 வரிகள். அளவு : 26¹ × ³ செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 800. ஆசிரியர் : அகத்தியர் முழுமை : முற்றற்றது

தொடக்கம் :

காரணமெஞ் ஞானவெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே கருணை மேவும்
பூரணமே பஞ்சகற்ற ரூபி யான
புண்ணியமே நிண்ணயமே பொருளே வேத
வாரணமே நிறைந்த பிரணவமே சேவை
மயில்குகனே குமரகுரு பரனே ஆதி
நாரணனே நான்முகனே முகனை மைந்தான்
நாதபர விந்துமவு னய்கர்ப் பாமே

முடிவு :

யெரிமூடும் விருபுறத்தி லரிசி தெனர
மினாச்சலொடு தும்பி நட்டு வக்காலி யாக
வரிவரியாய்ப் பிடுங்குமவன்ந் திரேகமெல்லாம்
மானுவா குறத்தலைப்பேய் வந்து மூடும்
கரியானை வந்து கொல்லும் வடுகன் வீட்டுக்

காரியநாய் குரங்குங்கவ்வி கடிக்கும் பாரு
விரிவான நாகமெட்டும் கொத்தும் பாரு
விட்டவிட்ட பூதகிணை.......... ... 255

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், கக்கிஷம், கண்கட்டு வித்தை, மாரணம், லாடசிங்கி, ஆக்கிருணம், போகர், கருவூர், கொங்கணர், மாற்றர், அதிரைஞன், யோனி, ஆயிலியம்யோனி, கேட்டையோனி, அசுபதிபூ, மோடி,தீஞ்சான் சோசியம், சரம்பாற்க வலியான் நீறு முதலியன உள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண். 1141. சுவடி எண். : 538

## ரோமரிஷி - 500

ஏடுகள் : 78 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு; 9-10 வரிகள். அளவு : $25\frac{1}{2}$ X $3\frac{1}{2}$ செ. மீட்டர் எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை. 2500 ஆசிரியர் : ரோமரிஷி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

மூலமுத லாதார முடிவில் நின்ற
மூர்த்தியெனுங் கிணேசருடம் பாதங் காப்பு
சாலமெல்லாங் கடந்துநின்ற தாயின் பாதம்
சனகாதி மூலருட பாதம் போர்த்தி 1

**முடிவு :**

பாளடா போகாமல் மனத்தை ரியும்
பதியவே மூலமென்ற நந்திக்குள்ளே.
வாளடா அளுத்திநீ உண்ணும் போது
மாண்டுதடா பிறவியென்ற மாயந் தானே. 507
ரோமரிஷி சாத்திரம் முத்தும்

தெஷ்ஷுணு முற்தி கிருடை உண்டாகதாகவும்

திருச்சிற்றம்பலம்
கருத்தைத் தஞ்சமென நித்தித் தந்திடும்
திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்
சிவசிதம்பரம் சந்திரசேகரன்
குருபாதம்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் 42—74, 110-119 ஆகிய ஏடுகள் இல்லை. மை பூசப்படாத சுவடியாக உள்ளது,

இதில், பூனீர் பெருமை, பிண்டமுப்பு, ஈசனுப்பு, மவுனவுப்பு, சக்கரம் பூசை, ஞானவழி, தேவி பூசை சக்கரம், முப்பூவில் வேதை, விடாதியானம், முதலியன உள்ளன,

இதன் பிறகு இந்நூலின் தொடர்ச்சி:-

**தொடக்கம் :**

மாயமென்ற யோகமெல்லா மிவ்வளவே யாச்சு
    மயங்கினு ருலகற்ரு ரறியா மற்ருன்
காயமென்ற யோகத்துக்கிதுவே மூலங்
    காட்டினே னுள்ளபடி கவடில் லாமல்
வாயமென்ற பூவெடுக்கும் வகைக ளெல்லாம்
    வகையாகச் சொல்லிவைத்தே னிருநூற்றிச் சொச்சம்
சேயென்ற பிள்ளைகட்கா யிந்தநூலைச்
    செப்பினேன் கருக்களெல்லாம் திறமாய்ற் ருனே 508

**முடிவு :**

பாரப்பா னூற்சொன்னேன் பதினூற் சொன்னேன்
    பதிவான வன்பதிலே ரெண்டு சொன்னேன்
சீரப்பா யதில்மவுன ஞானஞ் சொன்னேன்
    சிறப்பாகக் குருமுறையுஞ் சொல்லி வைத்தேன்
வீரப்பா ரோம்னென்று பேரும் னுட்டி
    விசையெல்லாஞ் சொல்லிவைத்தோ மிந்த னூலில்
ஆறப்பா அவனியிலே கொடுக்கப் போருர்
    அப்பனே புசுண்டருட பாதந் தானே, 511

தேவிசகாயம்

திருச்சிற்றம்பலம்

கிஷ்ணமூர்த்தி

இதன் பின்னர் ஒரு ஏட்டில் இரசக்கரம் எழுதப்பட்டுள்ளது.

---

வரிசை எண் 1142. சுவடி எண். 539,

## புலிப்பாணி ஜாலம்—200

ஏடுகள் : 37. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது பக்கத்திற்கு : 7—8 வரிகள். அளவு : 28×3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 800. ஆசிரியர் : புலிப்பாணி முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

**புலிப்பாணி முனிவரருளிச் செய்த சாலம் உள**

சத்தியே தயாபரியே ஞான நூலி
சாம்பவியே மனோன்மணியே கபாலி சூலி
முத்தியே வேதாந்த பரையே யம்பாள்
முக்குணமே முச்சுடரே மாயா வீரி
வெத்தியே மூலருக்கு மருளாய் நின்ற
வேணியே சாமளையே பொன்னே மின்னே
சித்தியே சாலமிரு நூறும் பாடச்
சின்மயமாங் கணபதிதான் காப்பாம் பாரே. 1

முடிவு :

மாற்றமா மண்ஞ்சீலை யேழுஞ் செய்து
வாய்மூட மாக்கல்லை யுரைத்து மூடு
சாத்தவே குப்பிவைத்து மணலைக் கொட்டி
சார்வாகக் குப்பிவாய்க் கருத்து மட்டும்
ஊற்றமாய் நாற்சாம ..............................................................
..............................................................................................
..............................................................................................
..............................................................................[199]

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் 3, 27, 35, 37 ஆகிய எடுகள் இல்லை.

இதில் கண்கட்டு வித்தை, மாறணம், பேதனம், வித்துவேஷணம், கள்ளனைப்பிடிக்க, குறிசொல்ல, எக்காள ஜாலம், ஜால தம்பனம், தீவட்டி சாலம், எட்சணி சாலம், மயேந்திர சாலம், சங்கிலி ஜாலம், பட்டணஜாலம், பிசாசு ஜாலம், கோகரண சாலம், கஜகற்ண ஜாலம், காளிவசியம், செப்பிடு வித்தை, எட்டி முனை வித்தை, மாடன் மந்திரம், கொள்ளி ஜாலம், சுண்டி மூலிகை முதலியன உள்ளன.

மிகப்பயனுடைய சுவடி.

வரிசை எண். 1143 சுவடி எண். 540

# தட்சிணாமூர்த்திவாக்கியம் காவியம்-1000

ஏடுகள் : 135. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 10-12: வரிகள், அளவு : 31 x 3 செ. மீட்டர் எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 7000. ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

**காப்பு**

ஓமென்ற மூலகண பதியே காப்பு
உண்மையுடன் நடுமனையை யுகந்து நின்று
ஆமென்று அமுர்தகலை உள்க்கொண் டேதான்
அடங்கியந்த மனோன்மணியி னருமை யாலே 1

**நூல்**

காப்பான மும்மணியின் கருணை தன்னைக்
கயிலாச பராபரத்தில் நாதன் சொன்ன

---

கூற்ப்பான அஷ்ட்டமா சித்துமணி தானுங்
குவிந்துநின்ற சுடற்மணியென் றதற்குப் பேரே 8

**முடிவு :**

பார்க்கவே அண்டரண்ட பதங்கள் தோணும்
பரஞான கே(சரி)யும் வசமே ஆவாள்
யேற்கவே அவள்பதமே கெதியென் றெண்ணி
யிருகதிரும் ஒருகதிராய் யேகங் கொண்டு
மார்க்கமுடன் அடிநடுவும் முடிமேல்ச் சென்று
மகஷ்த்தான புருவமதில்ச் சோதி பாத்தால்
தீற்க்கமுடன் த ... ... ... ... விஸ்மயமும்
சிவசிவா ரெண்டுமொன்றாய்ச் சிவமாய் முற்றே. 1000
முத்தான சிவமதுவே ஆற்மா (வாகும்)
மூளங்கிநின்ற ... ... தமட சோதி யாகும்
சித்தான சித்தது (தான்) அறிவா னந்தம்
சின்மயமாய் நின்றதுவே விந்து வாகும்
வித்தான .........த தான் ஒளிகண் பார்வை
வேதாந்தப் பூறணமே தான்தா னாகும்
பத்தான திசதீட்சை தன்னி லேத(ான்)
............ தன்னறிவாய்ப் பதிவாய் முத்தே 1001

தெட்சணாமூர்த்தி சுவாமியார் பாதாரவிந்தமே துணை
............ ய .........வடிவேலர் துணை

துரைச்சாமி எழுதினது
காவிய சாத்திரம் முற்றும்
சிவமயந

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், கமலி யென்னுமணி, அஷ்ட்டமா சித்திமணி, முப்புவிபரம், வாலை ரசம், பிண்ட கற்மம், மைவகை, சிதம்பர சக்கரம், ரவிதெரிசினம், தம்பனம், மோகனம், மாறணம், சாடணம், மூடன் நிதானம், வசியம், வேடம், ஆகிருசணம், பேதனம், வித்துவேசனம், பிசாசுப் பிணிசக்கரம், சடாசர சக்கரம், முக்கோண சக்கரம், ஐங்கோண சக்கரம், மந்திர சித்(து), அட்சரம் கோக்க, பிசாசு பித்துக்கு, பிளவை, சிலந்தி, கெற்பம் பிரசவிக்க முதலியன உள்ளன.

இதன்பின் ஒரு ஏட்டில்

கதறிய வாழி யாறி யாடுதல்
கருதின ரியாவர் தாமி யாவையும்
உதறி யறுபோது நாடொறு
மொழுக விடாத வளவ ராமே
கழிய நிலாத போது சேறது
கழுவி யிலாப மேதி யாவையு
மொழிய நிலாத போது மாசற
வுதற வொணுது பாச மூடுமே.

என்ற செய்யுள் உள்ளது.

வரிசை எண் 1144 சுவடி எண் 541(a)

# தேரையர் வாகட சாத்திரம்

ஏடுகள் : 78. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 5–8 வரிகள். அளவு : 25X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1200. ஆசிரியர் : தேரையர் முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம் :**

**நாடி பரிச்சை**

கருப்படைத் தோனை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்க
ஒருவிர லோடில் வாதம்
மற்றிருவிர லோடில் பித்தம்
திருவிரல் மூன்றி லோடில்
சேட்டும நாடி யாகும்
பருவமோ டறிந்து நீங்கள்
பார்த்திடீர் பண்டி தாளே.

முடிவு :

துர்மாங்கிச அடைப்பு, கல்லடைப்பு, நீரடைப்புக்கும், கோவைத் தண்டு கிஷாயமும், விளக்கெண்ணெயுங் கூட்டி அதிலிடவும். மெதுவான சரீரங்களுக்கும் பூரண கற்பமான பெண்களுக்கும், விளக்கெண்ணெ யில்க் குடுக்கவும். சகல வியாதியுந் தீருங் கை கண்டது. மாத்திரை.

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் இடையிடையே ஏடுகள் இல்லை. தொடக்கத்தில் செய்யுட் களாகவும் பின்னர், உரைநடையாகவும் உள்ளன.

இதில் நாடிப்பரிச்சை, உள்ளுரை நாடி, நாடிக் குறிப்பரிதல், சுரக் குறிப்பு சுரம் விதம், வாதக் குறிப்பு, பீனிசக் குறிப்பு, கணவியாதிக் குறிப்பு, விப்புருதியின் குறிப்பு, பூசனிக்காய் கிரதம், முலைசுரக்க மருந்து, முசல் கண்ணுக்கு மருந்து, ரசாயம் சேர்வை செய்ய, மேகம், பிள்ளை களுக்குக் குளுமை எண்ணெ, கணங்களுக்குத் தயிலம், கணம் எட்டுக் கும் நெய், கணத்துக்கு எண்ணெ, கணத்துக்கு முலைப்பால் எண்ணெ, மாந்தகணம், சுளிகணம், கரப்பான், ஊதுகணம், வீக்கம், இதுக் கெண்ணெ முதலியன உள்ளன.

---

வரிசை எண். 1145 சுவடி எண். 541(b)

# [வாத பித்த குணமருந்து] வாகடம் பாடல் 40

ஏடுகள் : 9. ஏட்டின்நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 25X3செ,மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை 150. ஆசிரியர் : தேரையர்(?) முழுமை : முற்றும்.

தொடக்கம் :

வாதந்தா னென்ப தாகும்
    வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதஞ்
    சிறந்திடு முடக்கு வாதஞ்
சூதமே அசந்த வாதந்
    தோன்றிடு முகத்தில் வாதம்
பேதமாம் வாதந் தீரப்
    பெருத்திடு மருந்து கேளே. 1

**முடிவு :**

தீர்ந்திடச் செங்கத் தாரி
சேர்கரு நொச்சி கொத்தான்
சார்ந்திடுங் களச்சி புங்கு
சங்கொடு செங்கல் குப்பி
பொருந்திடுங் கிரந்தி ஞயகம்
புகழ்செருப் படையுஞ் சின்னி
கூந்தல்வே லிப்ப ருத்தி
கொடியவெள் ளுள்ளி தானே.
முற்றும்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது 132 முதல் 140 வரை உள்ள ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

இதில், பித்த குறை மருந்து, பித்தத்துக்குத் தயிலம், அய்யம்-20-குணம், தயிலம், மூலரோகமருந்து, கிருணிக்குணமருந்து, குன்மத்துக்கு மருந்து வாத பித்த குணமருந்து மேகத்தின் குணமருந்து காமாலைக்குண மருந்து, சூலை, புண், விஷகடி, பெருவியாதி குஷ்டம், தேமல், தாமரை, வெள்ளை, சிறங்குக்கு, சிரசைப் பத்திய வியாதிக் குணம், கவுசை விப்புருதிக்கு, வாயுவுக் குணமருந்து, காசம் பெரும்பாடு, எலும்புருக்கி, சூலைக்கி, சுரத்துக்கு, சன்னிக்கு, கறப்பானுக்கு ஆகியவை உள்ளன.

வரிசை எண். 1146 சுவடி எண். 541(c)

# அனுபோக வைத்தியம்

ஏடுகள் : 10. எட்டின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : 25X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

## அந்திர வாயுவுக்கு

நெல்லிப் பருப்பு ஒரு புடி - முளகு 7 - வெள்ளை வெங்காயப்பல்லு 1 - இது மூன்றும் நன்றாயரைத்து - மூணு உண்டையாய்ப் பிடித்து - புழுங்கரிசித் தவுட்டில் பிரட்டி - மூணு காலமே நேரத்துக்கு ஒரு உண்டை சாப்பிடவும் நாலு நாளைக் கொருக்கால் - அஞ்சு நாளைக் கொருக்கால் மூன்று விசை சாப்பிடவும் - பத்தியம் - உப்பு - புளி கவிச்சி ஒன்று மாகாது. கை கண்டது.

முடிவு :

### நீரளிவுக்கு அவிழ்தம்

கருவேலன் பிசின் - பசுவின் நெய்யிலே பொரித்து பாக்களவு கொள்ளவும். நீரிளிவு நிக்கும்.

**காலம் :**

இல்லை

குறிப்பு :

இதில், அந்திரவாயுவுக்கு, டி வேறு, ஏரண்டை வாதத்துக்கு அண்டவாதம், மூத்திரத்துக்கு. அண்டவாதம், (வே) அண்டவாதம் இசிவுக்கு மருந்து, வெட்டைக்கிச் சூரணம், மேக வெட்டைக்கி யெண்ணை மேகவெட்டை கை கால் புடிப்பு, வாதம், வாய்வுக்கு எண்ணெய், பிர மேகத்துக்கு, வெண்ளைக்கு மருந்து, வாத பித்த சேத்துமத்தினலே வந்த பிரமேகத்துக்கு, பிரமியத்துக்கு மருந்து, கெற்பந்தரியாமல் மேக வெட்டையினலே புண்ணகிக் கெற்பமில்லாததற்கு யெண்ணை முதலியன உள்ளன.

---

வரிசை எண். 1147 சுவடி எண். 541(d)

## வைத்தியத் திரட்டு.

ஏடுகள் : 80. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 4-6 வரிகள். அளவு : 25X3. செ மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 800 ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

### சன்னிக்கித் தயிலம்

குதிரைக்குழம்பு கொண்டுவந்து- அரைப்படி வேப்பயெண்ணை யில் போட்டு அடுப்பிலே யேத்தி யெரித்து-குழம்பு கருகியவுடனே அந்த எண்ணையில் வாய்விளங்கம்-கருஞ்சீரகம்-கஸ்தூரி மஞ்சள்-இது மூன்றும் பொடி பண்ணிப் போட்டு-இறக்கி வைத்துக் கொண்டு- வெள்ளைப்பூண்டுத் தயில மிறக்கி முன் சொன்ன தயிலமும் யிந்தத் தயிலமுங் கூட்டி, ரெண்டு துட்டிடை குடுக்க-யெந்த சன்னியுந் தீரும்.

முடிவு :

### (கண்ணுக்கு) கலிக்கம்

பார்மதங்க ளெளுதும் எழுத்தாணி தானும்
பண்புட நற்றரை யோர்கள் அருந்துங் காயம்

தாரணியில்ச் சன்னுசி அணிபொன் மாலை
தக்க சிவனு டுக்கதுயில் தானே சுட்டு
வாரணியுந் திருமாற்றில் உரைத்த சாற்றால்
மாத்தரைத்து உண்டை பண்ணிக் கொள்வீ ராகில்
காரணம்வந் தெதிர்த்தாலு முடனே தீரும்.
நம்புமிதை நுடறியும் உண்மை தானே.
யிதுக்கு உரை :—

ஆனை கொம்பு பொடி, பெருங்காயம், உத்திராட்சம், புலித் தோல், சுட்ட சாம்பல், சமன் கொண்டு வேலிப்பருத்திச்சாறு விட்டு அரைத்து கயறு பண்ணிக் கொள்ளவும்.

**காலம் :**

இல்லை,

**குறிப்பு :**

இதில் சன்னிக்குத் தயிலம், மேகத்துக்கு யெண்ணெய், பிரமி யத்துக்கு நெய், தலை முழுகத் தயிலம், பெரும்பாட்டுக்கு, ஷிவேறு, ஷிவேறு, வயிறு பொருமி களியிறதுக்கு, அசீரண பேதிக்கு, மேக உலந்த மாத்திரை, வாயுவுக்கு விரோசனம் கவி, சிவதை சூரணம், மேகசஞ்சீவி விரோசனம், பித்தத்துக்கு விரோசனம், திறபலி விரோச னம், சுகவிரோசனம், மேகனுதி விரோசனம், விரோசன சிந்தாமணி' முதலியன உள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண். 1148 சுவடி எண். 541(e)

## வைத்தியம் பலவகை.

ஏடுகள் : 27. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு . 5-6. வரிகள். அளவு : 25 × 3. செ, மீட்டர். எழுத்து : தமிழ். கிரந்த எண்ணிக்கை : 300. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றறது.

**தொடக்கம் :**

### சன்னிக்கித் தயிலம்

செய்தபடி சன்னிக்கித் தயில மொன்று
செப்புகுரேன் வசம்புடனே வெள்ளை யுள்ளி
உய்தமுட னிலவேறு முசுறு முட்டை
உறைப்பான யிவையுடனே கோழி முட்டை
நெய்தமுடன் நெய்நாளி வேப்பெண்ணை கூட்டி
நிறைவாக வகைக்கிஒரு பலமாய்க் கூட்டி
பெய்யுமென்ற ஆமணக் கெண்ணை நாழி
பேருக வடித்ததிலே வைத்துக் கொண்டே

முடிவு :

## பால சஞ்சீவி மாத்திரை

| | | |
|---|---|---|
| ரசம் வராகனெடை | 1. | கடுக்காய்த்தோல் வராகனெடை 1. |
| கெந்தி ,, | 1 | இவ் ஆறு சரக்கையும் முன்னுடி ரசம் |
| சுக்குமாவு , | 1 | கெந்தகம் ரெண்டையும் சேத்து அரைத்து |
| வெங்காரம் ,, | 1 | பிறகு பற்ற சரக்கும் சேர்த்து அரைத்து |
| சுத்திசெய்தவாளம் | 5 | வெண்ணீர் விட்டு ஒரு சாமம் அரைத்து |

உளுந்து பெரிதும் பட்டாணி பெரிதும் உருட்டி சுரம், சன்னி, கணை, இசிவு இதுகளுக்கு தக்க அனுபானத்தி லிட தீரும். பெரியவாளுக்கு பேதிமருந்தாகவும் உபயோகிக்கலாம். கைகண்டது. குரு சகாயம்.

காலம் :

நள ஸ்ரீ ஆவணி மீ 18உ

குறிப்பு :

இதில் சன்னிக்கித் தயிலம், வயத்துக்கட்டிக்கு எண்ணெய், மூக்கில், காதில், சீ விழுகுறதுக்கும், ஒருதலை நோவும், மண்டைச் சூலைக்கும் புகை, சகல விஷத்துக்கும் சூரணம். பேய்நாய், பேய்நரி கடிக்கு, நட்டுவக்காலி தேள், மண்டூரங் கொட்டினால், எரிகுன்மத்துக்கு, அசீரணவலி பக்கவாயிவுக்கு லேகியம், சகல கறப்பானுக்கும் எண்ணெ சன்னிக்கும் வாதத்துக்கும் யிளம்பிள்ளை வாதத்துக்கும் தயிலம், விற வாத மருந்து, தாளகம், பதங்கம், முதலியன உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

வரிசை எண். 1149 சுவடி எண், 542

## புலிப்பாணி பலதிரட்டு - முப்பு முறை

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு ; 7-8 வரிகள். அளவு : 28 × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 500. ஆசிரியர் : புலிப்பாணி. முழுமை : குறைபாடுடையது.

தொடக்கம் :

### முப்பு முறை

வேதாந்த நாயகியே விமலி வேணி
  வீரமா காளியம்மா ருத்திர ரூபி
நாதாந்தப் பேரருளே மகேசுரி வீரி
  நாரணியே காரணி தேவி சத்தி
மூதாந்த மூர்த்திபரா பரையே துற்கை
  மூவருக்கு முதற்பொருளே யானந் தாயி
மாதாந்த மையீன்ற ஏக வல்லி
  மாமுகத்தோன் பலதிரட்டு முப்புத் தானே. 1

முடிவு :

## வியாதியஸ்தனுக்கு புத்திகூறல்

நவின்றிட்டோம் புவிதனிலே வைத்திய மார்க்கம்
நன்றாகச் சொல்லிவைத்தே னின்னூல் வேண்டும்
பவின்றிட்ட நோயாளர் வைத்தி யோர்க்குப்
பண்பாக தொழுதேற்றி தாம்பூல மீந்து
இவின்றிட்ட மவையெல்லா மவர்க்குச் சொல்லி
இதம்பெறவே செய்தபின்பு அவிழ்தங் கொள்வாய்
கவின்றிட்ட போகருட கடாச்சத் தாலே
காசினியில் புலிப்பாணி யைஞ்ஞூறு முற்றே. 501

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது மருத்துவச் சுவடி எண் 196(a)/D 313 போன்றது. அதைவிடச் சிறந்த பிரதி. அதில் 99 பாடல்கள் உள்ளன. இதில் 501 பாடல்கள். இடையிடையே பாடல்கள் இல்லாமல் உள்ளன. இதில் 9-18, 21-94 ஏடுகள் இல்லை

இதில் முப்பு முறை, ரசக்கட்டு, திலக முறை, ஜாலக்காள் பூசை, அஞ்சனம் பச்சைப்பாம்பு வித்தை, மூலிகை சாலம், தெய்வ ஜாலம், எலுமிச்சம்பழ வித்தை, நோக்கு வித்தை, கெந்தக நீர், வாலை ரசம், அண்ட மெழுகு, உப்பு செந்தூரம், மனோசிலை மெழுகு, ஆனைக்கால் தீர லேகியம், அர்த்தஜதீசுர மாத்திரை, அக்கர சஞ்சீவி மாத்திரை, பிள்ளைக்கி பேதி மாத்திரை, முதலியன உள்ளன.

---

வரிசை எண் 1150. சுவடி எண். 543.

## வைத்திய சிந்தாமணி

ஏடுகள் : 70. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6–7 வரிகள் அளவு : $31\frac{1}{2}$X2½ செ மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1500. ஆசிரியர் : தன்வந்திரி. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடுங்காது-பூக்கொண்டு
துப்பாத் திருமேனி தும்பிக்கை யான்பாதந்
தப்பாமல்ச் சார்வார் தமக்கு.

முடிவு :

விற்ம்மதேவன் சாசுபதி துர்க்கை வயிரவன் ... ... ... ... ... — (நம) ஷ்கரிக்கிறேன். யிந்த வயித்திய சிந்தாமணியிலே விக்கினம் வராம ... ... ... ... ஆசாரியார் பரமர் சொல்லுகுன்ர ஸ்ரீ வச்ச தே(க) ரத்திரத்து ... ... ... ... க மெல்லாம் செவிக்கிற விரும்மாவுக்கு சமான மாயும் அமரெ ... ... ... ... ... யுடையவரானவர்க்குப் பிரிய புத்திரனுமாய்க் குணத்தி ... ... ... ... ... கனுமா ... ... ... ... லே சொல்ல பட்ட வயித்திய சிந்தாமணி யென்கிற சரசு ... ... ... ... ...

காலம் :

இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண். 157/D. 250ன் வேருயது. இது உரைநடையாக உள்ளது அது வெண்பாவாக உள்ளது. அதற்கு தன்வந்திரிபகவான் அருளிச் செய்த வைத்திய சிந்தாமணி வெண்பா, என்று பெயர். மேலும் சுவடி எண். 194/D. 311, 200/D 320, 250(a) /D. 440 250(b)/D. 441, 245/D. 428 இவற்றினும் வேருயது.

இதில் பயித்தியந் தீர, பாஷாண சுத்தி, மகா தாளிச சூரணம்' வாதோத்திர சூரணம், யிலங்குவாதிச் சூரணம், தாபாக்கினிச் சூரணம், ராசாதி சூரணம், மகா விஷமுட்டித் தயிலம், அரக்கெண்ணை பழுப்புக்கு வாதபித்த சேத்தும சயரோகத்துக்கு லேகியம், சீதசுர மாருமலுக்கு. சுராங்கிசம், வாலசுரத்துக்கு ராமபாண உண்டை, காரீயபற்பம், வங்க பற்பம், காந்தசுற்றி, வங்கபசுப்பம், லோகசுற்றி முதலியன உள்ளன.

---

வரிசை எண் 1151 சுவடி எண். 544

## விஷக்கடி மந்திரம்

ஏடுகள் : 11. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 5-7 வரிகள். அளவு : 32×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை 250. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம் :

சுவாமி குருவே

அஞ்சு கறத்தனே ஆனை முகத்தனே
இந்து யிளம்பிறை போத மகிழ்ந்தனை
நந்தி முகத்தனை ஞானக் கொழுந்தனை
பொந்தி வயற்றனை போற்றி கொண்டோமே.

**முடிவு :**

அட்சரமட்சிட்டட
கெட்டு சுல்லாணிக் கெட்டு
சத்துருக் கெட்டு அடைக்கச் சிவா
உரு லெட்சம்.
மாட்டுக்கு கழுத்தில் கட்ட சக்கறம்
(சக்கரம் உள்ளது)

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் பாம்புகடி மந்திரம், விஷக்கடி மந்திரம், தன்கடி பாடம் தடை கட்டு, திருநீற்று மந்திரம், நெருப்பு வாங்க, மாட்டுக்கு கழுத்தில் கட்ட சக்கரம் முதலியன உள்ளன.

இது அண்மைக்கால சுவடியாகத் தெரிகின்றது.

வரிசை எண். 1152 சுவடி எண். 545

## வைத்திய சாத்திரம்

ஏடுகள் : 63. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : $20\frac{1}{2}$X 3 செ. மீ. எழுத்து : தமிழ். கி எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

### அப்பறகப் பற்பம்

நெல்க்கனமாய்த்தட்டி சாண் அகல சாணீளம் வீளிவேர் பலந்தாணென்று மெழுகுபோல் அரைத்துப்பூசி ஓட்டில் வய்த்து ஓடு மூடி சந்து வாயி சீலை செய்து கெச புடத்தில் வையிக்க பற்பமாகும். யிதே எடுத்து வையுத்துக் கொண்டு எலுமச்ச பலத்தை நாலா கீறி புது சட்டியில் வையுத்து அதிலே கையான்ஞ்சார் நாளி விட்டு காடியில் நாளி விட்டுக் காயவைத்துக் கொண்டு ஷி பற்பத்தை பணவிடை வைய்த்து சாப்பிடவும், தீருமடா பாண்டுவகை, சேரும் நோய்கள், குறநோயி, குட்டம்ஞ் சூலை தேனிலே கொள்ளத் தீரும்.

**முடிவு :**

**சிரா பீனிசத்துக்கும் நீர் பீனிசத்துக்கும் தயிலம்**

| | |
|---|---|
| ஆதண்டை சாறு படி | 1/2 |
| முசிறு முட்டை சாறு படி | 1/2 |

தும்பை சாறு படி ½
வசம்பு வராகனெடை 1
கஸ்தூரி மஞ்சள் ,, 2
கருஞ்சீரகம் ,, 3
நல்ல எண்ணெய் படி ½

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் அப்பிரக பற்பம், காந்தபற்பம், தாம்பிரபற்பம், ரசபற்பம் வங்கபற்பம், காரியபற்பம், வேங்கில்பற்பம், திரா பற்பம், பித்தாளை பற்பம், எழுகறைபற்பம், கெருடக்கல்பற்பம், கல்நார்பற்பம், நாகபற்பம், வெள்ளிபற்பம், தங்கபற்பம், கெந்தகபற்பம், மண்டூரபற்பம், அஞ்சனக்கல் பற்பம், தாளகபற்பம், சாதிலிங்கபற்பம், வீரபற்பம், பொரிகாரபற்பம், சாத்திரவேதிபற்பம், குந்திருக்கபற்பம், பவளபற்பம், (வேறு) பவளபற்பம், வயிரபற்பம், ரெத்தினபற்பம், பாசாணபற்பம், நமச்சார பற்பம், உப்புபற்பம், ஆமையோடு பற்பம், முத்துநீந்துபற்பம் முதலியன உள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண். 1153 சுவடி எண். 546

# அகத்தியர் அட்டாங்க தண்டக பச்சணி-81

ஏடுகள் ; 18 ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு ; $20\frac{1}{2} \times 3$. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 400, ஆசிரியர் : அகத்தியர், முழுமை : முற்றுமுளது

**தொடக்கம் :**

பதுமம்வர பாணமுதற் முத்த வாலை
 பறச்சியெனும் வசையுடைய சிறுபெண் ணுத்தாள்
சதுமுகனு சிறுதையத்தில் விஞ்சை போல
 சகல(முமே) மனோன்மணியாய்த் தானாய் நின்று
முதுமறைபோ லருணமு லமந்து மாது
 முழுமதியாய் ஆகார முழக்க மாகி
கெதிமோட்சம் வேணுமென்று பரத்தில் சென்று
 கீழ்த்திசையை நோக்கிதவஞ் செய்தாள் பாரே.

**முடிவு :**

தானவனைய் நின்றுதவஞ் செய்ய வேணும்
சற்குருவின் தெரிசினத்தைக் காண வேணும்
பானமுற்த முண்டுபசி தீற வேணும்
பங்கயத்தில் தெரிசினங்கள்ப் பற்ற வேணும்
நானவனைய் நின்றுஉப ணிடத மாற்கம்
நற்கமல மாயிரத் தெட்டிதனைப் பத்தி
கோனருளால் நின்றவனே நீனு வென்று
குருவிருக்குஞ் சன்னதியை குவிந்து போத்தே. 81.

குருவே துணை
சிதம்பரம் ஏடு

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் அஷ்ட்டாங்கம், திருமந்திரம், அம்மாவாசி, குளிகை, ஏகாட்சரம் ஆகிய தலைப்புக்கள் உள்ளன.

---

வரிசை எண் 1154 சுவடி எண். 547

# கருவூரார் [நொண்டி] முன்னூறு

ஏடுகள் : 55. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 6-7 வரிகள். அளவு : 38X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 1600 ஆசிரியர் . கருவூரார் முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

... ... ... ... ... ப்புக்கல்லு புத்துரிசை வெளுக்கும். மண்ணுப்பு னேண்டி யிந்துப்பு நீருப்பு ஞபிவெள்ளை யினங்குமந்த பாசானம்
துள்ளியைக் ............. முத்துப்பள்ள முடுத்தா ரஞ்சுக சாரங்கூலி
சூதனைக் கட்டுந் துத்தங் கெவுரி காரீயம் னெண்டி
உருக்குந் தொட்டி பொன்னிமினை நலப்படு ... ... ...

**முடிவு :**

ஆமப்பா ... ... ... ... .. ... சொன்னேன் அழிபுத்தி சொல்லஇல்லை
ஆமப்பா வேதை கண்டால் கறப்பதன் பின்பு கொள்வாய்
ஆமப்பா சித்தி யாகும் மரனரி பிறும்மா வானை
ஆ(மப்பா குருவின் பாத மடிதொழு திருப்பாய் வாழி
கருவூரார் னெண்டி எழுதினது முத்தும்
குருபாத முன்னிற்க
(கு)ழந்தை வேலர் பாதார விந்தமே கெதி

யிந்த கருவூரார் பாடின முன்னூறும் யிதை யறிவுள்ளோர்களறிந்து நித்திய காலமும் துதி பண்ணிக் கொண்டு பதினெண்பேர் பாதாரவிந் தமே கெதியென்று நம்பி தன்னுக்குள்ளே தானறிந்து விளையாடும் விளை யாட்டெல்லாம் வயித்தியம் வாதம் வசியம், தம்பனம் கெசகற்ணம் யிதுவெல்லாம் ... ... ... ... ... ரிக்குமென்று யீ(ஸ்)பரன் அருளிச்செய் ... ... ... ... ... உலகத்தோர் பிழைக்கவும் காட்டினோம். ஆதலால் அறி வுள்ளோர் அறியும்படிக்கி கட்ட ... ... ... ... ... ... ... ... ம்பத்தி அருளிச் செய்தாறென்றவாறு

வாலகுருபரன் முன்னிற்க
மதுரை மீனாட்சி சொக்கலிங்கம் பாதார விந்தமே துணை
யிந்த சாஷ்திரம் ... ... ... அப்பியாசம் பண்ணினார்
சுகமேயிருக்கவும் திருவிளம் பந்தினேன்.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

கருவூரார் நொண்டி நாடகம்' என்ற பெயரால் எமது சுவடி எண் 322(b)/D. 619 உள்ளது. இதில் உள்ள 'சித்தனும் வாயு வேக' என்ற பாடல் இச்சுவடியில் 243ம் பாடலாக உள்ளது. எனவே இவ் விரண்டு சுவடிகளும் ஒன்றே என்பது தெரிகின்றது. கருவூரார் நொண்டி 700' என்ற பெயரில் ஒருநூல் அச்சாகியுளது.

இதில் ஓரங்கள் சிதைந்துள்ளதால் தலைப்புக்கள் முழுமையாக இல்லை ஆயினும், சவுக்காரச்சுன்னம், ரசவாதம் பொ(ய்)யாது ஆணை, கத்தாளை பற்பம், தாரக்காரம், கலியுக கிறகம், (இவ்விடத்தில் சிவவாக்கியர் பாடல் திருமூல ரையனார் பாடல் முதலியன உள்ளன. ஏடு 20) கிண்ணம்வேதை அறியவும், அறிவு, கய்யாந்தகரை காயகல்பம், வாய்வு, கற்பம் முதலியன உள்ளன ஒருதலைப்பில் அருணசலம்கையெழுத்துஎன்றுள்ளது.

---

வரிசை எண், 1155 சுவடி எண். : 548

## போகர் எழுநூற்றுத் திரட்டு

ஏடுகள் : 99, ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள் அளவு : 36X3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 4000 ஆசிரியர் : போகநாயனார் முழுமை : (குறைபாடுடையது)முற்றும்

**தொடக்கம் :**

ஆனந்த மாய்நிறைந்த மாயி பாதம்
அகண்டபரி பூரணமா மய்யர் பாதம்
வானந்த மாகிநின்ற கிணேசன் பாதம்

மருவியதோர் மூலத்தில் நந்தி பாதம்
தானந்த மாகியதோர் காலாங்கி பாதம்
சனகருடன் வியாக்கிரமர் பதஞ்சலியின் பாதம்
போனந்த மாகியதோர் ரிஷிகள் பாதம்
போத்திஎழு நூத்திரட்டி புகலு வேனே.

முடிவு :

மாட்டிப்பார் மெழுகாலே கிண்ணி பண்ணி
மணங்கமட்டி ... ... ... ... தனைத் தள்ளிப் போட்டு
ஊட்டிப்பார் உப்புருக்கி அதிலே வாத்து
உத்தமனே உப்பினுட கிண்ணி தண்ணில்
தீட்டிப்பார் அர்த்த தூரி ... ...
சேர்ப்பான வாலுகையின் மேலே வைத்து
வாட்டிப்பார் சூதமது செறங்கை விட்டு
மயக்கெண்ணே சாறதனல் சுருக்குப் போடே. 695.

சிவமயம்
குருபாதமே கெதி

காலம் :

இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண். 292/D. 523. போன்றது பாடபேதங்கள் மிகுதியும், இதில் காணப்படுகின்றன. மற்ற விவரங்களை எமது காட்டலாக்கு 5ம் தொகுதி பக்கம் 419ல் காண்க

வரிசை எண். 1156 சுவடி எண். 549

## வைத்தியத்திரட்டு

ஏடுகள் : 27 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8–9 வரிகள். அளவு : 40X4செ. மீ எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1000 ஆசிரியர் : பலர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆகனுள் விந்துண் டாகி
ஆஞ்சுனுள் கருப்போலாகும்ப்
போகமு வஞ்சு ளுளில்
பொரு ... ... ... ... ...
... ... ... ... ... ... ... மா

மிரண்டினில் மார்மட் டாகும்
பாகமா மூன்றுந் திங்கள்
பகருந்தி மட்டு மாமே.

**முடிவு :**

யிட்டுவயி ரையெரிக்க யெண்ணே ... ... ...
யிடிமாய்ச் சிறுவறக்கி யிந்தக்கால
அட்டுவ அஷ்ட்டகண மானந்த
மாத்திச் சுறமுள்ச் சுறமுமு ... ... ...
... ... ... வயத்துக் களிச்சல் போய்
சொன்ன படிக்கிப் பற்றியங்கள்
வட்டுவ கவிச்சுதயிற் நெய்பால்
வேண்டவே ... ... ... ... ... மேலோரே.
வேலு மயிலுந் துணையாக வேணும்.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு**

இதில், முதற்பகுதி முறிந்திருப்பதால் தலைப்புக்கள் சரிவரத், தெரியவில்லை. ஆயினும் தேரைத் தோஷத்துக்கு, மாந்தத்துக்கு, விஷ மாந்தத்துக்கு மருந்து, களிமாந்த குணம், மாந்தத்துக்குப் புகை, வறக் கணத்துக்குக் கத்தாளை எண்ணெ, வறக்கணத்துக்குப் பிசனி நெய், முக்கு கணத்துக்கு மருந்து, ஷி வேறு, முதலியன உள்ளன.

வரிசை எண். 1157 சுவடி எண் 550

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 21 ஏட்டின்நிலைமை : மிகப்பழுதுபட்டநிலை பக்கத்திற்கு : 5-6 வரிகள். அளவு : $37\frac{1}{2}X2\frac{1}{2}$ செ.மீ. எழுத்து : தமிழ். முழுமை : முற்றுமுளது

**தொடக்கம் :**

### கெந்தகச் சுன்னம்

கெந்தியை -வி- எலுமிச்சம் பழச்சாற்றால் ..............................
ஓடுமுடி ஐம்பதொரு எருவில் புடம்போடச் சுன்னமா ..............................
ணவிடை சுண்ணம் போட்டு அந்தி சந்திக் கொள்ள ..............................

### சூட்டுக்குத் தயிலம்

நல்லெண்ணெய் படி தாமரைச்சார் ப ..............................

முடிவு :

அமுரியில் ஆட்டி வழித்து வெயிலில் வைத்து யகல்மூடி சுண்ணும்பு சீலே செய்து புடம் போடு ஆறினதோர் பின்பு சமன் சூதம் ஆட்டி அதை வழித்து ரவியில் வைத்து முழப்புடம் போட்டு பிறகு நாதவிந்து விட்டு அமர்த்தி துருசுதனில் தொந்தித்து முக்காப்புளி கவசம் மூன்று மண் சீலையதுனுல் கவுதாரிப்புடம் நன்று—முப்புவாகும்.

கோரக்கர் மை, பிணத்திலே....................

காலம் :

இல்லே.

குறிப்பு :

இதன் அட்டவணே எழுதிய ஏடு கடைசியில் உள்ளது. இதில் தலைப்புகள் உள்ளன.

வரிசை எண். 1158 சுவடி எண். 551

## வைத்திய திரட்டு

ஏடுகள் : 56. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8–9 வரிகள். அளவு : 37 ½ X 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2500. ஆசிரியர் : அறியக்கூடவில்லே. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

### லிங்க குழம்பு—அகவல்

சோதி லிங்கத்தின் போதிகையை
சுவாமியடி தான்ப ணிந்து
சாதிலிங்கக் குழம்புதனே சாத்தக்கேள்
விதலிங்கம் எண்ணரையாம் கூட்டி யிருகும்
ரசகல்ப்பூரம் சொன்ன சொன்னதொரு
நாவில்த் துகைபாதி நன்னறிய வேங்கமுன்னே
விளம்புமது கல்வத்தில் நங்காரம்ஞ்சுத்தி செய்து

முடிவு :

### கோடக சூழி மாத்திரை

| | | |
|---|---|---|
| லிங்கம் | விராகனிடை | 1 |
| பூரம் | ,, | 1 |
| வெங்காரம் | ,, | 1 |

| | | | |
|---|---|---|---|
| வாளம் | ,, | 1 | வாலைக்கட்டுவிட போக்குக் கட்டியிறுத்து |
| அக்கிளமகோஷ்டம் | ,, | 1 | ............................ |
| வெள்ளைச்சாரணைவேர் பலம் | | 1 | ............................ |
| கையாந்தகரைச்சாறு அரைப்பலம் | | | முஷ்த்தும் |

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் பலவகை மருந்துகள் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண். 1159. சுவடி எண். 552

## வைத்தியத் திரட்டு.

ஏடுகள் : 235. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு: 4 6 வரிகள். அளவு : $34\frac{1}{2}\times3$. செ மீட்டர். எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 8000 ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம் :**

**விரணம் உருகிற விதம்**

விரணமாகப்பட்டது இரண்டு விதமுண்டு. துஷ்டவிதமாய் இருக்கிற புண். ஏற்றமாயிருக்கிற புண். இது எப்படியெண்டால்

இஷ்த்திரி சங்கத்தினாலேயு(ம்) சரீரத்தின் கறப்பானாலேயும் பாண்டு சோபை னாலேயும் வீக்கத்தினாலேயும் வாதமதிகத்தினாலேயும் வருகிற துஷ்ட விதமாய் இருக்கிற புண் விரணமென்றும் பேற்.

**முடிவு :**

கூட்டியெட்டு ளிநீர் விட்டெட் டொன்றுய்க காச்சி
காச்கியதிலொரு குளிகை குடுத்தாயானால்
குடுத்தவுடன் தாகமது பேதிபோகும்
போகுமடா கஷாயத்தில் கஷ்த்தூரி போட்டு
குடுக்கவே தாகமுதல் மேதி மத்த
னோய்களெல்லாங் காணுதே ஓடு மென்று
உரைத்தார் பாரே

**காலம் :**

இல்லை.

## குறிப்பு :

இதில் இடையிடையே ஏடுகள் இல்லை. இதில் முதலில் "ஞளி குருணி பதக்கு, முக்குருணி, தூணி கணக்கு விபரம்" எழுதிய ஏடு ஒன்றுளது.

இதில் கொடி புத்துக்கு மருந்து, பவுத்திரத்துக்குக் களிம்பு, பேதி எண்ணெய், சுகபேதி, அதிமதுரபேதி, சிவதை பேதி, காமிபேதி, பொருசனவித்து பேதி, தூலியவகையாய் ஆராத புண்ணுக்கு மருந்து முதலியன உள்ளன. மற்றும் பல தலைப்புக்கள் உள்ளன.

oooooooooooo oooooooooooo

வரிசை எண் *1160* சுவடி எண். 553

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 150 ( 81-84; 86-126 ஆகிய ஏடுகள் இல்லை ) ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 6-9 வரிகள். கி. எண்ணிக்கை : 6000. அளவு : 35X3½ செ, மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : பலர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

### அமுர்த சக்கரைக் குழம்பு ரசாயனம்

சாத்தும் அமுற்தச் சக்கரை ரசாயனம்
போத்தக் கேண்மின் புவியினில் புகழ்ந்தே

சிந்தில் தண்டில் திகழ்சார் குறுணியும்
காய்ந்திடும் கையாந் தகரை குறுணியும்

ஆடா தோடையும் அமர்முசு முசிக்கையும்
நீடிட ளளநீர் நிகழும் பசுவின்பால்

## முடிவு :

வேளைக்கு ஒரு உண்டை சாப்பிடவும்
இருமலுக்கு பசுவின் நெய்யில்
இளப்பு வாயு அக்கினிமந்தம் சன்னி
இவ்வகை குணங்களுக்கு தேனில் சாப்பிடவும்
சுரத்துக்கு சும்மா சாப்பிடவும்
மீன் கருவாடாகாது.

## காலம் :

இல்லை

## குறிப்பு :

வாகடச்சுவடியாகுமிது. 190 ம் ஏட்டில், இந்நூலிலுள்ள, நோய்க்கான மருந்துகளின் பட்டியல் காணப்படுகிறது. அதன் தலைப்பில், 'யிந்த வாகடத்துக்கு தொகையேடு லெக்கம் பார்த்துக்கொள்ளவும்' என்றுளது.

oooooooooooo oooooooooooo

வரிசை எண் : 1161 சுவடி எண் : 554

# கொங்கணர் முதற் காண்டம் 500

ஏடுகள் : 66. ஏட்டின் நிலைமை ; மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 3000. அளவு : $37\frac{1}{3}$ X 4 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம் :

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
யகன்று நின்று மூலகுரு பதமே போத்தி
சோதியந்தத் துள்ளியிருக்கும் பெரியோர் பாதந்
துரிய வெளிக் குள்புகுந்த ரிசிகள் பாதம்

## முடிவு :

வேமப்பா நல்வினையுந் தீவினையுங் கெட்டு
வேதாந்த அந்தத்தை விரைந்து ஏத்தும்
நாமப்பா கண்டபடி மூலபதம் போத்தி
நலமாகச் சொல்லிவிட்டோம் அஞ்ஞூறு முத்தே. 515

குமரன் துணை

## காலம் :

இல்லை

## குறிப்பு :

இதில் வழலைச்சூறணம், வொமகதுளிர், அடிமூலம், நடுமூலம், மேல் மூலம், கறிஉப்பு, சுக்கிலம், பச்சைக்கற்பூரம் பிறவி, வெண்காரம், சவுக்காரம், வழலைப்பாம்பு. சீனக்காரம், அண்டவிகடம் முதலியன உள்ளன

51ம் ஏட்டில் ஒரு பக்கத்தில் பாதிவரை 403ம் பாடல் முடிவடையாமல் உள்ளது. பின்பக்கம் எழுதப்படவில்லை. 52ம் ஏட்டில் 409ம் பாட்டின் பிற்பகுதி முதல் தொடங்குகிறது.

வரிசை எண் : 1162. சுவடி எண் ; 555

# கொங்கணர் கடைக்காண்டம்—500

ஏடுகள் : 62 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 2000. அளவு : 38X$3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

ஆதியந்த மேயகண்ட....................

..... ..... ......................................

நீதியே நினவேது நினவங் கேது
நேரான சுழிமுனைதனை நினையா தார்க்குச்
சோதியேது துரியா துரிய மேது
துரியாதீதத் தடங்குஞ் சுருதி யேது
பேதியா தொருமனமே பிலக்க வேணும்
பிலத்தாக்கால் மவுனமது பிலக்குந் தானே. 1

## முடிவு :

வீருன நடுக்காண்ட மஞ்ஞூறுஞ் சொன்னேன்
வேதையிடு மூதற்காண்ட மஞ்ஞூறுஞ் சொன்னேன்
தாருன இன்னூற்கு மூன்று சூத்திரஞ்
தப்பாமல் சொச்சமொன்று தெளிந்த முத்தே. 500

குருபாதமுன்னிற்க
சகல சித்தாதிகள் பாதாரவிந்தமே கெதி

## காலம் :

981-ம் வருடம் பிரட்டாதி மாதம் 29 ந்தேதி நாயித்துக்கிழமையும் ஆதித்தவாரமுங் கூடின சுபயோக சுபதினத்தில் கொங்கணர் கடைக் காண்டம் அஞ்ஞூறும் முகிந்தது. முற்றும்.

## குறிப்பு:

இதில் முதலாம் ஏடு இல்லை. 2ம் ஏடு முதல் தொடங்குகின்றது. 2ம் ஏட்டில் தொடர் எண் 138 காணப்படுகிறது. இவை முதலாக ஏட்டுக்கு இரண்டிரண்டு எண்கள் உள்ளன.

இதில் சிவதெரிசனம், வடுகன் பூசை, சுப்பிரமணியர்பூசை, தெட்சிணு மூர்த்தி பூசை, பிரமன்பூசை, விட்டுனுபூசை, மயேசுரன் பூசை, சதாசிவ பூசை, பராபரன்பூசை முதலியன உள்ளன.

19, (155) ம் ஏட்டில் பிற்பகுதி எழுதப்படாமல் உள்ளது. 184ம் ஏடு ஒடிந்துள்ளது, வருடம் ஆய்வுக்குரியது.

வரிசை எண் 1163. சுவடி எண். 556

## தெட்சிணாமூர்த்தி - 205

ஏடுகள் : 35. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 8–9 வரிகள். கி. எண்ணிக்கை : 1200. அளவு : 35X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூறணமாயி உள்மூலம் பொரியியல் சூடாய்
புகையெழு ப மேகமதாயி சிரசில் சூடாய்
காரணமாயி நீற்க்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுனல்ச் சூலை ரோகம்

**முடிவு :**

நோயி மிகுந்து சாவில்லை ஒருநா ளுந்தான்
நுன்னிமையாய்ச் சரக்கை யெல்லா நீத்திக் கொண்டு
வாயமுடன் கிரதமொடு யெண்ணை செய்து
வைத்திடுவாய் யனுபான வைத்திய முற்றே. 205
குருவே துணை

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது 129-ம் ஏடுமுதல் தொடங்குகின்றது. முதலேடு நடுவில் துளை யாக உள்ளது. 130-ம் ஏட்டின் பின்பக்கம் வெறுமையாயுள்ளது.

இதில் அயபஷ்பம். காந்தபஷ்பம். தாம்பூரபஷ்பம், ரசபஷ்பம், வெள்ளியபஷ்பம், பித்தளைபஷ்பம், ஒழுகரைபஷ்பம், கெருடக்கல், கெருடக்கல்பஷ்பம், தாளகபஷ்பம், சாஷ்திரபேதி, ரெத்தினபஷ்பம், ஆமையோடு, முத்துநீறு, கற்பூரச்சுன்னம், பொன்னிமிளை, தங்கம் நீறும், மேகாதிதயிலம், முதலியன உள்ளன.

வரிசை எண் : 1164 சுவடி எண் ; 557

## கம்பளிச்சட்டை கைலாசநாதர் சூத்திரம்

ஏடுகள் : 42, ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு: 7–8 வரிகள். கி. எண்ணிக்கை : 1000. அளவு : 36X3 செ. மீ. ஆசிரியர் : கம்பளிச்சட்டை கைலாசநாதர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

சூத்திர மோதுமுன்னே சொல்லுகிறேன் கினேசன் காப்பு
சாஸ்திரம் நிறைந்து பொங்கிச் சராசர மெங்குந் தானாய்
தோத்திரம் பொருளுந்தானாய்ச் சொல்லுத்தம் வுரைத்து நன்றாய்
போத்துற புறம்புள் ளான பூரணங் காப்புத் தானே. 1

முடிவு :

குருவான வயிரமொன்று சூதம் பத்தில்
கொட்டியல்லோ மூலைப்பாலா லரைத்து வாங்கி
அருவான புடம் போடச் சூதங் கட்டும்
அப்பனே கட்டியதோர் சூத மொன்று
உருவான நவசூதம் பத்தி லிட்டு
உறவரைத்து மூலைப்பாலாலிருக்க லாடும்
திருவான சூதமது தொந்த மேறுஞ்
சேர்த்தரைக்க நூறு தொந்தம் சோக.........க் காணே 168

காலம் :

இல்லை

குறிப்பு:

ஏடுகள் 129 லிருந்து தொடங்குகின்றன. 165, 166 ம் ஏடுகள் பாதியாக முறிந்துள்ளன. ஒடிந்த துண்டுகள் இரண்டும் இருக்கின்றன.

இதில், உப்புக்கட்டு, அயக்கட்டுக்குப் பரீட்சை, தாளகச்சுன்னம், வங்கசெயநீர், நிட்டைக்குக் கற்பம், பத்தியம், கற்ப மீறினால் மாற்று, சாஸ்திர லெக்கம் ஆகியவை உள்ளன.

oooooooooooooooooooo

வரிசை எண் 1165 சுவடி எண். 558

## கொங்கணர் கலைக்கியானம் - 200

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 700. அளவு : $36 \times 3\frac{1}{2}$ செ.மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

எட்டெட்டா யாதியிலே கலைக்கியான சூஷ்சம்
எண்ணே பூமிக்கு ஞுன்கில் நாலு மொன்ருய்
விட்டகுறை யுலகமதி லறிய மாற்கம்
வெளிதோண குருமூலர் ரைவிற் சொல்ல

**முடிவு :**

ஞசிகொண்டு கதிர்போலே குத்தி காயவைத்து
எடுத்துக் கொண்டு சாவலென்ற புடத்தில் போடு
திருநீறு போலாம் பனிநீரைத் தெளிந்து பாரு
கசகசென்று பொங்கியது தாஞ

ஓம் ஸ்ரீம் கிலிவம் யிறியு
ஆம் ஊம் யிம்
ஓம் ஸ்ரீரிகங் கங்
ஆ மென்று லாலிலூ

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் செய்யுள் எண் 115-க்குப் பிறகு 16-ம் ஏட்டில் 344-ம் செய்யுள் எழுதப்பட்டு தொடர்கிறது இதன் பின்பக்கத்திலிருந்து 4 பத்தியாக எழுதப்பட்டுளது

இதில் சாதியறிய, பதியில் நடன மூற்பலர், ஸ்ரீங்காரம், பூரணத்தைச் சேர்ந்தவன் சித்தன், பதினெண்பேர் சொல்லிய நூல் மறைப்பு, வெள் வங்கக் கற்பம் மவுனம், மணியினு லட்டகமம் முதலானது, நீர் நெருப் பின் உறவின் விபரம் அறியாத புலையர்கள் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1166 சுவடி எண் : 559

# கருக்கொண்ட பெண்களுக்கும் பிள்ளைகட்கும்

ஏடுகள் : 14. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 3-5 வரிகள். கி. எண்ணிக்கை : 300. அளவு : 39X2½ செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஸ்ரீராம ஜெயம் ஓம் நமோ நாராயெணாயஸி
ஓம் க்ஷீராப்தி நாதன்

### கெற்ப ஸ்ரீ களுக்கு

கெற்பமே தரித்த பேர்க்குக்
கிளம்பி யுஷ்டிணத்தைத் தன்னுல்
முற்பட யுதிரஞ் சாய்க்கில்
முழுகநாள் வலியுங் கண்டால்
செப்பமாய் துவாவலே நிக்க
செய்திடு மஷீழ்தங் கேளு
தப்பில்லா முனிவன் சொன்ன
சாஸ்திரப் படியி தாமே

**முடிவு :**

கருணையாய் திரிகடுகு பூசனே ஓமம்
வாச்சுதே கிரும்பு உள்ளி கடுக்கா யோடே
மணமுள்ள பெருங்காய மீந்துப் பாமே
ஆச்சுதே சதகுப்பை யிவைக ளெல்லாம்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது மை பூசப்படாத ஏடுகளைக் கொண்டது. 10-வது ஏடு முன் பக்கம் பாதியும் பின்பக்கம் முழுதும் எழுதப்படவில்லை 77 பாடல்கள் உள்ளன.

இதில் சுளக ஷேபம், யெல்லா சுளக்குக்கு ஷோபம், அதிசாரம் கிராணிக்கி, வீக்கத்துக்கு ஷோபம், குழந்தை வாயுவுக்கு முதலியன உள்ளன.

வரிசை எண். 1167 சுவடி எண் 560

## அகத்தியர் நருக்காண்டம் - கர்மநிவர்த்தி-300

ஏடுகள்: 39. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 1500. அளவு : 35 × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூரணமாய் மூலமுதல் ஆரு தாரம்
புரியஷ்டம் திசைவாய்வு நாடி மூன்று
காரணமாய் இடைபின்ளுஞ் சுழிமுனை யாதி
கலந்து நின்ற வாதபித்தம் சிலேற்பன மாகி

**முடிவு:**

தரிசனமாங் கணங்களிலே வருவ தேது
கக்குமடா செருவருக்குத் தேவா முற்றம்
கரிசன்னமாம் மின்னூலில்க் கற்மந் தற்மம்
கட்டாக மருந்துவகை கணக்கு முத்தே. 302.

குரு முன்னிற்க

**காலம்;**

நளா வருடம் அர்ப்பிகை மாதம் 22-ம் தேதி அன்னவாசலில் இருக்கும் சிதம்பரமாதருயர் குமாறன் மருதுமாதருயன் அகஸ்த்திய சுவாமியள் அருளிச்செய்த நடுக்காண்டம் கரும நிகர்த்தி யெழுதின நன்மை.

**குறிப்பு:**

இதில் மேகராசாங்கத்தியிலம், பத்தியம். அப்பிரக செந்தூரம், மேகத்துக்குத் தயிலம், சயரோகம் வரலாறு, கர்மநிவர்த்தி, தாளகபற்பம் தூதுவளை லேகியம், குட்டத்துக்கு. வாதம் வரலாறு, வாதாராசாங்கம். குன்மத்தின் குணம் கருமநிவர்த்தி முதலியன உள்ளன

இன்ன கருமத்தினல் இன்ன நோய் வருகிறது என்றும், அதற்கு நிவர்த்தியும் இதில் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண். 1168 சுவடி எண் 561

# அகத்தியர் பன்னிரண்டு லட்சத்துக்கு சூத்திரம்-1200

ஏடுகள்: 67 ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு! 6-7 வரிகள். கி.எண்ணிக்கை; 1400 அளவு: $28\frac{1}{2} \times 3$. செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாய்ந்து
வாக்படத் தொகுதிக் கெல்லாம்
வகுத்தசூத் திரம தாக்கி
ஆகம விதியி னூலா
லடர்ந்திடும் நோய்கட்க் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வேன்
புலத்தியா பொருந்தக் கேளே. 1.

**முடிவு :**

நாமப்பா சொல்லுகிறோம் சீனக் காரம்
நாகப்பூ திரிகடுகு தேவதாரம்
ஓமப்பா திரிபலையுஞ் சவுக்கார மேல்
முசித்தவே யெவட்சாரம் நறுங்கோஷ்டந் தானே. 281.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில் மேக வுற்பத்தி, வெட்டை, கிரந்தி, சூலை, ருத்திரவாய்வு, சுகசன்னி, மூலம், பெருஞ்சூலைக் குணம், தெற்பசூலை, சூதகவாய்வு, நேத்திர நோய் முதலியன உள்ளன.

இதன் முகப்பில் "இந்நூல் வயித்தியத்துக்கு மகா தெளிவான நூல்" என்று எழுதப்பட்டுள்ளது.

oooooooooooo

வரிசை எண் 1169 சுவடி எண். 562.

## அனுபான வைத்தியம்-205

ஏடுகள்: 47. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது (ஓரங்கள் அரிக்கப் பட்டுள்ளன) பக்கத்திற்கு: 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 2000. அளவு: $29\frac{1}{2}$X3 செ·மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

பூரணமாய் மும்மூலம் போரியில்ச் சூடாய்
புகையெழும்பி மேகத்தால் சிரசில்ச் சூடாய்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவினால் ..........லச் சூலை

**முடிவு :**

நோய் மிகுந்த சாவில்லை யொருநா ளுந்தான்
ளுன்மையாய்ச் சரக்கெல்லா நீற்றிக் கொண்டு
யுவாயமுடன் யெண்ணையோடு கிறுதஞ் செய்து
வைத்திடுவா யனுபான வைத்திய முற்றே. 205.

குருவே துணை
கணபதி துணை

**காலம்:**

இல்லை

**குறிப்பு**

இது தட்சிணாமூர்த்தி 205 போன்றது. முகப்பு ஏடு இல்லாததால், அனுபான வைத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது. இது தட்சிணாமூர்த்தி 205-ஏ தான். ஆனால் பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

இதில் அயபற்பம், காந்தபற்பம், வெங்கலபற்பம், திருபற்பம், சாத்திரபேதி நீறு, உப்பு பற்பம் முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 556/D எண் 1163 போன்றது.

---

வரிசை எண் 1170 சுவடி எண். 563(a)

# வைத்தியத் திரட்டு [லோக பற்பம்]

ஏடுகள் : 15 (38-வது ஏடுமுதல் உள்ளது) ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். கி எண்ணிக்கை: 500. அளவு : 29X3½ செ. மீட்டர் எழுத்து : தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

.................................................த்துக்கு
பாச்சிடு காரசாரம் வென்றுக வீரம்
பூரம் வெள்ளையும் வெடியும் போடு
ம ... ..... ...................ளுய்ச்சேர்ந்து ..... .....
வடித்தரை கெந்தி சூதம் 60

**முடிவு :**

நாகமே யணிந்த மூர்த்தி
நவின்றது ளுன்சொன் ளுமே. 147.

மேலதாம் லோக பற்பம்
மிகுந்திடுஞ் சொற்ண பற்பம்
சாலவே ரெண்டா தொண்டாய்ச்
சமனிடை ........................

**காலம்:**

இல்லை

## குறிப்பு :

இது 38ம் ஏட்டிலிருந்து தொடங்குகிறது முதல் 59பாடல்கள் இல்லை

இதில் காரீய பஷ்பம், தாம்பிர பற்பம், வெள்ளி பற்பம், மகா குளிகை நெல்லிக்காய் லேகியம், மிளகு லேகியம், வெள்ளுள்ளி லேகியம் கடுகு லேகியம், வெந்தைய லேகியம், ஓம லேகியம், காய லேகியம் பத்தியவகை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1171 சுவடி எண் 563 (b)

# தன்வந்திரி கருக்கிடை சூத்திரம்-200

ஏடுகள் : 42. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-10 வரிகள், கி. எண்ணிக்கை : 1400. அளவு : 29X3½ செ.மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : தன்வந்திரி. முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

ஆதியந்த மில்லாம லகண்டபரி பூரணமாய் நின்ற
சோதியந்த வான்மயிலே சோற்பெரிய - வாதியேகேள்
நாதியந்த மானதொரு சரஷ்பதியே காப்பு
வாதியெந்தன் பங்கிலுரை யாமாதி.

## முடிவு :

வன்னதொரு ஞானமொடு வந்த பேர்க்கு
வளமான கிருமையுடன் நித்தியகாலம்
கன்னதொரு யவரிடத்தில் ..........பேர்க்கு
கனமான மோடியிலே யனந்தம் போக்கே 196

போக்கான யென்நந்தி யருளி னாலே
............ ............ ............ ............

**காலம் :**

இல்லை.

## குறிப்பு :

இதில் சுரமாத்திரை குங்குமப்பூ மாத்திரை, வயிரவன் மாத்திரை, கிரந்தி புண்ணுக்கு மாத்திரை, மேக ராசாங்கத்தெண்ணை, நடுக்கு வாதம் முடக்கு வாதத்துக்குத் தயிலம், மேகத் தெண்ணை, பெரும்பாட்டுக்கு எண்ணை, மூதண்டத் தயிலம், சயத்துக்குத் தயிலம், மூலத்துக்குத் தயிலம் முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 248(a)/D 432 போன்றது. பாட வேறுபாடு கள் மிகுந்துள்ளன. இதன் தலைப்பில் 'தன்வந்திரி கருக்கிடை சூத்திரம் 20' என்றுளது.

❖❖❖❖❖❖❖❖❖

வரிசை எண். *1172* சுவடி எண் 564(a)

# திருமந்திரம் - வைத்தியம்

ஏடுகள் : 3 ( 87-ம் ஏடுமுதல் உள்ளது ) ஏட்டின் நிலைமை : பழுது பட்டநிலை. பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100. அளவு: 28X3 செ.மீட்டர். எழுத்து : தமிழ் ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

அவ்வுதித்தே யுடலதிலாம் சிவமதி
உவ்வுடல்க் காலம் ஒன்றுக்கு நாலதாம்
பவ்வுடல் ........... பதத்தது நின்றதை
நவ்விடக் காட்டி நாட்டினன் நந்தியே 1

## முடிவு :

சேர்க்கையும் உண்டிடத் தேகமுஞ் சித்தியே 27
சித்திக் களைனச் செப்புவார் மெத்த
சத்தி சிவபூசை தான்செய்ய மாட்டார்கள்
முத்திக்குப் பாதை முயன்று அறி......
........... ........... ........... ...........

## காலம் :

இல்லை

## குறிப்பு :

இது தத்துவத்தை உள்ளடக்கிக் கூறுகின்றது.
ஆவாரம்பட்டைத் தயிலம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 1173 சுவடி எண். 564(b)

# திருமூலர் பாடல்

ஏடுகள் : 4. ஏட்டின்நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 4-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100· அளவு : 28X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

............ ............ ............ ............
பண்ணைப் பொறிஐந்து பதையாம லவின்றிடும்
கண்ணுன கற்பத்தால் காயம் செயம்பண்ணும்
அண்ணுந் தலையாதே அடங்கலுஞ் சித்தியே.

**முடிவு :**

பொறியாலே கெட்டார்கள் பூமியி லுள்ளோர்கள்
மறிய மனத்துக்கு வந்துது மாமாய்கை
நெறியாக நில்லாமல் நினவை யறியாமல்
சிறியா ருடுத்த சித்தாடை யானதே. 33

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் 24-ம் பாடல் முதல் 28-ம் பாடல் முடிய எழுதப்படவில்லை.

••••••••••••••••••••••••

வரிசை எண் : 1174 சுவடி எண் : 564(c)

# திருமந்திரம் - 31

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை ; பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100 அளவு : 28 X 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : திருமூலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

**காப்பு**

அய்ந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞான கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

**நூல்**

இயமம் நியம மெண்ணிலா வானந்தம்
நயமிகு பிராணய நாமம் பிறகுதியாகாரம்
சுயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமறு மட்டாங்க யோகம் தாமே

**முடிவு :**

சாவதங் குப்புமுன் னப்பினில் சார்தல்போ
லாவு பெருங்கனல்க் கீரமுந்தா னில்லை
சாவுன் பக்கல் வெளியே சற்றிலம்
சாவுச் சமாதி யியம்புதான் பதமே.
குருபாதமே கெதியென்று நம்பவேணும்
பரிபூரண சகாயம்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் அட்டாங்க யோகம் முதலானதுகள் கூறப்பட்டுள்ளன.

oooooooooooo oooooooooooo

வரிசை எண். 1175. சுவடி எண். 565

## வைத்தியத் திரட்டு.

ஏடுகள் : 30. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்ட நிலை பக்கத்திற்கு : 4-13 வரிகள். கி. எண்ணிக்கை : 1000 அளவு : 28X3½ செ. மீட்டர் எழுத்து : தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**சகரகொடி தெண்டாமிசம்**

சக்கரை கால்பலம் போட்டு யிப்படி முரைதப்பாதே
யிப்படிக்கு முணுநாள் கொள்ள முதி ...........
வெள்ளை பிறமேகம் வெட்டை யிதுவெல்லாம் போகும்
சார்வான பளமுளகு முப்பத்திரண்டு மூணு பளமுளகு 35

**முடிவு :**

சுக்கிரன் புத்தி தோம்மணுமே யெமனுலக மடைவான்பாரு
சங்குரன் மேதாணை யிட்டேன் கமலவக்கு சாத்தடா
யென்மகனே மச்சகேந்திரா முற்றும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் பலவிதமான ஏடுகள் உள்ளன. பலவிதமான வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. பலவிதமான மந்திரங்கள் சக்கரங்களுடன் உள்ளன மச்சகேந்திரா என்றசொல் சில ஏடுகளில் காணப்படுகின்றது.

oooooooooooooooooooo

வரிசை எண் : 1176 சுவடி எண் : 566 (a)

## அகத்தியர் ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள் : 37. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1000. அளவு : 31X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூரணமாய் நிறைந்தகுரு பறைதா போத்தி
புகலுகிறேன் வயித்தியரெத்தின சுருக்கந்தன்னை
வாரணமா முகத்தோனைப் பகிர்ந்து போத்திய
வயித்தியந்தா னிந்தமுன்னூத் தறுவதுக்குள்

**முடிவு :**

வானென்ற வயித்தியத்தைப் பாத்தாயானல்
மைந்தனே தன்மந்திரிக் காப்பாம் பாரே. 261

முற்றும்

(சாரா) திறையே திருவோணம்
சிறந்த கேட்டை ஆயிலியம்
ஓரா முண்டு முறிடம்
ஓங்கி பரணி யின்னுளில்
பேரா அரவும் தீண்டிசெண்டு
பேயோ டாடி சீவன்வறிலும்
சீரா கெருடன் மீதேறி
திருமால் வருலிம் திரும்பா 262

முற்றும்

**காலம் :**

யேற்விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 17ம் தேதி
தோதண்டி வேலப்பராச குமரன் சுப்பருசர்
ரெத்தினச் சுருக்கம் யெழுதி முகிந்தது. முஸ்தும்
குருபாதமே கெதி
சிவகாமி கிடாட்சமுண்டாகவும்

## குறிப்பு:

சுவடியில் தலைப்பிலும், செய்யுளிலும், அகத்தியர் ரெத்தினச்சுருக்கம் 360 என்றுளது. கடைசியில் 262 பாட்டு முடிந்ததும் முற்றும் என்றுளது.

இது எமது சுவடி எண் 249/D 439 போன்றது சுவடிஎண் 296 / D 526லும் காணப்படுவது.

வரிசை எண் : 1177 சுவடிஎண் 566 (b)

# வைத்திய சிந்தாமணி

ஏடுகள் : 45 ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1200. அளவு : 30X2½ செ. மீ எழுத்து : தமிழ். ஆசிரியர் : வல்லபேந்திரன். முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

விஷ்ணுதேவன் ஸ்ரீ மகாதேவன் பிரும்மதேவன் சரசுவதி துர்க்கை வயிரவன் கணபதி இவர்களை நமஸ்கரித்து, இந்த வைத்திய சிந்தாமணியிலே விக்கினம் வாராமலிருப்பான் பொருட்டு ஆசாரியபரமர் சொல்லுகிறர் ஸ்ரீ வத்ஸகோத்திரத்திலே கனுவுகம் லோகமெல்லாம் சேவிக்கிற பிரம்மாவுக்கு சமானமாகவும் அமரேஸ்வர பட்டரென்கிற பெயரையுடையவரானவர்க்குப்பிரிய புத்திரனுமாய் குணத்திலகிகனுமான வல்லபேந்திரனலே சொல்லப்பட்ட வைத்திய சிந்தாமணி யென்கிற சாஸ்திரம்.

## முடிவு :

நெடுந்தூரம் நடக்கலாம் கை கால் கடுக்காது. அழகுண்டாம் ரெண்டுமாதம் திண்டால் சரீரம் எத்தியுண்டாம்

## காலம் :

இல்லை

## குறிப்பு :

வல்லபேந்திரர் வைத்திய சிந்தாமணி இரண்டாம் விலாசம் எமது சுவடி எண் (110 [a]/D 169ல் இருக்கிறது. இது முதல் விலாசம் போலும் இடையிடையே ஏடுகள் இல்லை. மூனு பத்தியாக எழுதப்பட்டுள்ளது.

இதில். நஷ்சேத்திர மரண கெண்டிகம், தூதுவளைவேற் பற்பம், பித்த வாயுவுக்கு மருந்து, முளைவெளியிலே கண்ட மூலத்துக்கு, மந்தாக்கினி முதலான சூறணம், நேத்திரவாயுவுக்கு கிருணிக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண். 1178 சுவடி எண். 566(c)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி எண்ணிக்கை : 250. அளவு : 30X3செ.மீ எழுத்து : தமிழ். ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

| | |
|---|---|
| லிங்கம் வராகனெடை | 1 |
| ரசகற்பூரம் ,, | 1 |
| வாளம் பலம் | 1 |
| முத்து விறை ,, | 1 |

இது சேத்து கல்வத்தில் அறைக்கவும்.

வீர மெழுகு வீரம் விராகனெடை 1 முருங்கப்பூ செப்பு நெருஞ்சி சார் விட்டுக் காச்ச மெழுகாகும்.

**முடிவு :**

வெடிபிளந்த பின்னுக்குச் சிப்பிச் சுன்னம்
விளக்கெண்ணெய் நெய்யுடனே நெல்லிக் காயும்
அடிக்கதிலே அரைத்துநீ பூசிப் பாரு
அப்பனே மண்டலத்தில் துலக்க மாமே 177

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் வெவ்வேறு ஏடுகள் உள்ளன கடைசி 2 ஏடுகளில் 169 முதல் 177 வரை பாட்டெண்கள் உள்ளன.

இதில், பேய்க்குமட்டிக்காய் எண்ணெய், சூதக வாயுவுக்குலேகியம் கன்னக் கிரந்திக்கு எண்ணெய், விப்புருதிக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1179. சுவடி எண்: 567

# வைத்தியத் திரட்டு-மிக்கேல் ஞானியார் ஆச்சரியம்.

ஏடுகள் : 176. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7–8 வரிகள். கி. எண்ணிக்கை : 8000. அளவு : 43X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : மிக்கேல் ஞானியார் (மண்டைக் காட்டுக் காரியாவிளை) முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதியாங் கடவுள்மல ரடிபணிந்து பொதிகை
ஐயமது யிருக்குவரு நோய்க்கணு காதுரைக்கும்
அவுடித வியல்வரி/ந்திட அகந்தனில் நினைந்து தயவால்
ஏதமாஞ் சுருதி முனிவோர்கள் புகலதில்

**முடிவு :**

அதாவதாக நல்லெண்ணெய் தனிலொன்றிடு
அரமண்டலம் புகட்டு அண்டாது நீரழிவு
பண்டுதா னறிய விது
அருளினுர் அகத்தீசனே.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் கதளி ரசாயனம், மேகத்துக்குப் பித்துப்பிணி ரசாயணம் பட்டை ரசாயனம், கெந்தக ரசாயனம், கமலாதிகிருதம், கிராணிக் கழிச்சலுக்கு, உள்ளி நெய், ஆறுவகை மூலத்துக்கு நாயிருவி நெய், சண்டமாருத லேகியம், புளியிலைக்குளம்பு, விஷத்துக்குக் கடுகரோகணி குழம்பு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1180. சுவடி எண் : 568

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 122. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 4000. அளவு : 45×3 செ. மீட்டர் எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியாங் கடவுள் பாதம்
அடியினைத் தொழுது போற்றி
சோதியா முகவன் பாதம்
தொழுதுமே யிலருக் காயி
நீதியால் சகிலுவு ரோகம்
நேரிட்ட விபரந் தன்னை
வீதியாய் யுலகில் சொல்ல
விமலனுர் காப்புத் தானே

முடிவு :

காயமாம் வகைவ கைக்கு
    கழஞ்சுரெண் டாக வாங்கி
சாயவே யிஞ்சி நொச்சி
    சாறினி லரைத்துக் கொண்டு
தேயவே உளுந்து தட்டி
    திரட்டியே நிழலு லத்தி
ஓயவே யிஞ்சிச் சாற்றில்
    உரைத்திடக் கபங்கள் போகும்.

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில், சிகப்பு 18, உல்பனச் சிகப்பு, 5-ம், 5-ம், உள்சிகப்பு 8, அசாத்திய சிகப்பு 1 , உல்ப்பன சுரம் 10, வாலைகளுக்கு குளிர்சுரம், மாந்தம் 22, சன்னி 5, உள்மாந்தம் 8, வாதநிதானம் 8. கறணிகம் 3, நாய்முள்ளு நிதானம் 3, வாய்வு நிதானம், மருந்து வாகடம், கணம் 18, எச்சி 6, பேர் குணம் மருந்து, அக்கரம் 7, போகுணம் மருந்து, நீலி அக்கரத்தின் குணம், எச்சிகுளிகை முதலியன உள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

வரிசை எண் 1181. சுவடி எண். 569

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 26 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 400. அளவு : $20\frac{1}{2} \times 3$ செ. மீட்டர்: எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றும்.

தொடக்கம் :

வெள்ளைப் பாசா(ன)த்தை இலுப்பைப்பால் விட்டு
[வி]ரட்டி ரவியில் வைத்து கபால
ஓட்டை சுண்ணமாக ஊதிப் - பொறுதியாம்
குகை செய்து மேல்சில்லு ஒன்று செய்து

முடிவு :

### வெள்ளை காண்கிறதுக்கு மருந்து

கிராம்பு - 5, சிவந்த அம்மான் பச்சரிசியிலை ஒரு எலுமிச்சங்காயளவு இது ரெண்டையும் அரைத்து பசுவின்பாலில் கலந்து சீனிச்சர்க்கரை போட்டு குடுக்கவும்—தீரும்.
வெள்ளை சாயிகிறது உடனே நிக்கும்

குருவே துணை

**காலம் :**

இல்லே

**குறிப்பு :**

இதில் வெள்ளைப்பாசானக்கட்டு, பூ நீர் விபரம், வசியம், வெள்ளை விழுகிறதுக்கு மருந்து, நீர்க்கடுப்புக்கும் மேகத்துக்கும் மருந்து, உடம்பு காங்கைக்கும், வெள்ளைக்கும், பித்தத்துக்கும், பெரியவியாதிக்கு வெள்ளைக்கி யிந்திரிய பேதி, பிரமியம் பெரும்பாட்டுக்கு, காது செவுடுக்கு வாமூாத பெண்ணுக்கு, சொக்குப்பொடி, மரப்பு, வெள்ளைக்கி முதலியன உள்ளன,

ஒரு ஏட்டில் சக்கரங்களுடன் ராமஜெயம் எழுதப்பட்டுள்ளது இதில் வெவ்வேறு ஏடுகள் உள்ளன.

சுவடி எண் 570 முதல் 575 வரை உள்ள 6 சுவடிகள் சுவடிஎண் 293, 294, 296, 297, 298, 299 ஆகிய எண்களில் பதிவாகி காட்டலாக்கு செய்யப்பட்டுள்ளன. எனவே 570 முதல் 575 வரை சுவடிகள் இல்லே.

வரிசை எண் : 1182. சுவடி எண் : 576 (a)

## வைத்தியதிரட்டு

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுதுபட்டநிலை, பக்கத்திற்கு : 7–9 வரிகள். கி. எண்ணிக்கை : 600. அளவு : 42X4 செ. மீட்டர். எழுத்து : தமிழ், ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

| | | |
|---|---|---|
| சந்தனம் | பலம் | 1 |
| இலாமிச்சம்வேர் | பலம் | 1 |
| ஆலாசம்வேர் | பலம் | 1 |
| வில்வவேர் | பலம் | 1 |

——ட்டு நாளி தண்ணீர் விட்டு ...... மரக்கால் தண்ணீர்...... எண் விட்டு கயாழும் ஊறவும்.

**முடிவு:**

நாளப்பா உட்டன நெய் சிலேட் மங்கள்
நலமான அக்கினியாம் மந்த வாய்வு
தாளப்பா கையெரிவு காந்த மெல்லாம்
தவறுண்டே போகுமடா நெய்யிற் கொள்ளே, 4.

**காலம் :**

இல்லே.

**குறிப்பு :**

இதில் கொத்தமல்லிச் சூரணம், பஞ்சவள சிந்தாமணி, பிள்ளைப் பால் சுரக்க, விரோசனம் இராமபாணம், கவுசிகக் குளிகை, வெண் காரக்குளிகை, சன்னிக்கி பெரியகுளிகை, அக்கினி குமாரன் குளிகை, சுரமெண்பதுக்கும் குளிகை, ஆனந்த வயிரவன் கோடா சூளிகை, பெரிய முதண்டன் குளிகை முதலியன உள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண். 1183. சுவடி எண். 576(b)

# திருமூலர் தண்டகம்

ஏடுகள் : 10 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு :9வரிகள் கி. எண்ணிக்கை : 400. அளவு ; 42X4 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீருலவு பூரணசின் மயமான சோதி
சிதம்பரத்தின் சூட்சாதி சூட்சந் தன்னை
வாருலவு பூண் முலையாள் உமைக்குச் சொன்னர்.
மகத்தான வித்தை நந்திக் குபதே சித்தாள்

**முடிவு :**

ஆமப்பா விந்நூல் தான் நீல கண்டமது
சூட்சத்தில் சூட்சம் கண்டு
வோமப்பா பொரிவாய் மூலங் கண்டு
வொரு மருவில் மாத்திரைப்போ தூணிப் பாரு
தாமப்பா முன்மூல வர்க்கத் தோடே
தானொருவன் ஆறுகோடி சித்து மாட
நாமப்பா நந்திகுரு வான மூலம்
நாங்காட்ட நலமா முத்தே! 102

திருமூல சுவாமி யருளிச்செய்த தண்டக முற்றும்.
சிவகுருவே துணை
முற்றும்.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் தலைப்பு இல்லை ஏடுகள் தலை தடுமாற்றமாக உள்ளன. இதன் கடைசி இதன் அடுத்த ஏட்டில் முடிகிறது,

இதில், சக்கரம், முப்பூவின் முறை, வாதிபார்க்க, நூல்பாடும் விதி, அமுக்கிராய் மூலம் வாங்க, பூமியில் நிதிக்கேக, சாகாத மூலம் வாங்க, விசுவித்தை, வயிரவர் தியானம், முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண். 38 (b)/D. 66. போன்றது.

வரிசை எண். 1184 சுவடி எண் 576(c)

# அகத்தியர் தண்டகம்

ஏடுகள் ; 5. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு : 42X4 செ.மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

அந்தணர் பாதம் போத்தி
யறிவுடன் வாழ்வோர்க் கெல்லாஞ்
சந்தத பூமி மீதில்
சாத்திய தண்ட கந்தான்

## முடிவு :

ஆமே சிவனை யடிதொழு தேத்தி
மானே பார்பதி மக்களு மானேம்
வீணு யிருந்து விஞ்சுவர் கண்டாய்
நானே தண்டகம் நாடுமுறை முத்தே. 104
அகஸ்தீசுபர் தண்டகம் முற்றும்
குருவேதுணை

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில் அஞ்சனம் வசியம் உருமாற்றம் முதலியன உள்ளன.
இது எமது சுவடி எண் 17(d)/D 22 போன்றது.

---

வரிசை எண் 1185 சுவடி எண். 576(d)

# கொங்கணர் தண்டகம்

ஏடுகள் : 13. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 9 வரிகள். கி. எண்ணிக்கை : 600. அளவு : 42X4 செ.மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

வெளிகடந்த வெளியொளியை சுளினை காப்பு
வேதாந்த விபரித்தி னறிவே காப்பு
தலிகனலும் காலுமொன்றாய் முன்வந் தானும்
தம்பனத்தில் மோகனத்தாய் பதமே காப்பு

முடிவு :

விதியறிந்தேன் கருத்தலேயி னுபாய நன்றி
விட்டகுறை கட்டமுறையை யறிந்து கொள்வான்
பதியறிந்து மனம்பதிந்து விதியைக் கண்டு
பலன்பெற்றோர் பச்சணியின் முளுதே. 108

குருவே துணை

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் குருவறிய, மூலமந்திரம், கணவதி உருவறிய முதலியன உள்ளன. இதன் தொடக்கம் முன் ஏட்டில் உள்ளது.

இது எமது சுவடி எண் 35[d]/D 60 போன்றது. அது, கொண்டக பட்சணி நூறு' என்றுளது.

---

வரிசை எண். 1186 சுவடி எண். 576(e)

## சுந்தரமூர்த்தி முப்பத்தாறு

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 9 வரிகள். கி. எண்ணிக்கை : 150. அளவு ; 42X4 செ.மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : சுந்தரானந்தர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

சீரான உமைதேவி பத்தற் போற்றி
செகமெகுளுஞ் சுந்தரனர் புலியோர் மெய்க்கப்
பேரான அதியநூல் முப்பத் தாறும்
பிரியமுடன் பாடுதற்குக் குருவைப் போற்றத்

முடிவு :

வரைந்த வட்டத்துக்குள்ளேயே ஒரு சிப்பி
வைத்து பிறகு மந்திரம் 108 செவிக்கவும்
செவிக்கிர நேரம் 9 வட்டத்திலும் உமிபாவி
யதற்கு மேல் ஒரு நெருப்புத் தணல் வைக்கவும்

சிவனே துணை

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் 21 பாடல்கள் முழுமையாயுள்ளன. 22-ம் பாடலில் பாதியி லிருந்து வேறு மந்திரங்கள் எழுதப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 226 (i)/D 365 போன்றது.

இதில் கல்லெலி, தவளை, அணில், காகம், பூனைச்சிட்டு, அடைக் கலங்குருவி, கரிக்குருவி, கொட்டைக்கரிச்சான், மாடப்புரு, பூச்சி முள்ளுக்கூடு, கவுதாரி, காடை, மீன்கொத்தி முதலான பட்சிகளின் கூடுகளில் காணப்படும் வேர்களை எடுத்துவந்து உருச் செபித்து உபயோகிக்க சித்திகள் உண்டாகும் என்பதைக் கூறும் நூலிது.

oooooooooooo

வரிசை எண். 1187 சுவடி எண். 576(i)

# அகத்தியர் ஆயிரத்திருநூறு கர்மகாண்டம்

ஏடுகள் : 43. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்ட நிலை
பக்கத்திற்கு : 6-9வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 42 x 4செ.மீ
எழுத்து : தமிழ். ஆசிரியர் ; அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆயிரத் திருநூறு முன்னூ
லாய்ந்து முற்கூறாண்ட சூத்திரம்
பாயிரத் தொகுதி என்று
பாடியே வயித்திய மாக

முடிவு :

திண்டுமுண்டு செய்யாதே கொலைசுடுதே
தீவினைக ளாக்காதே செடம்போக் காதே
பண்டுசொன்ன முறையைநீ விட்டு ஓடாதே
பண்டிதனே வயித்தியநூல் காண்ட முற்றே. 300
இந்திர சாலம் ஆயிரத் திருநூறு. வயித்தியகாண்டம்
முன்னூறு முற்றியது
சிவகுருவே துணை
அரி ஓம் நம நன்றாக.

காலம் :

இந்த ஏடு எழுதினது தாருண வருடம் தை மீ 24ம் தேதி) எழுதி முடிந்தது. சாவுகச்சேரி வயித்தியம் வேலாயுதர் ஆறுமுகம். சிவமயம். வயித்திய காண்டம் முன்னூறும் எழுதினது ஆதி.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 8/D 9, எண் 9/D10 ஆகியவற்றின் வேருயது.

இதன் தொடக்கத்தில் பாயிரம் என்றுளது. இறுதியில் வயித்திய காண்டம் முன்னூறு முற்றியது என்றுளது.

இதில்: பிண்டபற்பம், பெரிய இராமபாண மாத்திரை, கெற்பத்துக்கு எண்ணெய், மூலநோய், சயத்துக்கு, விஷத்துக்கு, வல்லாரைக் கற்பம், அஞ்சன மை, பெரிய இராமபாண சதுலவியாதிக் குணமாத்திரை நாசித்தூள், அகத்தியர் குழம்பு, தாளக செந்தூரம், இராமபாணமாத்திரை முதலியன உள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண்: 1188 சுவடி எண் 576(g)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி.எண்ணிக்கை: 120. அளவு: 42×4 செ மீ. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றறற்றது.

தொடக்கம்:

## குதிரை வலிக்கு நெய்

கூவம் பழமும் பழைய அரப்பும் புதிய மிளகும் இந்துப்பு எருக்கம் பால் எருச்சாம்பல் எவக்குதிரைவலி இதுவே வைய்ய மேனிச் சொல்வார்.

முடிவு :

அதிகப்பட்ட செங்கண்மாரி நாலாமுறை மாது மெனறு குஞ்ஷாசா சொன்ஞர். இதுக்கும் பாலுஞ் சோறும் பச்சைத் தண்ணீர் தொடக் கூடாது. அறியவும். வெந்நீர் முழுகவும். அரப்பு சீயக்காய் அறியவும்·

காலம் ;

இல்லை.

குறிப்பு:

இதில் குதிரை வலிக்கு நெய், மூலநோய்க்கு கொட்டார குளிகை முதலியன உள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண். 1189 சுவடி எண். 576(h)

## அகத்தியர் சோய சூத நூல்

ஏடுகள் : 2 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 5-6 வரிகள் கி. எண்ணிக்கை : 60 அளவு : 42X3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

### தொடக்கம்:

தாயான உண்மையாள் பாதங் காப்பு
சாத்திரமோ ஆயிரத்து இருநூத்துக் குள்ளே
தோயாத கருவொன்று கருவலை இல்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை ஒன்று

### முடிவு:

இசையான வன்னிகலை தானே இரண்டு
இரட்டீர யுப்புவெனும் வேணு மோடா தண்ணீருக்கு
மசையாத மண்ணுக்குக் கலைதா னுத்து
ஆறுகலை னுலுக்குள்ளே அதிகம் வேண்டாம்
பாவான ஆகாசம் சேர்ந்து போகும்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### காலம்:

இல்லை

### குறிப்பு:

இது முழுதும் இன்மையால் செய்திகள் அறியக்கூடவில்லை

oooooooooooooooooooo

வரிசை எண். 1190 சுவடி எண்.577

## அகத்தியர் சூத்திரம்

ஏடுகள்:25 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை பக்கத்திற்கு:6-7 வரிகள். கி.எண்ணிக்கை: 500. அளவு: 32×2½ செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

### தொடக்கம் :

பாரப்பா மதுரைக்கு நேரே தெற்கு
பரிவான சித்தர்மடம் பகரக் கேளு
நேரப்பா மடங்களது யெட்டுண் டப்பா
நிலையான பெருமையெல்லாம் நிகழ்த்துரேன்.

முடிவு :

பஞ்சப்பா பசுவினுட பாலா லாட்டு
பாங்காக வில்லைசெய்து ரவியில் போடு
நெஞ்சப்பா நீளலுத்தால் நக............யத்து
நிலையாகப் பீங்கானில் வைத்துக்கொள்ளே. 129
கொள்ளப்பா ஒருவாரங்.................

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் மதுரைக்கு தெற்கேயுள்ள சித்தர்மடமும் அதன் சிறப்புக்களும் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் ஏட்டில் சதுரகிரிச்சட்டைமுனி வழக்கம் என்று காணப்படுகிறது.

---

கை எண் : 1191 சுவடி எண் 578 (a)

# அகத்தியர் சூத்திரம் பதினாறு

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100. அளவு29X2½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

தொடக்கம் :

அரிதாரம் பிருதிவியாய் நிற்கும் நிற்கும்
அரியதோர் சவ்வீரம் அப்ப தாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
வரிதான லிங்கமா காச மாகும்,

முடிவு :

யேற்றிடில் சன்னி தீரும்
மெழும்பிடில் குட்டந்தீரும்
பாத்திடப் பரங்கி தீரும்
பார்வைதூ ளியமுந் தீரும்
தோற்றிருங் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
ஏர்த்திடு வியாதிக் கெல்லாம்
ஏழுநாள்ப் பத்திய மாமே
தேவி சகாயம்
அகஸ்தியர் பதினாறு முற்றும்
சிவமயம்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் சவ்வீரம் கெவுரிவெள்ளை, லிங்கம் காந்தம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : *1192.* சுவடி எண் : 578 (b)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 4-8 வரிகள். கி. எண்ணிக்கை : 300. அளவு : 30X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ், ஆசிரியர் பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

| | | |
|---|---|---|
| சாம்பிராணி | விராகனெடை | 3 |
| தாளிசபத்திரி | ,, | 3 |
| அகில்கட்டை | ,, | 3 |
| லாமிச்சவேர் | ,, | 3 |
| லவங்கப்பூ | ,, | 3 |
| பிலாக்கட்டை | ,, | 3 |
| தேவதாரம் | 2 | |
| கிராம்பு | 2 | |
| சடாமாஞ்சி | 1 | |

**முடிவு :**

அத்துடன் புனுகு பச்சைக்கற்பூரம், சந்தணத்தர், இவைகளையும் கூடவிட்டு அரைத்து சிமிளில் யெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் தாது புஷ்டிக்கு மருந்து, பவுந்திரபுண் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1193 சுவடி எண் : 579(a)

# அகத்தியர்க்குபதேசம் பண்ணின சூத்திரம்

ஏடுகள் : 30. (9, 26ம் ஏடுகள் இல்லை) ஏட்டின் நிலைமை : பழுது பட்டது. பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 800. அளவு 17 X 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

விதித்ததோர் வட்டத்தில் மேவுந் திருவடி
மதித்ததோ ரபிமனம் பாதியிட மாகி
உதித்ததோ ரவ்விட மோங்காரத் துள்ளே
சதித்ததோர் பூரணம் தானது வாமே.

**முடிவு :**

செய்யப்பா வில்லை தீர்வு வத்தி
செய்யப்பா உவரில்க் கல்ந்து வைத்து
மெய்யப்பா குடி..................

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது வினு விடையாகவுள்ளது. நல்ல செய்யுள் நடையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖

வரிசை எண் : 1194 சுவடிஎண் : 579 (b)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 11. ஏட்டின்நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7-10 வரிகள். கி. எண்ணிக்கை. 200. அளவு 17X3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**நவச்சாரக்கட்டு**

| | | |
|---|---|---|
| வெடியுப்பு | பலம் ... | 4 |
| அப்பளக்காரம் | பலம் ... | 4 |
| நவச்சாரம் | பலம் ... | 1 |

வெடியுப்பையும் அப்பளக்காரத்தையும் தனித்தனியே பொடி பண்ணி வைத்துக்கொண்டு, சட்டியில் நாலுவிரல் கொண்ட மணலிட்டு அதின்மேல் ஒலைச்சுருளை வைத்து

**முடிவு :**

உத்திர வயிரவா உன் சாத்திரத்திலுண்டான பூதப்பிரேத பிசாசுகளை யெல்லாம் கட்டிக் கபாலஞ் செய்து தாட்டியாவலி வலி சற்பந்தரி ஶ்ரீ விஷ நசி பட்டு சுவாகா.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் நவச்சாரக்கட்டு, சீனச்சுன்னம், கருஊமத்து, செம்பு, மெழுகு, அண்டமெழுகு, பீனிசத்துக்கு ஆகியவை உள்ளன. 2 மந்திர ஏடுகள் சக்கரங்களுடன் உள்ளன.

வரிசை எண் : 1195 சுவடி எண் : 580 (a)

## அகத்தியர் சூத்திரம்-50

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 6-7வரிகள். கி. எண்ணிக்கை : 300. அளவு : 36X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

......த்தை கணபதியைக் குகனை
வழுத்தியே பொன்னுரை மனத்தின்
மறயாமல் மயமான பேரொளி.........

**முடிவு :**

காலான வயித்தியத்தை யுறுதியாக
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தாற்
பாலான நிறமுடைத்த பிரம னவான்
பாரிலே வாழ்பவர்க்குக் குருவு மாவான்
சேலான விழித்திருவின் செல்வ னவான்
சிந்தையிலே களங்கமற்ற சித்த னவான்
நூலான சுருதிமுதற் பரமன் சொன்ன
நல்வழியே முனியிதனை நவின்றுன் முற்றே. 50

அகத்தீசுர நாயனு ரருளிச்செய்த
சூத்திரம் அன்பது முற்றும்
சிவமயம்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் 321 (f) /D 608 போன்றது. பாடவேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. அது அகத்தியர் முப்பு ஐம்பது' என்ற பெயருடையது. இதில் அகத்தியர் சூத்திரம் ஐம்பது என்றுளது. முதல் ஏடு மிகவும் ஒடிந்துள்ளதால் தலைப்பும் காணப்படவில்லை.

வரிசை எண்: 1196 சுவடி எண். 580(b)

## அகத்தியர் சூத்திரம்—35[36]

ஏடுகள்: 7 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு: 6-8 வரிகள். கி.எண்ணிக்கை: 250. அளவு: 36×3 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

பாரப்பா செம்பினுடவெள்ளை கேளு
பரிவான தாம்பிரத்தைக் குகையுள் வைத்து
சேரப்பா பதினைந்து பருவமுங் கூட்டிச்
சேர்ந்துருகும் போதினிலே மருந்து கேளு

**முடிவு :**

வாமப்பா விந்தவகை மருந்தை செய்தால்
மருத்துவன் பேருரைத்திடவே நோய்க ளோடுந்
தாமப்பா வெட்டிரண்டு மிருபத்தஞ்சுந்
தடை யறவே யுருவேறச் சுத்தி யாமே. 36.

அகத்திசுர நாயனாரருளிச் செய்த
சூத்திர முப்பத்தஞ்சு முற்றும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது எமது சுவடிஎண்15(b)/D, 16. எண் 324(c)/D 638 போன்றது. இதில் எண் 35 என்றுள்ளது. ஆனால் பாடல்கள் 36 உள்ளன. அச்சுவடிகளின் அகத்தியர் வைத்தியம் 36 என்றே காணப்படுகின்றன.

வரிசை எண் : 1197 சுவடி எண் : 580 (c)

# நந்தீசுரர் சூதமுனிக்கு உபதேசித்த சூத்திரம் நூற்றுப் பத்து

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 650. அளவு : 36X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : நந்தீசர் முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்:

நந்தீசர் பொன்மலர்த்தாள் தன்னைக் கையால்
நமஸ்கரித்துச் சூதமுனி நம்பனே யடியேற்
கிந்திரனே லக்கமென விரத வித்தை
செய்யவெது வகையியம்பாயென் றிரந்து கேள்க்கத்
தந்திமுகன் றனைப்பணிந்து யுரைத்திடுவார் நந்தி
தாரணையி லுள்ளவர்க்குச் சாகாக வரமு
மந்திரத்தா லட்டசித்தியாகு மந்த வாறும்
வயதின்வண்ண மாகுமதின் வன்மாதி தானே. 1

## முடிவு

நீதியாங் குருநாத னினையடி நீங்காதே
நிழலுன்னைக் காப்பதுபோல் நீகுருவைக் காரு
பாதுசெய்து காத்திடுவா நிந்த நூலைப்
பார்த்தவர்க்கே முத்தியுண்டாம் நூற்றுப் பத்தே. 111

நந்தீசுரர் சூதமுனிக் குபதேசித்த சூத்திரநூல்
நூற்றுப்பத்து முற்றும்
சிவாய நமா
குருவே துணை

## காலம்:

இல்லை

## குறிப்பு :

இதில் இரதபற்பம், சீராமசெந்தூரங் குப்பிவைப்பு வகை, உப்பு கட்டு செம்பு சுத்தி, கெந்தகக்கட்டு, துரிசுச்செம்பு நாகசெந்தூரம், கெந்தகத்தயிலம், வங்கசெந்தூரம், அரிதார செந்தூரம், கெந்தகமெழுகு இரதகுளிகை, கெந்தகசெந்தூரம், செந்தூரம், சரக்கு கட்டும் வகை, வீர வைப்பு, பஞ்சபாடாண வைப்பு, பறிக்குரு முதலியன உள்ளன.

வரிசை எண். 1198 சுவடி எண் 580(d)

# அகத்தியர் சூத்திரம்-205

ஏடுகள்: 34 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு : 7 வரிகள்· கி. எண்ணிக்கை: 1200 அளவு: 36X3 செ.மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம் :

பூரணமாய் முன்மூலம் போதயிற் சூடாம்
புகை யெழும்பி மேகமதாஞ் சிரசிற் சூடாங்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் நோயாங்
கனலெழுந்த வாயுவினல் சூலை ரோக

## முடிவு :

சஞ்சீவி யாகுமிந்த விருநூறுஞ் சொன்னேஞ்
சண்டாள வீசத்தோர்க் கீய வேண்டாம் ................... 203
வாய்மையுடன் கிருதங்க ளெண்ணை செய்து
வைத்திடுவாய் அனுப்பானம் வைத்தியந்தான் முற்றே. 204
முற்றுமே தெட்சிண மூர்த்தி பாடல்
முன்பின்னு மாராய்ந்து வைத்தியத்தைச் செய்தார்
ச..................... ..........................................
பற்றுவிட்ட சித்தரைப் போல் புவியில் வாழ்ந்து
பரமகுரு வாயிருக்கச் செய்திட் டோமே 205
அகத்தீசுர நாயனுரருளிச் செய்த
இருநூற்றஞ்சு முற்றும்

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இது எமது மகால் சுவடி எண் 17(a)/D. 19, எண் 124 (d/)D.204 எண். 311(e)D 566 / எண் 323 (a)/D 622 போன்றது. முன் சுவடிகளில் அகத்தியர் பற்பமுறை 205 என்றும் காணப்படுகின்றது.

வரிசை எண். 1199 சுவடி எண். 580(e)

## பரப்பிரம்ம மூர்த்தி வயிரவ சாமியாருக்கு அருளிச் செய்தது

ஏடுகள் : 8 ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 5-6 வரிகள். கி. எண்ணிக்கை: 200. அளவு: 36 × 3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: பரப்பிரம்ம மூர்த்தி. முழுமை: முற்றற்றது.

### தொடக்கம் :

உப்பு, இந்துப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, அட்டுப்பு ஆக வகை அஞ்சு உப்பும் வகைக்கு ஒருபலம், நவச்சாரம் ஒருபலம். யெவச்சாரம் ஒரு பலம், பொறிக்காரம் பலம் மூணு, சீனக்காரம் மூணுபலம், கெந்தகம் பலம் ஒன்று

### முடிவு :

நெல்லிக்காய் கந்தகம் மேலும் கீழுமாய் வைத்து ஒரு ஓட்டுலே வைத்து மேலே எருவு .............. ........................ பதினறு பொடம் போட்டால் மெ ........ ம் வருன்ன மாகும்.

### காலம் :

இல்லை.

### குறிப்பு :

ஏடுகள் ஒடிந்தும் சிதைந்தும் உள்ளன.

இதில் செங்கத்திரு தயிலம், வங்க பற்பம். சித்தாமுட்டித் தயிலம் மேகவியாதிக்குத் தலைமுழுக, மகாபூதிகா தயிலம், குழந்தைகளுக்கு சுரப்பு கண்டுதானல் கிசாயம், தாம்பூல பற்பம், அசுவகெந்தி சூரணம், முதலியன உள்ளன.

வரிசை எண் 1200. சுவடி எண். 581

## அகத்தியர் வைத்தியம்–110

ஏடுகள் : 43. ஏட்டின் நிலைமை : சற்றே பழுதுபட்டது. பக்கத்திற்கு. 8–10 வரிகள். கி. எண்ணிக்கை : 700. அளவு : $12\frac{1}{2}$ X 4 செ. மீட்டர்: எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

### தொடக்கம் :

சொல்லுகிறேன் பொன் வெள்ளி யிரும்பு செம்பு
தோராத காரீயம் வெள்ளீ யந்தான்
சொல்லுகிற மித்திரத்தின் வகையைக்கேளு
கோமயமோர் காடியெண்ணை யெருக்கம் பாலின்

முடிவு :

மோமப்பா விஷபாகந் தீருங் குட்டம்
முத்தமனே சன்னிமுதல் லெண்பது வாதம்
தாமப்பா நீரடைக்கும் களலைப்புத்துத்
தான்கரையு மநீதற்குச் சாற்றி னேமே. 110

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் 110 பாடல்கள் இருந்தும் முற்றும் என்று இல்லை. இது எமது சுவடி எண் 234 (a) / D 386 போன்றது, ஆனால் பாடல் வேறுபாடுகள் ஏராளமாக உள்ளன. இது நல்ல பாடமாக கருதப்படுகின்றது.

oooooooooooooooooooooooo

வரிசை எண் : 1201. சுவடி எண் : 582

## அகத்தியர் (பின்னூல்) எண்பது

ஏடுகள் : 32. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு 11-12 வரிகள். கி. எண்ணிக்கை ; 700. அளவு : 13 X $3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : அகத்தியர், முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

முன்னூல் யெண்பதுஞ் சொன்னே முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியைப் போற்றிப்
பின்னூல் யெண்பதுஞ் சொல்ல ஆயி காப்பு
பேருன யென்குருமா முருகன் காப்பு

முடிவு :

கோணமென்ன வழலைவிட்ட ரசவா தந்தான்
குடல்வாதம் பேதமல்லாற் குணமா காது
கானமென்ன யிந்தநூ லெண்பதையுந் தொட்டால்க்
காசினியில் லவன்யோகி கடைதான் முற்றே. 83
அகத்தியர் எண்பது முற்றும்.
ஸ்ரீராமஜெயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், சாரதி, குருமுடிக்க, ரசபதங்கம், அரிதாரபற்பம், சுரகோடாலி சயத்துக்கு செந்தூரம், விக்கலுக்கு, பிடுமருந்து பல்வலிக்கு, ஒருத்தலை வலிக்கு, பிரளிக்கு, கிரந்திக்குப் புகை, பேதி மாத்திரை, தாம்பிர பற்பம் முதலியன உள்ளன

இது எமது சுவடி எண் 262 (b) / D 468 அகத்தியர் பின்னூல் எண்பது போன்றது.

வரிசை எண் : 1202 சுவடி எண் : 584

## அகத்தியர் சூத்திரம் -48

ஏடுகள் : 25. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு : 13X3½ செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

வாதமென்ற நூல்களெல்லா மொடுக்கி ஒன்றில்
மாட்டவே சின்மயந்தான் கணபதியுங் காப்பு
நாதமென்ற உடையவளும் சிவனுங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு

முடிவு :

நாட்டுகின்ற வித்தையெல்லாம் பார்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரு
பூட்டுகிற பூட்டெல்லா மிதுதா னென்று
புகழ்ந்திட்டே னுள்க்கருச் சூஷத்திரந்தான் முற்றே. 48

காலம் :

சித்திரபானு வருடம் அற்பிசி மாதம் 1 ந்தேதி எழுதி முகிந்தது. நாகய்யன் எழுத்து

குறிப்பு :

இதில் தலைப்புக்கள் இல்லை. இது எமது சுவடிஎண் 289 (b) / D 514 அகத்தியர் பூரண சூத்திரம் 48ன் வேறுயது.

வரிசை எண் : 1203 சுவடி எண் : 585

# அகத்தியர் வைத்தியம் 80

ஏடுகள் : 21 (91—111) ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 8 வரிகள். கி எண்ணிக்கை : 1100. அளவு : $31\frac{1}{2}$ X $3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம் :

அரன்கயிலை விட்டுநான் தெட்சிணத்தில் வந்து
அளவிறந்த கோடிசித்தர் முனிவ ரிஷிகளுமாய்
பரந்தொரு பொதிகைதனி லிருக்கும்போது
பாடினது வாதமொரு வயித்தி யந்தா
னிரந்தரமா யொருலெட்சம் ரெண்டு லெட்சம்
பாடிநிறுத்தினனே சூத்திரமாய்க் குறுக்கிப் பின்பு
சுரநோய்க்கு மருந்துவகை கற்மந் தீர்க்க
சூட்சமந்திர மேந்திரசிவ மோகந் தானே. 1

## முடிவு :

ஆலென்ற மரத்திலே விழுதே(த)ாடும் போல
வறிந்தறிந்து நூலெல்லாம் ஆராய்ந்து பாரு
காலென்ற கண்ணேணுக்கிப்பாரு சொன்ன நூலை
கருத்தறிந்தோர்க் கெண்பதுந்தான் கடாசிநூல் முற்றே. 81

குருவே துணை

## காலம்:

இல்லை

## குறிப்பு :

இதில், நூல்வகை விபரம், திருமூலர் முன்னூற்றியெழுபத்திரெண்டில் பார்க்கவும், யெந்திரத்தகடு, குட்டங்குறை நோவுக்கு, வேர் பிடுங்க, குறைநோய், குட்டம் சூலைக்கு, குட்டம் குறைநோய், குருவிடும் வழி, மலடிக்கி மருந்து, பிள்ளைக்கு பால்சுரக்க வகை, தம்பனத்தகடு கட்ட, அஷ்ட்ட குற்மம், நவமூலம் போக, வழலைக்குருயிடும் விபரம். சிரசில் நோய், நரம்புத்துகை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1204. சுவடி எண் : 586

# அகத்தியர் வைத்தியம் பின்னூல் 80

ஏடுகள் : 19. [112—130] ஏட்டின் நிலைமை : சற்றே பழுது. பக்கத்திற்கு : 8 வரிகள். கி எண்ணிக்கை : 600. அளவு : $31\frac{1}{2} X 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர், முழுமை : முற்றுமுள்ளது.

## தொடக்கம் :

முன்னூன்லெண் பதுஞ்சொன்னேன் முதலே காப்பு
மூலத்தில் நின்றகண பதியே போற்றி
பின்னூலெண் பதுசொல்ல வாயி காப்பு
பேரான யென்குருவா முருகன் காப்பு

## முடிவு :

கோணமென்ன வெழிலைவிட்டால் ரசவா தந்தான்
குடல்வாத பேதமல்லால்க் குணமா காது
கானமென்ன யிந்தநூல் யெண்பதையும் விட்டால்
காசினியி லிவன்யோகி கடந்தான் முற்றே. 83

குருவே துணை

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இது எமது சுவடி 262(b)/D468, 582/D1201 போன்றது.

இதில் மேகநீருக்குச் செந்தூரம், தாம்பிரபற்பம், குன்மத்துக்கு குருவிபரம், அறையாப்பு, ரசபதங்கம், தாளகபற்பம், சுரத்துக்கு மாத்திரை, சயம்வரலாறு, சயகுலாந்த செந்தூரம், கண்ணோய் தொண்ணூத்தாறின் குணம், கண்ணோவு தொண்ணூந்தாருக்கும் பச்சை கற்பூரக்குழம்பு, பல்வலிக்கு, ஒருத்தலை நோவுக்கு நசியம், பவளபற்பம்' மேகத்துக்கு, குழந்தைகளுக்குப் பிரளிக்குயெண்ணை, முதண்டகிறுதம், கிரந்திபுகை, பேதிக்கு குளம்பு, பெரும்பாட்டுக்கு, தாம்பிரபற்பம், வயித்திய மிருநூறுக்குஞ்சுருக்கு, பூரணலேகியம், முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1205 சுவடி எண். 587

# அகத்தியர் பட்சணி

ஏடுகள்: 14. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது, பக்கத்திற்கு: 6-8 வரிகள். கி. எண்ணிக்கை. 200. அளவு: 24 x 3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர், முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

பூவது வாச மாகும்
　　பொருந்திய தண்ட கத்தை
நாவது ஓது தானே
　　நடுவணை யிருத்தி யங்கே
போவது வருவ தாகும்
　　பூரணங் காப்ப தாகும்
ஆவது கோடி வித்தை
　　ஆனந்தங் காப்புத் தானே.

**முடிவு :**

முற்றிலு நூறுங் கூட்டி
　　முப்பத் திரண்டும் பாரு
உற்றிட மறுவாய்க் காணும்
　　உற்பனத் துருதி தோறும்
கற்றவ ரென்னால் தன்னை
　　கருவுடன் கருவைக் காண்பார்
சொற்றபே ரில்லை யென்னால்
　　சேர்ப்பது முற்றி யாமே. 131

அகஷ்த்தியர் பட்சணி முற்றும்
தெட்சணாமூர்த்தி பாதமே துணை

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதன் இரண்டாவது ஏட்டில் ''திருமகள் சோதியாகும்'' என்று தொடங்குகின்றது முதலில் இரண்டு செய்யுட்கள் காப்புச் செய்யுள் ஆகும். இதில் யோக ஞான முறைகள் பரிபாஷையாகக் கூறப்பட்டு உள்ளன.

இது, எமது சுவடிஎண் 17(c)/D.23 அகத்தியர் பட்சணிநூற்று முப்பத்திரண்டு, சுவடிஎண் 228(b)/D. 368 அகத்தியர் பட்சணி போன்றது.

வரிசை எண்: 1206　　　　　　　　　　சுவடி எண்.588

# அகத்தியர் பட்சணி

ஏடுகள்: 15 ஏட்டின் நிலைமை; பழுதுபட்டது. பக்கத்திற்கு: 6-7 வரிகள்: கி. எண்ணிக்கை: 200. அளவு: 25X3. செ. மீட்டர் எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும் இருக்கிறது (ஆனால் குறைபாடுடையது)

**தொடக்கம்:**

திருமகள் சோதி யாகு
செகதல்லி வல்லி மாது
மருமக ளவளே புந்தி
மவுனத்தின் நந்தி தோய

**முடிவு:**

நிச்சயமாய் வந்துதித்து சத்துநிலை பாரு
அச்சமது வில்லைமுன்பு வச்சபொருள் தேகு
கைச்சுருதி யகவொரு சச்சையினி லேறு
பச்சைவர்ண ரூபம் திருப் பச்சணியு முற்றே. 127.

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இது எமது சுவடிஎண் 228(b)/D 368 போன்றது. அதில் இதன் மேலும் 4 செய்யுட்கள் இருக்கின்றன. ஆனால் பச்சணி முற்றே என்பதனால் இது முற்றும் இருப்பதுபோல் தோன்றுகிறது.

இது செய்திகளைப் பரிபாஷையாகக் கூறுகின்றது.

---

வரிசை எண்: 1207 சுவடிஎண் .589

## அகத்தியர் வைத்தியக் கோவை 1000

ஏடுகள்: 25. ஏட்டின் நிலைமை. நல்லநிலை. பக்கத்திற்கு: 7-9 வரிகள். கி. எண்ணிக்கை: 500 அளவு: 22X3½ செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர், முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

சிரக்குந் திரிகடு கோமங் கிராம்புற் சித்தரத்தை
கறுக்கும் பொன்னுவரை வேறென்ன பேதிகடல் பளமுஞ்
சரக்கென்னுஞ் சாதியின் காய்பெருங் காயமுந் தான்பத்தொன்றும்
நிரக்கும் வகைக்குவகை தான்விராக னிருத்துச் சொல்லே. 1

**முடிவு:**

ரண்டே நாள் கொண்டிட நாலானுள் பத்தியம் நயம்பிறவே
கண்டே களித்திடுமே அஞ்சாந்தா ளுளில் கசப்பறுந்தும்
விண்டே புளியதும் ஆருந்தா ளுளில் மெல்லியற்குப்
பண்டே வருகின்ற பெரும்பாடு தீரும் பயனிதுவே. 124.

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இதில், மேகவெட்டை வாய்வுக்கு, சூலைபவுந்தரத்துக்கு, வாய்வுக்கு விப்புருதி கெண்டைக்கு, சூலைக்கடுப்புக்கு, அதிகாரக் கிராணிக்கு, மண்டையிடிக்குத்தயிலம், கரப்பன் வாயுவுக்கு, நெய், மண்டையிடிக்கு அதிசாரக்கிராணிக்கு சூலைவாயுவுக்கு, கண்வியாதிக்கு யளிகண்ணுக்கு, மாலைக்கண்ணுக்கு, வெள்ளெழுத்துக்கு, மகோதரத்துக்கு காமாலைக்கு முதலியன உள்ளன.

கோவை 1000 என்றிலிருந்தும் செய்யுட்கள் 124-ஏ உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

வரிசை எண் : *1208* சுவடி எண் 590

# அகத்தியர் குரு 105க்கு சூட்சம்

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100. அளவு : 12X2½ செ, மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

கேளப்பா நவலோக மார ணந்தான்
கெடியான வயித்தியமா இரனுத் தஞ்சுந்
தேளப்பா கொட்டுதல்போல் இந்தச் சூச்சம்
திரஞ்சொல்வே னிரும்புக்குத் தாரங் கெந்தி

**முடிவு :**

வேமப்பா சூஷ்த்திரங்கள் யெல்லாஞ் சொன்னோம்
விள்ளரிது யரிவில்லா வீண ருக்கு
ஓமப்பா சொல்லிவிட்டோம் நல்லோர்க் காக
நலமாக யிருபத்தி யொன்று முற்றே. 21

ஆக யெழுதினது கருப்பண்ணன்
ஆறுமுகந் துணை செய்யவும்.

**காலம் :**

இல்லை.

குறிப்பு :

இதில் வீரம், ரசம், கெந்தி, சவுரித் தயிலம், வில்லேவேர்த் தயிலம், வேங்கைத் தயிலம், வெட்டிவேர்த் தயிலம், வேம்பின் தயிலம், குறுந் தொட்டித் தயிலம், கொடுவேலித் தயிலம், சீரகத் தயிலம் முதலியன கூறப்பட்டுள்ளன.

oooooooooooooooooooooooo

வரிசை எண்: 1209 சுவடி எண்:591

# அகத்தியர் வல்லாதி - 600

ஏடுகள்: 89 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு; 8 வரிகள். கி. எண்ணிக்கை: 2500. அளவு: 33×3 செ. மீட்டர். எழுத்து தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை:முற்றற்றது. :

தொடக்கம்:

ஆதியா மகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபாரா பரத்திருந்த வைங்கரனே காப்பு
சோதியா மறுமுகவன் பாதங் காப்பு
துரியவெளி தன்னினிற் சுந்தரியே காப்பு

முடிவு :

செய்விப்பாய் கருப்பில்லாப் பூமி தன்னில்
செய்யவே அங்குலமா யிரத்தொண் ணூறு
லப்பமாய் நாற்சதிரம் வாசல் நாலு
முன்வட்டங் கூறம் ஒருவாய நீள்வாசல்
யிப்பலே உள்சதிரம் ரேகை மூன்று
எண்கோண மஷ்ட்ட குமயத்தி லியல்பதாகும்
மப்பனே ............ ............ ............ .. ... ..... 458

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் ரோகம் வசம் விபரம், சூதவல்லாதி உருண்டை, சீனவல்லாதி சேங்கொட்டை சுத்தி, அமுர்த கெந்தி, குக்குல் வல்லாதி, கெந்தி சுத்தி, குக்குல் சுத்தி, கெந்தக வல்லாதி, தில்லு வல்லாதி, சிந்து வல்லாதி, வல்லாதிச் சூரணம், நோய்வரும் வரலாறு, திசை நாடி அறியவும், திசை வாய்வு, நாடி நிதானத்தில் மரணம், நாடி தொந்திப்பு அறியும்படி, அவத்தை அறியும்படி முதலியன உள்ளன.

வரிசை எண்: 1210 சுவடி எண்: 592

# அகத்தியர் கரும சூத்திரம் - 300

ஏடுகள்: 110. ஏட்டின் நிலைமை: சற்றே பழுதுபட்டது. பக்கத்திற்கு: 5-8 வரிகள். கி. எண்ணிக்கை: 1700. அளவு: 23X3 செ.மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

**காப்பு**

வேகமா நெரிசேறு வினைகளுந்
தாகபோக விடாத தளர்ச்சியுந்
சோகவா ரியினல் வருதுன்பமும்
போகயானை முகத்தானைப் போற்றுவோம்

குருவேதுணை
சிவயநமா.

நூல்

பூரணமாய் மூலமுத லாறு தாரம்
புரியட்டந் திசைவாய்வு நாடி மூன்றாய்
காரணமா யிடைபின்னாய்ச் சுழினை யாகில்
கலந்து நின்ற வாதபித்த சிலேற்பன மாகி

**முடிவு :**

தெரிசனமாங் கணங்களிலே வருவ தேது
தீர்க்கமடர் சிறுவருக்கு தேவாய முதமாகும்
கரிசனம் மின்னூலில் கற்ம தர்மங்
கட்டாக மருந்துவகை கணக்கு முற்றே. 302.

**காலம் :**

விசுவாவசு வருஷம் தை மாதம் 25-ம் தேதி வெள்ளிக்கிழமை ஞள் உத்திர நட்சத்திரமு சதுற்த்தியுங் கூடின சுபதினத்தில் தென் கரை தாலுக்கா சேகரங்கனுங்காட்டான் குளத்திலிருக்கும் வீரபுத்திர பிள்ளை குமாறன் ருமுபிள்ளையவர் குமாறன் வீரபுத்திர பிள்ளைக்கு சிருனுனார் அண்ணமலைபுள்ளை கற்மகாண்டம் எழுதித் கொடுத்தது.

தெட்சிணாமூர்த்தி துணை
குருகிடாட்சமுண்டாகவும்
சிவமயம்

குறிப்பு :

இது எமது சுவடி எண். 8/D.9 போன்றது. பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

இது அவிரவர்கள் செய்த இன்னின்ன தீவினையினாலே இன்னின்ன நோய்கள் வருகின்றன, என்றும், அதனை நீக்க இன்னின்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்றும், அதற்கு மருந்து இன்னதென்றும் கூறுவதாகும், அகத்தியர் கர்மகாண்டத்தினும் வேறுயது.

ooooooooooooo

வரிசை எண்: 1211 சுவடி எண் 593

# அகத்தியர் கும்மி

ஏடுகள்: 3 ஏட்டின் நிலைமை: சிறிது பழுதுபட்டது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். கி.எண்ணிக்கை:50. அளவு: 15X3 செ.மீ எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் முழுமை முற்றற்றது.

தொடக்கம் :

அச்சு நடையன் பெருச்சாளி அய்ய
 னதுமேலெ மூந்தருளி
உச்சித மாகவி ஞயகன் பொற்பாதம்
 உகந்து கும்மியடியுங்கடி 1.
மானே கும்மிய டியுங்கடி மட
 மாதே கும்மியடியுங்கடி
தேனே கும்மியடியுங்கடி-தேசஞ்
 செழிக்கவே கும்மியடிங்கடி 2

முடிவு:

வன்னி யிலையைத் தான்பறித்து
 வளரு மெருமைத் தயிரிலுண்ண
அனைய நாளில்வந்த மேகமெல்லா மிப்போ
 அகண்டுபோ மென்றே கும்மியடிங்கடி 17.
மானே கும்மி யடிங்கடி மட
 மாதே கும்மி யடிங்கடி
தேனே கும்மி யடிங்கடி - செகஞ்
 செளிக்கக் கும்மி யடியுங்கடி.

காலம்:

இல்லை,

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 225(a)/D 353-ன் வேருயது. இது மருத்துவத்தைக் கும்மி சந்தத்தில் கூறுவது.

---

வரிசை எண்: 1212 சுவடி எண். 594

# அகத்தியர் குழம்பு

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 9-11 வரிகள். கி. எண்ணிக்கை:20. அளவு: $15 \times 3\frac{1}{2}$ செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

பருபதந் தன்னில் வாழும்
 பரமனுர் அருளி ஞலே
பெருமையாய் உலகில் வாழும்
 புண்ணிய சனங்க ளுக்கு
உருபல வியாதி வந்தால்
 உண்மையாய்த் தீரு மெ (ன்று)
பெரும்பல முனிவர் தானுந்
 பெசிந்தற மருந்து கேளே. 1

**முடிவு :**

கற்பூர வள்ளி கருநொச்சி தூதுவளை
பற்படாகங் கொடுப்பை பழம்பாசி
நற்துளசி வாதமடக்கி வளர்மிளகு
தக்காளி சீதேவிமூலஞ் சிறுநீரை
மாதளை யீர்செந்தொட்டி முத்தஞ்
சிறந்த ................................

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில் கெற்பத்துக்கு மருந்து, குதகவாய்வு, வாய்வு திரச்சி, பிரவீச்சி, நெஞ்சுவலி, விஷத்துக்கு, தேள், வழலை, மேகக்கட்டு, அமுற்த சந்தனுதித் தயிலம் முதலியன உள்ளன.

இது எமது சுவடிஎண் 159 (b) / D 253 போன்றது.

வரிசை எண் : 1213 சுவடி எண் : 595

# அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 60. அளவு : 16 × 3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

பருபதந் தன்னில் வாழும்
  பரமகு ருருளி னாலே
பொருமையா யுலகில் வாழும்
  புண்ணிய சனங்க ளுக்கு

## முடிவு :

விதியால் மருந்து யிதுவல்லால்
  வேறே தேட வேண்டாம்
பதியா நாலா யிரத்துடனே
  பகரு வியாதி யெல்லாம் போம்
ததியா யிதற்கு குறிப்பறிந்து
  வருந்தி யனுப்பா னத்திலிடத்
துதியாய்ச் செய்த வல்லோர்க்குச்
  சொன்னார் பொதிகை வாழ் முனியே 10

## காலம் :

இல்லை

## குறிப்பு :

இதில் 10 செய்யுட்களே உள்ளன. முன் சுவடி போன்றது.

oooooooooooooooooooooo

வரிசை எண் : 1214 சுவடி எண் : 596

# அய்யனார் சித்தர் சிந்தூர முறை

ஏடுகள் : 27. ஏட்டின் நிலைமை : சிறி/துபழுது. பக்கத்திற்கு : 5-8 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு : 11X2½ செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அய்யனார் சித்தர். முழுமை : முற்றற்றது.

## தொடக்கம்:

பெரிதான நஞ்சுனுட புல்லும் ஒன்று
  பேறான அரிதாரம் தானே ரெண்டு
சரிதான கெந்தி சரிசமனாய் ஒன்று
  சத்தியமாய் நிமிளையுமோ ஒன்று கூட்டி

முடிவு :

பாசாணக் கட்டு

பாசாணம் வாரகனெடை 30 ஒரு கட்டியாய் வாங்கி
... ... ... ... ... ...
அரிதாரமும் மூலப்பிளியிலதில் கூடுத் தயிலத்தில் கட்டுமே

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் ஈயக்கட்டு, செந்தூரம், ரசக்கட்டு, ஆனந்த வாயுவுக்கு. பிறமேகத்துக்கு. காரீய முழுது, கெந்தகத் தயிலம், மூலப்புளித் தயிலம், பாசாணக் கட்டு முதலியன உள்ளன.

••••••••••••• ••••••••••••

வரிசை எண்: 1215 சுவடி எண். 597.

## ஆயுர்வேத வைத்தியம்

ஏடுகள்: 42 ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு: 7-11 வரிகள். கி. எண்ணிக்கை:2500. அளவு: 38×3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

அரிதாரம், மனேசிலை, சாதிலிங்கம், வெண்காரம், நாவி, திரிகடுகு இவை சமனுகக் கூட்டி,இஞ்சிச் சாற்றி லொருநாள், மூன்று சாற்றிலும் மூன்றுநாள் அரைத்து வழித்துக் குன்றி பிரமாணம் குளிகை செய்து- நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு

முடிவு :

சாற்றின மிகக்கறுக்கு மெலிகடித்தது போறகடுக்குஞ்
சந்ததமும் புடைக்க னெல்வாயில் ருசிக்குந்
தேற்றுவன தொந்திருக்கும் விழிகள் விழித்திருக்கும்
செங்கமல மனையனக்கால் தீப்போல வெரியும்.

காலம்:

இல்லை.

குறிப்பு:

இதில், காச சூலாந்த கனமாத்திரை, யிருமலுக்குக் குளிகை, இருமலுக்கு பற்பம், மேகஞதிக்குளிகை, சித்தாந்த கோடாசூழி, ஆனத்த கோடா சூழி சருவரோக சங்காரருத்திரஞன மகாகோடாசூழி குளிகை, கழிச்சலுக் கெல்லாங் கிராணி கபாட குளிகை கட்டுவாங்காரிக்குளிகை திருவனையடைத்தான் குளிகை முதலியன உள்ளன.

ஏடுகள் 340 முதல் தொடங்குகின்றன. இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 1216 சுவடி எண் : 598

## இராமதேவர் [பூசாவிதி] சிவயோகம்-200

ஏடுகள் : 49. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 1000. அளவு : 27X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முழுதுமுள்ளது.

தொடக்கம் :

### பூசா விதி

மூலமெனு முதப்பொருளா முத்தி நடுவனையில்
 முதண்ட மானதொரு பிரமமதுக் கப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சத்தியபதி மேலே
 நாதாந்தப் பெருவெளியி னடுவொளியின் கீழே

முடிவு :

முத்தான சிவயோக மிருநூறு தன்னை
 முறையான குருவென்வென் றெடுத்துப் பார்த்துச்
சித்தான சித்துவிளை யாடு மைந்தா
 சிவயோக மாற்கமடா திறந்தான் மெத்த
பத்தாசை கொண்டுமன மவுன மாகப்
 பதிவாகச் சிவயோகம் பிறரு றும்பார்
வித்தான பிறவியுமு அத்தும் போகும்
 மேலான சிவயோகம் விளங்கு மூற்றே 201

காலம் :

சோபகிருது பங்குனி மாதம் 13-ந் தேதி எழிதி முகிந்தது.
ருமசாமி ஏடு

குறிப்பு :

இதில் அகார சிவதீட்சை, உகார சத்தி தீட்சை, மகார தீட்சை, பூசை விதி சக்கரம், நூல் வாங்கினது விபரம், மானதம், வாலை பூசை, லகிரி நாலுவாணி உதையம், சாலோகம், மூலிகை உச்சி சாமீப வஸ்த்து, மூன்றும்பதவி, யோகம் காமியம், பூரண மெழுகு நாலாம் பதவி, ஞான சாயுச்சியம், வசியம் முதலியன உள்ளன.

oooooooooooo oooooooooooo

வரிசை எண் : 1217 சுவடி எண் : 599

## இராமதேவர் (வசியம்) சூத்திரம்

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது, பக்கத்திற்கு 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 300 அளவு : $19\frac{1}{2}$X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

**வசியம்**

மூலமுத லாதாரப் பொருளை யுன்னி
முச்சுடாரம் பரம்பொருளை முனிந்து நோக்கித்
தாருலவும் நாற்கோணத் தமர்ந்த வெள்ளைக்
கலைச்சிதனை அர்ச்சித்துக் கருணை கூர்ந்து

முடிவு :

வைக்குமடா அமுங்குதுண்டம் மேலே போடு
வருகவெண்ருல்ச் சிலத்துமேல் நின்ற துண்டம்
விபூதிதனைப் போட்டவுடன் மெல்லி யற்கு
யிருதனமும் விம்மித் தோன்றும்
நகைக்குமடா வுலகத்தில் மகேந்திர சாலம்
நன்ருகச் சொல்லுகிறேன் கேளுகேளே. 63

ராமதேவர் சூத்திரம் முற்றும்.

சிவகாமி துணை

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில், வசியம், சறுவரிநம், தனபணிமணி, முதலியன உள்ளன, பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

வரிசை எண் : 1218. சுவடி எண் : 600

# இராமதேவர் பட்சணி

ஏடுகள் : 23. ஏட்டின் நிலைமை ; மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 5–8 வரிகள். கி, எண்ணிக்கை : 400. அளவு $23\frac{1}{2}$ X 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ் ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதியந்த நடுவிருந்த சோதி காப்பு
அகண்டபரி பூரணமே யறிவே காப்பு
நீதிகலை வாணிகுரு கந்தன் காப்பு
நிரஞ்சனமாய் நிற்குணவ தீதங் காப்பு

**முடிவு :**

தானென்ற பெண்களுடன் சேர்வ தற்கு
தம்பனமாங் குளிகைதனை சாற்றக் கேளு
வேனென்ற வேர்பிடுங்கி யரையில் கட்டி
வேணமட்டும் புணர்ந்திடவே வந்து வீழா
நானென்றுஞ் சொல்லாமல் வணங்கி யுனக்கு
நாடினல் விந்துவிட வேரை வாங்கு
சாமட்டு முனைப்பிரியாத் தேடுந் தேடுஞ்
சண்டாளர்க் கறிவர்கச் சாற்றொண் ணுதே. 28

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் முகப்பு ஏட்டின் பின்னும், கடைசி ஏட்டின் பின்னும் வேறு செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன. இது ராமதேவர் அட்டாங்க பட்சணி யின் வேருயது, நல்ல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1219 சுவடி எண் : 601

# இராமதேவர் பட்சணி

ஏடுகள் : 48. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 6–7 வரிகள். கி. எண்ணிக்கை : 750. அளவு : 20X$2\frac{1}{2}$செ. மீ. எழுத்து தமிழ். ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியந்த நடுவிருந்த சோதி காப்பு
அகண்டபரி பூரணமே அறிவே காப்பு
நீதிகலை வாணிகுரு கந்தன் காப்பு
நிரஞ்சனமாய் நிற்குணவ தீதங் காப்பு

முடிவு

சொல்லடா யினமறிந்து வாசி யோகஞ்
சூட்டடா சகலகலைச் செய்தி யெல்லாங்
கல்லடா காயசித்தி யோக மாற்றங்
கருவென்ன சவுக்கார மாதி யாதி
அல்லடா பசுக்களுக்கு யின்னாலே யீய்ந்தால்
அந்திரயிடி விழுந்துதலை வெடிக்கும் பாரு
வெல்லடா நவகோடி சித்து மாடும்
வேதாந்தப் பட்சணிய தீத முற்றே 109
குருபாதமே கெதி
ருமதேவற் பட்சணி யதீத முற்றும்

காலம் :

இல்லை.

குறிப்பு :

இது முழுமையும் உள்ளது. நல்ல பிரதியாகக் காணப்படுகிறது. முன் பிரதிபோலக் குறைபாடுடையதன்று.

இதில் வசியம், தம்பனம், உச்சாடினம், மோகினிவசியம், லோக வசியம், சகல வசியம், தம்பன மூலி, நாக வாடை, பிண்டக்கரு மவுனதிவாலை, அஷ்டாங்கவாலை, அஷ்டாங்கம், ரசவித்தை, துரிசுச் சுன்னம், சூதக்கட்டு, அஞ்சனம், உருமாற்றம், மாரணம், உகசெந்தூரம், சேனைமாரணம், சாலக்கரு, உச்சாடினக்கரு முதலியன உள்ளன.

வரிசை எண்: 1220 சுவடி எண். 602 (a)

# இராமதேவர் பட்சணி

ஏடுகள்: 27. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்டது. (ஓரங்கள் எலி கடித்துள்ளன) பக்கத்திற்கு: 9-10 வரிகள். கி. எண்ணிக்கை. 600. அளவு: 19 × 3½ செ மீட்டர். எழுத்து தமிழ். ஆசிரியர்: இராமதேவர் முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியந்தம் நடுவிருந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணமே யறிவே காப்பு
(நீதிகலை வாணிகுரு கந்தன் காப்பு
நிரஞ்சனமா நிற்குணமா வதீதங் காப்பு

**முடிவு :**

யல்லடா பசுக்களுக் கிந்நூலை யீய்ந்தால்
அந்திரயிடி விழுந்துதலை வெடிக்கும் மண்டை
வெல்லடா நவகோடி சித்து மாடும்
வேதாந்த பட்சணி யதீத முற்றே. 109
குருமுன்னிற்க வேணும்

இல்லை

**குறிப்பு :**
இதுவும் முன்பிரதி போன்றதே.

ooooooooooooooooooooooooo

**வரிசை எண் : 1221** சுவடிஎண்; 602(b)

## தட்சிணாமூர்த்தி சிதம்பர பட்சணி

ஏடுகள்: 5 (28–32) ஏட்டின்நிலைமை: மிகப்பழுதுபட்டது (ஓரங்கள் எலி கடித்துள்ளன) பக்கத்திற்கு: 8–9 வரிகள். கி. எண்ணிக்கை: 150 அளவு: 21X3½ செ.மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

யேதில்லா அஞ்செழுத்தா யிஞ்சு முகமாய்
எண்ணிருந்த யிருநூத்தி யறுபத் தஞ்சா
யெதிரில்லா விஞ்சையாயி அக்கர மாகி

**முடிவு :**

### பிலமுண்டாக

ஆத்திமேல்ப் புல்லுருவி குளிசத்தி லடைத்து
அரைவைக் கிடைக்கப் பிலமுண்டாகும்
மயிரேசினையும் புளியம் பருப்பும்
நாய்ப்பால் விட்டு உரைத்துக் கையில்
தடவி நொடிக்க அம்மி நகண்டு வரும்

ஆனைக்கண்பட்ட ஒட்டை பொடி செய்து
கொடிக்காலுக்குப் போக தண்ணீரில்
கலக்கக் கரிகிப் போகும்

**காலம்:**

இல்லை.

**குறிப்பு :**

இதில். சக்கரங்கள் நிரம்ப உள்ளன. மற்றும் இதில், எதிரிவெடிக்கண் அடைக்க, சாவல்கட்டு, தொண்டைக்கட்டுக்கு, மலை வேட்டைக்கு' சாவல்கட்டுக்கு மருந்து, தயிருக, மீனுக, கோளி வேகாமல் கொசுகு கடிக்காது ஆகியவை உள்ளன,

oooooooooooo

வரிசை எண்: 1222 சுவடி எண்: 603

## எலிகடி விஷத்துக்கு மருந்தும் சூணமும்

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 8 - 9 வரிகள். கி. எண்ணிக்கை: 100. அளவு: 25X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றாற்றது.

**தொடக்கம்:**

பதினெட் டெலியல் கடிக்கு மனத்தை
பாடிப்படிக்க வந்த ருள்வாய்
பதினெட் டெழுத்து மென்னெ ழுத்தும்
பரிவாய் மனதுள் ளுரவாய்

**முடிவு:**

நல்லெண்ணை படி $\frac{1}{4}$
நொச்சி, கரத்தொட்டி,
இஞ்சி, கஞ்சா, வெத்திலை
மிளகு விராகனெடை 3
சாருவகை படி $\frac{1}{8}$
மண்டியிடித் தீரும்

**காலம் :**
இல்லை.

**குறிப்பு :**
இது, எலிகடிக்குண்டான மருந்துகளைக் கூறுவது.

வரிசை எண்: 1223 சுவடி எண். 604

# ஔஷத சுக்கிஷப் படலம்

ஏடுகள்: 40. ஏட்டின் நிலைமை: நல்லநிலை பக்கத்திற்கு: 5-7 வரிகள். கி. எண்ணிக்கை. 600 அளவு: 20X2½ செ மீட்டர். எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை:முற்றும்.

## தொடக்கம் :

ஆரணப் பொருளை யுன்னி
அழைத்திட லோல மென்றே
காரண ஞதி மூலங்
கடலிடைத் துயின்ற காட்சி
காரண மருதுகள் கேசன்
சங்கரன் மதனை நல்ல
வாரண முகத்தோன் மன்னுங்
கணபதி பாதங் காப்பாம்

## முடிவு :

### வெள்ளங்க பற்பம்

கெருட பச்சைக்கல் பலம்½ சூதம் விராகனெடை 3 மிளகுத் தக்காளிச்சாற்றில் முரித்து காடிநீர் விட்டு அரைத்து ஒருசாமவில்லை 47 எருவில் புடத்தில் போடவும் சகலவியாதியாதியாய் நீற்கு அனுப்பானம் பசுவின் வெண்ணையில் குடுக்கவும்

வரகது சங்கவேர்த் தயில முழுகுமுன்னுதாக
விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்

## காலம் :

இல்லை

## குறிப்பு:

இதில், உலக வசியம் சூரியவசியம் கரு மாறல் பிள்ளைபெற மாட்டாத பேருக்கு ஓதிக்குடுக்க மந்திரம், வயிற்றுவலிக்கு மந்திரம், தேளுக் கடிக்கு மருந்து, ரத்த மரிபட்ட மந்திரம், மூச்சுக்குத்துக்கு மந்திரம் முதலியன உள்ளன சக்கரங்களும் உள்ளன.

வரிசை எண்: 1224 சுவடி எண்: 605

# கருவூரார் நொண்டி [நாடகம்]

ஏடுகள்: 14. ஏட்டின் நிலைமை: சிறிது பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு: 6-10 வரிகள் கி. எண்ணிக்கை: 300. அளவு: 23×3 செ. மீ. எழுத்து: தமிழ்- ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்:

பூவுலாவிய தேவிசுந்தரி போதசுந்தரி மாயி சிற்பரை
பூணுநற்சிவ ஞானசித்திக ளேகொண் டாடவே
காரு லாவிய போக ருயகர் கடவுள க்ஷத்திய ரிஷிகள் தேவர்கள்
கருணை நந்தீசர் பாதந் துணையே கொண்டாடவே

## முடிவு:

### கும்மிப்பாட்டு லயம்

கும்மியடி பெண்ணே கும்மியடி
கோறக்க நாதர் திருமூலர் செம்மலுரை
வண்ணான் பார்.
.............................
இப்படி வெள்ளை வெளுத்த வண்ணான்வன் அவன்
அப்படி வெள்ளை வெளுத்தானே
அப்படி வெள்ளை வெளுத்த வண்ணானை
ஆடிக் கும்மி யடியுங்கடி
இது சந்தம் 39

## காலம்:

இல்லை

## குறிப்பு:

இதில் தலைப்புக்கள் காணப்படாவிடினும், கர்ப்பஞ் சாப்பிட்ட பேரறிய, நாய்ப்பாகல், சவுக்காரக்குரு நாகரசபஸ்பம், உப்புக்கட்டு, வல்லாரைக் கற்பம், தேவதைகண்டோர் மகிமை, கும்மிப்பாட்டுலயம் ஆகியவை உள்ளன.

இது கருவூரார் நொண்டி 700 என்ற பேரால் அச்சாகியுள்ளது, இதில் பிழைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இது எமது சுவடிஎண் 322 (f)/D 619 போன்றது. இதில் 39 பாடல்கள் உள்ளன

இதன் பின்னர் மருத்துவம் எழுதிய ஏடு ஒன்று கருவூரார் பெயரால் உள்ளது.

வரிசை எண்: 1225 சுவடி எண்: 606

# கருவூரார் நொண்டி நாடகம்

ஏடுகள்: 107. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 7 வரிகள். கி. எண்ணிக்கை: 1700. அளவு: $26\frac{1}{2}\times3$ செ.மீ. எழுத்து: தமிழ் ஆசிரியர்: கருவூரார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

சீருலவு கற்பமுறை போத மீறும்
 செல்வ கஷ்தியர் போக நாதரீசர்
தாருலவுந் திருமூலர் சட்டை நாதர்
 தமையனென்றுங் கொங்கணவர் சகஸ்த்த வேதை

**முடிவு:**

கூருடன் திரிவதேது கோசமும் பாசஞ்
 தானுமன் தோர்வண்ணங்
கோரோசனையுமே யாட்டிக்
 கூட்டித்தே னினுலாட்டிக் கூட்டி
சிறுபயத் தளவு செயிதுத்தா னதுநிளலுலத்தித்
 தயவுடன் வேதையாரே. 302
பாரப்பா நிலவுப்பாலே பார்க்கி யுப்பைக் கட்டு
பாரப்பா யிரவியிந்து பண்புடன் சுத்தி செய்வாய்
வாரப்பா காரசாரம் பகலவன்.........
 ........................................................................ 303

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இது முன்பிரதிபோன்றது. ஆனால் இதில் 302 பாடல்கள் உள்ளன. இதில் 700 பாடல்கள் இருக்க வேண்டும். இது எமது சுவடிஎண்322 (f)/D 619 போன்றது

இதில், சரக்குவிதி, நாகரசபற்பம், ரசக்கட்டு, காரச்சுன்னம் பாசாணக்கட்டு, வசியம், உப்புக்கட்டு, குளிகைநூற்றெட்டு, ரசவாத, விபரம், துரிசுச் சுன்னம், சவுக்காரச் சுன்னம் முதலியன உள்ளன.

வரிசை எண் :1226 சுவடி எண்: 607

# காசவகை 96க்கும் சௌபாக்கிய சூண்டி

ஏடுகள்:7 ஏட்டின்நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100. அளவு : 15½X3½ செ. மீ. எழுத்து தமிழ். ஆசிரியர் : காணப்படவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

அகத்திவிக்கும் மப்பனே நோய்க்கு மார்ப்பாணி
அரையிரேன் சௌபாக்கிய சொண்டி தன்னை
அகத்திவிக்கும் கரிசாலை பொடிதலையின் மூலம்
அளாகாகத் தரியிட்டு நிழலு லத்து மூலத்தி

**முடிவு :**

மாமடா சிறுகீரை பொன்னுங் காணி
அரைக்கீரை யொருகெளிறு லத்தி வருலுங் கூட்டு
ஆமடா உப்புமுளக் குள்ளி யாகு
அரகரா வெண்ணீரு மந்திவிட லாமே 6

**காலம்:**

இல்லை.

**குறிப்பு :**

இதன் பின் 2 ஏடுகளில் மேற்கண்ட பாடல்கள் 5-ம், 6-ம் பாட்டில் பொன்னுங்காணி வரையிலும் எழுதப்பட்டுள்ளன.
மேலே உள்ளது, முதல் 5 ஏடுகளில் எழுதப்பட்டவை.

வரிசை எண்: 1227 சுவடி எண்: 608

# கைலாசச் சட்டைமுனி மூர்த்தி நிகண்டு

ஏடுகள்: 63. ஏட்டின் நிலைமை: நல்லநிலை பக்கத்திற்கு: 6-10. வரிகள். கி. எண்ணிக்கை:500 அளவு: 33×3 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கைலாசச் சட்டை முனியார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
யடுத்துநின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றி

பாதியந்த மாகநின்ற உமையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே

**முடிவு:**

விழுகுந் திராவகம் விந்தைகேள் சுந்தரா
ஒழுகின்ற அப்பிரகச் சத்து ஒருபலம்
தளுகின்ற கல்வத்தில் தாக்கி நொறுக்கிட்டு
முழுகின்ற திராவக மூட்டியிதில் வாரே. 730

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதன் பின்னர் உள்ள ஏட்டில் 789, 780-ம் பாடல்கள் உள்ளன. இதில் காந்தம், அப்பிரகம், கல்காரை சாத்திரவேதி, கல்மதம், நீலாஞ்சனம் முதலானவற்றின் வேறுபெயர்கள் கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடிஎண் 342(c)/D 670. எண்344/D 673 போன்றது. இதன் பின்னர் 5 ஏடுகளில் வைத்தியம் எழுதப்பட்டுள்ளன. மந்திரங்களும் சக்கரமும் உள்ளன.

oooooooooooo

வரிசை எண்: 1228 சுவடி எண்: 609

## கொங்கணர் சரக்கு வைப்பு 100

ஏடுகள்: 29. ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள்: கி. எண்ணிக்கை: 600. அளவு: $21\frac{1}{2}$X$3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
யகந்துநின்ற போகருட பாதம் போற்றி
சோதியென்ற சின்மயத்தின் ஆயீ பாதம்
துலங்கியதோ ரிஷிகளுட பாதம் போற்றி

**முடிவு :**

நில்லாத நிலைகளிலே நிறுத்தி வைக்கும்
நிலையான குண்டலிதான் தாரை காட்டும்

சல்லாப காயசித்தி ஞான மாச்சு
சரக்குவைப்புச் சூத்திரந்தான் சார்ந்து பாரே. 101
கொங்கண நாயகர் துணை
சிவகாமி துணை
குருவே துணை

காலம்:

இல்லை.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 35 (a) /D 57 போன்றது. அதைவிட ஒரு பாடல் கூடுதலாயுள்ளது.

ooooooooooooooooooooooo

வரிசை எண்: 1229 சுவடி எண்: 610(a)

## கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம் 11

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 6 வரிகள். கி. எண்ணிக்கை. 80. அளவு: 16 x $2\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றும்.

தொடக்கம் :

கொளிகினேன் முறைமுறையாய்ச் செம்பு சுத்தி
குறையாமல் பாத்தோர்க்குப் பொன்னே யாகும்
நளிகினேன் னென்றுமெள்ள நழுவி விட்டால்
நாய்போலே யலைவார்கள் வாதி மெய்யா

முடிவு :

தண்மையுட னிம்முறையைச் சாதித்தேறு
சாதித்து யான்கண்ட ராச வீதி
கண்மையுடன் மறந்துவிட்டால் வாதம் பொய்யாங்
கசடரே கருதியுன்னிக் கவிழ்ந்து பாரே. 11
கொங்கண சுவாமி பாதமேகதி

காலம் :

இல்லை.

குறிப்பு :

இதில் வாதமுறைகள் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 1230 சுவடி எண் : 610 (b)

## கஸ்தூரி

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை; சிறிதுபழுது. பக்கத்திற்கு : 6 வரிகள் கி, எண்ணிக்கை : 50. அளவு 16X2½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை ; தெரியவில்லை.

**தொடக்கம் :**

போகுமடா மகத்தான கிரிகள் தீவு
புனல்மிகந்து நல்லதண்ணீர்க் கடலுக் கப்பால்
யேகுமடா கஸ்தூரிப் பிள்ளை யுண்டு
யிருநாவிப் பிள்ளையுண்டு யாதி யுண்டு

**முடிவு :**

முற்பெரிய ஞதாக்கள் ரிஷிகள் செய்வார்
முக்கோடி தேவரிது செய்வார் பாரு
அப்பெரியோ ரடாத வித்தைக் கெல்லா
மாடலாம் கைச்சித்திர மரிந்து பாரே.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் தலைப்பு தெளிவில்லை. இறுதியிலும் தலைப்பு பற்றிக் கூறப்படவில்லை.

oooooooooooo oooooooooooo

வரிசை எண் : 1231. சுவடி எண் : 610(c)

## இராச சண்டேசுரன்

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 5–6 வரிகள். கி. எண்ணிக்கை : 60. அளவு : 16X2½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை: முழுமை: இல்லை.

**தொடக்கம்:**

ரசம் வீராகனெடை 1
நாபி ,, 1
கெந்தி ,, 1
தாம்புர பற்பம் ,, 1

இதுக்கு ரெட்டி லிங்கம் கூட்டி வெண்ணெச்சிச் சாறு விட்டு நாலு சாமமரைத்து நிழலுலத்தி அனுப்பான மறியிடவும்.

**முடிவு :**

நேர்படப் பிளந்து ......... ம பத்தெனும்
வாய்வுச் செய்தி பகர்ந்து பின்னூலு
வாய்வு சுத்தனு மவயிரண்டு .........
........... பிறவனசன் அந்திரியாமி 7

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது வைத்தியத்திரட்டு போன்றது. பலவகை மருந்துகள் கூறப் பட்டுள்ளன.

••••••••••••••••••••••••

வரிசை எண் : 1232 சுவடி எண். 611

## கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8 வரிகள். கி. எண்ணிக்கை : 300. அளவு : 28X3 செ.மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதியே தந்தமே தகண்ட மேது
அப்புறத்தே நின்றபூ ரணந்தா னேது
நீதியாய் நின்றதொரு நினைவங் கேது
நேராத சுளினைதனை நிலைய தாகுஞ்
சோதியே

**முடிவு:**

செய்யப்பா பொறிகடலை அவல்தேங் காயும்
செவ்விளநீர் கரும்புபால் பரமா னங்கள்
உய்யப்பா கமலமுனி பிரமமுனி மச்ச
வேதமுனி மூவரையும் சூட்சம் பண்ணி
பையப்பா சகலமெல்லாம் நெய்வேத் தியங்கள்
பண்ணிப் ......... ..... ............... 62

**காலம்:**

இல்லை.

**குறிப்பு :**

இது 610(a)/D 1229-ன் வேருயது.

வரிசை எண் : 1233 சுவடி எண்; 612

## கௌமதி வைத்தியம் - 400

ஏடுகள் : 41. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1000. அளவு : 28×3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : கௌதமதீசுரர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

சிவகிருபை பாதமது போத்தி நாளும்
    தெரிந்தெடுத்துப் பதிணென்பேர் மறைத்தல் யாதுந்
தவம்பெறவே கௌமதியில் பாடல் நூலில்
    சாத்திேனும் வைத்தியங்கள் யோக ஞானம்

**முடிவு :**

பாரப்பா கலைக்கோட்டான் தவசு மார்க்கம்
    பாவையர்க ளானபோது மாத ராலே
தேரப்பா ரதமான ரதத்தி லேத்தி
    தெளிவறமின் கொண்டுசெல்ருர் கதையி ஞலே
நேரப்பா கெடுவசிய வளிநே ராச்சு
    நேர்மையறிந் தினமறிந்தாற் பவமொன் றில்லை
சேரப்பா சேர்ந்துதனம் பறித்து நீயுஞ்
    சிகந்தனிலே கூன்குருடா முடவற் கீயே. 190

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் மதனவேலி மதங்கத் தயிலம். கெர்ப்பவாதினைக்கு, வாழாத பெண்ணுக்கு, யீட்டுமுறை யிருள்வேலி முதலிய வசியம், ஸ்ரீ வசியம், போகநிலை சாதி நிண்ணையமறியும்படி, ஓமலேப்ப வாய்வுக்கு, சுக சன்னிக்கு, யோகமார்க்கம், வழலைக்குரு மார்க்கம், கல்ப்பங் கொள்ள, பவள வச்சிரம், முதலியன உள்ளன.

முகப்பு ஏட்டிலும் முதல் ஏட்டில் எழுதப்பட்டுள்ள பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. கடைசி ஏட்டில் வைத்தியம் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண் : 1234 சுவடி எண் 613

# சத்தி யாரூடம்

ஏடுகள் : 27, ஏட்டின் நிலைமை : சற்றே பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள். கி. எண்ணிக்கை : 800. அளவு: $14\frac{1}{2}$ X $3\frac{1}{4}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ் : ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றும்.

## தொடக்கம் :

பாதிமதியினி வெளியானுர் கஞ்சப் பதம்
போற்றியே யுலகில் பருவ மாக
ஆதிபரா பரையுமை மாதங்கி சத்தி
யாரூட நீதிநெறி யறிவைக் கேளு
வேதமுறை யுரைத்தபடி யிந்தப் பாரில்
விடவகைக ளுரைத்திடுவே னனந்தன் தற்கண்
சோதிமகா பறப்பன் வாசுக் குளிகன்
மிக்கதுய்ய சங்குபாலன் கார்க்கோடன் தானே. 1

## முடிவு:

தரித்திரங்க ளணுகாது தற்ம முண்டாம்
தாரணியிற் சித்தர்வந்து தருவார் புத்தி
கருத்துடனே ஆத்தாளு மீசன் ருனுங்
கடாட்சித்து காட்சி தருவார்க ளொருநூறு முற்றே 103

சிவகாமி துணை
குருவே துணை

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில் சித்தாந்த பீரி மாத்திரை, சுடுகாடு மீட்டான், சங்கார வயி-ரவன், கீரி அஞ்சனம், ராமபாண மாத்திரை, பஞ்சபாணக் குளம்பு, சிந்தாமணி லேகியம், சஞ்சீவியுண்டை, திருநீலகண்டக் குளிகை, விநாயகனுர் நசியம், குடோரி குளம்பு, சஞ்சீவிக் குளம்பு முதலியன உள்ளன.

இதில் பாம்புகளின் வகைகள், அது கடித்தால் அதற்கான மருந்துகள், மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 1235 சுவடி எண்: 614

# சித்திராரூடம்

ஏடுகள்: 13 ஏட்டின் நிலைமை: மிகப்பழுது பக்கத்திற்கு: 10-12 வரிகள். கி. எண்ணிக்கை: 400 அளவு: 14½ X 4 செ.மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்:

ஆறுமுகக் கடவுளிரு பதமே போற்றி
அகத்தியர் முனியுரைத்த சித்திரா ரூவுத்தில்
கூறுகிற தூதன் வடிவுங் கையில்
கொண்டுவருவது குறியுங் குணமுங் கண்டுவந்து
யேறுகிற திசையுமானவன் வாயால் சொன்ன
னெழுத்தையெண்ணிப் பார்த்துவிரலி லெண்ணிவாரு
தேருகிற தானபெங் வலமிடங் கீழ்மேல்
சேர்ந்தயாதி தனிலென்று தெரியும் வாரே. 1.

## முடிவு:

உப்பாகும் முரிகலிங்க சாற ருகு
முத்தமதா யுமவேளை மேனி யாகுங்
கொப்பாகு முருங்கையந் தண்டை யாகுங்
குளிமீட்டான் சார்தலுங் குளமாம் பூச்சிப்
பாரில்விடந் தீர்த்தால் வேறோர் சொன்ன
மெடுதுவை குண்டமே பதலாகும்
தப்பாது செந்தூர வாள்சுப்பிர மணியசுவாமி
தவறுமல்ச் சொன்னமுப்பத் தஞ்சுநூல் முற்றே. 35.

தேவிசகாயம்
சிவகாமி சகாயம்
குருவேதுணை

## காலம்

இல்லை.

## குறிப்பு:

இதில், பாம்புகளின் வகை, அதுகடித்தால் மருந்து முதலியன கூறப்பட்டுள்ளன, இதன் முகப்பு ஏடுகள் 3-ல் சக்கரங்கள் மந்திரங்கள் உள்ளன,

இது முன்னதின் வேறுயது.

வரிசை எண் : 1236 சுவடி எண் : 615

# சித்திராரூட நொண்டி

ஏடுகள் : 45. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 5–6 வரிகள். கி. எண்ணிக்கை : 500. அளவு : 34X3 செ.மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**காப்பு**

அத்திமா முகவன் செய்ய
அடியிணைக் கமலம் போற்றி
சித்தரு ரூடம் தன்னில்
செப்பிய பொருளை யாய்ந்து
சுற்றமாமு யெவர்க்குந் தோன்ற
சுருக்கமாயி னொண்டி சீநாயி
வித்தகர் ஒளிவி னாலே
தமிழினை விளம்ப லுற்றேன்

**நூல்**

திருமருதூர் வளரும நாக லிங்கர்
சீர்பாத கமலமென் சிரசில் வைத்து
மருவுந் சித்திரா ரூடப் பொருளினை
வகுத்துச் சொல்கிறே நிந்த மகிதலத்தில்

**முடிவு :**

மாஞகை முதலாக பலவிஷ மானிடர் தம்மைப்
பத்திவாசை செய்தால் மந்திரத்தால்
......... ......... ......... ......... .........
திருமகள் விளக்கம் பெற்றுப் பதினாறு
சீவரைப் பெற்று முற்றிசெய்வ தாமே
தந்தனத் தானை

**காலம் :**

சுபானு வருடம் பங்குனி மாதம் 23-ம் தேதி கிஷ்ணபட்சத்தில் அட்டமி வாரனுள் சுபயோக சுபதினத்தில் சித்திரா ரூடம் எழுதி முகிந்தது முற்றும்.

குருவே துணை
சிவகாம்பாள் துணை
மீனாட்சி துணை

குறிப்பு :

இது எமது சுவடி எண் 21(a)/D29 போன்றது. இது அச்சிடப் பட்டது. இதில் காப்புச் செய்யுள் மிகுதியாகக் காணப்படுகின்றது, இது நொண்டி நாடகப்பாணியில் தந்தனத் தானை என்றபடி பாடப் பட்டுள்ளது.

பின்னர் 8 வெவ்வேறு ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

oooooooooooo

வரிசை எண்: 1237 சுவடி எண்: 616

## சித்திராரூடம் நொண்டிச் சிந்து

ஏடுகள்: 46 ஏட்டின் நிலைமை: நல்லநிலை, பக்கத்திற்கு: 7–8 வரிகள். கி. எண்ணிக்கை: 800 அளவு: 22X3 செ. மீட்டர் எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்:

திருமருதூர் வளரும் நாக லிங்கர்
சீர்பாதம் கமலமென் சிந்தையில் வைத்து
மருவுஞ் சித்திராரூடப் பொருளினை
வகுத்துச் சொல்லுகிறேன் இந்த மகிதலத்தில்

### முடிவு:

மந்திர தந்திரத்தால் தியானத்தால் மருந்தினல்
மணியினல் யெந்த விதமும் முந்திடும்
விடங்களெல்லாம் தீர்ந்திடுமே முதிய
வாசிரிய வாறென்று யிந்த தினமிசை
ஒருநூறு பருவஞ் சரிவாள்ந் திருப்ப வாழ்வார்.

### காலம் :

இல்லை.

### குறிப்பு:

இதுவும் முன்பிரதி போன்றது. பாடவேறுபாடுகள் மிகுந்துள்ளன.

வரிசை எண் : 1238 சுவடி எண் : 617

## தேவியாரூடம்

ஏடுகள் : 42. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 7–9 வரிகள். கி. எண்ணிக்கை: 900. அளவு: 21X3 செ,மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பாதிமதியணி வேணியரனார் கஞ்சப் பதம்
போற்றியே யுலகில் பருவ மாக
ஆதிபரா பரையுமை மாதங்கி சத்தி
யாருட நீதிநெறி யறிவைக் கேளு

**முடிவு :**

தரித்திரங்க ளணுகாது தர்ம முண்டாம்
தாரணியிற் சித்தர்வந்து தருவார் புத்தி
கருத்துடனே ஆத்தாளு மீசன் முனு
கடாட்சித்துக் காட்சி தருவார்கள்
ளொருநூறு முத்தே. 103

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் 613 / D 1 234 போன்றது. இதன் பின்னர் மத்திரங்கள் சக்கரங்கள் எழுதிய ஏடுகள் 4 உள்ளன.

oooooooooooooooooooo

வரிசை எண் : 1239

சுவடிஎண் : 618

## சட்டைநாதர் வகாரம்—200

ஏடுகள்: 94. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1500. அளவு 17 X 3 செமீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : சட்டைநாதர். முழுமை : முற்றுமுளது

**தொடக்கம் :**

காப்பு

சூத்திர மோது முன்னே
சொல்கிறேன் கிணேசன் காப்பு
சாத்திர நிறைந்து பொங்கி
சராசர மெங்குந் தானாய்
தோத்திரப் பொருளுந் தானாய்
சொல்லத்து மவுன மத்து
போத்திரி பிறப்புள் ளான
பூரணங் காப்புத் தானே

நூல்

குருவான பூரணமே சின்மயமே அய்யா
குவட்டிலுள்ள சித்தரெல்லாம் கூடிக் கொண்டு

முடிவு :

காரன சின்மயத்தின் பிள்ளை நாங்கள்
குரியேது கயிலாச மூர்த்தி லராகம்
வேனை சூத்திரந்தா னிருநூத் தொன்றும்
வேதாந்திக் கருணையினால் விளங்க முற்றே. 200
முத்தே.

பீதாம்பர சுப்புவையரவர்களுக்கு சட்டநாதர் 200 ராமசாமி எழுதி முகிந்தது. முற்றும்
குரு முன்னிற்கவும்
சிவகாமி துணை

காலம்:

பிலவங்கா வருஷம் தை மீ 26ம் தேதி புதன்கிழமை னள் முற்றும்

குறிப்பு:

இதில், சவுக்காரஞ்செயம், சவுக்காரச்சுன்னம், சீனச்சுன்னம், உப்புக் கட்டு, சாரநிறம். பாறையுப்புக்கட்டு, துத்தக்கட்டு, உமாசத்தி ஆதி சத்தம், தாம்பிர வேதை, தங்கச்சுன்னம். பாறையுப்புக்கட்ட வங்கச் சுன்னம், நிமிளைச்சுன்னம், சாரச்சுன்னம், ஆறுதிகாரணவத்து முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1240 சுவடி எண் : 619

## சலக்கழிச்சலுக்கு பாகடம்

ஏடுகள் : 27. ஏட்டின் நிலைமை : நல்லநிலை, பக்கத்திற்கு ; 7–8 வரிகள். கி. எண்ணிக்கை : 600. அளவு : 23X3. செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது,

தொடக்கம் :

மாதுஉமை பாகன் சொன்ன
மாமறை முதலை யாய்ந்து
தீதுதான் நினையார் வண்ணந்
திருவிளத் தருளி னலே

முடிவு :

இதுவெல்லாம் பால்வாத் தரைத்துக் கரைத்துப்
பசுவின் நெய்யிற் கூட்டி எறிச்சி பதத்தில்

வடித்துக் கொண்டு தினம் ஒரு கரண்டி
சாப்பிடவும் இரண்டு நேரமும் சாப்பிடவும்
பெரும்பாடு தீரும் கைகண்டது.

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இதில், இதில்தீருகிற வியாதிக்கு மருந்து, எலும்புருக்கி நெய், பெரும்பாடு தீரும், பெரும்பாட்டுக்கு மருந்து, புருஷ பிரமியத்தில் குணம், நீர்க்கட்டுக்கு பிரமியத்துக்கு இரத்த பிரமியத்துக்கு, இரத்த பிரமியம் நீரிரக்கிறதுக்கு மருந்து, உடம்பெரிப்புக்கு, நீர்க்கடுப்புக்கு பெரும்பாட்டுக்கு நெய் முதலியன உள்ளன,

❖❖❖❖❖❖❖❖

வரிசை எண்: 1241 சுவடி எண்: 620

## சரக்குக்கட்டு - பலதிரட்டு

**ஏடுகள்:** 37. ஏட்டின் நிலைமை. நல்லநிலை பக்கத்திற்கு: 6–8 வரிகள் கி, எண்ணிக்கை: 600. அளவு: 19½X3 செ. மீட்டர் எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

செந்தூரமாம் இரக்கிக் கொள்ளவும் துய்யாநிலமாகக்
கொடுக்கவும் பத்தியம் பச்சை நாகமும் பலம்-3
அது உருகுற முகத்தில் கட்டிச்சாரம் பலம்-1
கூட்டி யுருக்கவும் நாகம் புகையாமல் கட்டும்

**முடிவு:**

இஞ்சிற பறுவத்தில், கோரோசினை, புனுகு, கொஞ்சம் போட்டு இஞ்சின பிறகு யெடுத்து கவிப்புக் குடுக்கவும்.

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இதில், கைசெந்தூரம், சுயம், பாசாணங்கட்ட, தங்கசெம்பு, லிங்க கட்டு, நாகங்கட்ட, ரசங்கட்ட, வெள்ளியம் நீருக்குவது, தாளகத்துக்கு மேல் வித்தை, தாளகங்கட்ட, உப்புமணிக்கட்டு, லிங்கக்கட்டு, துய்யாளைக்கட்டு, நவச்சாரக்கட்டு, நாகக்கட்டு, கட்டினநாகத்துக்கு மேல் வித்தை முதலியன உள்ளன.

வரிசை எண்: 1242 சுவடி எண் : 621

# சுந்தரானந்தர் சூத்திரம்-36

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை. நல்லநிலை. பக்கத்திற்கு: 10-11 வரிகள். கி, எண்ணிக்கை: 200. அளவு: 22×4 செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

### சுந்தரானந்தர் (ஆ) அதீதம்

சீரான உமைதேவி பாதம்போற்றி
செகமகிழும் சுந்தரரைப் புவியோர் மெச்சப்
பேரான அதிசயநூல் முப்பத் தாறும்
பிரியமுடன் பாடுதற்குக் குருவைப் போற்றி

முடிவு:

கஞ்சனமாம் உருவேத்தி பழுசை பண்ணி
கடினமடா அதிசயந்தான் முப்பத் தாறு
துஞ்சிவிட்டால் கிடையாது அதிஷ்டம் வேணும்
சொல்வார்கள்க் குருவதனைச் சொல்லா ருணை 36

காலம்:

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 226 (i) /D 365 போன்றது. ஆனால் அதற்கும் இதற்கும் பாடவேறுபாடுகள் மிகுந்துள்ளன. கடைசி பாடலே வேருக உள்ளது.

---

வரிசை எண்: 1243 சுவடி எண்: 622

# சுந்தரானந்தர் அதீதம்

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்டது. (தொடக்கம் எலி கடித்துள்ளது, பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 200. அளவு : 19×3 செ. மீ. எழுத்து : தமிழ்- ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

.............. ககனுகத் தேன் வழலை யணி நீர்ப்பாம்பு
...... ...... ...... ......
னியரிவர் பெரியோரே

**நூல்**

..................யாமென்ற சுற் அக்கணமு மாகி
அதிலேதான் சுழித்தயிரு சுழியு
பாதபொருளாகிச் சித்தரியு மாகிச்
சிவமுமாய்ச் சத்தியுமாய்

**முடிவு :**

கெலித்து...... கெவுரிசிந்தா மணியோ டப்பா
கின்ற தானகளு மனேசிலை யிதுவெல் (லாந்தான்பாள்
நலிந்திட்ட மானமுரை கயிலாசமுனி சொன்னர்
நன்...... யிதையெடுத்து நான் சொன்னேனே 33

சிவமயம்
சுந்தரானந்தமூர்த்தி அதிதமூற்றும்

தேவிசகாயம்
குருபாதமே கதி
சிவகாமியம்மன் துணை
ஸ்ரீராமஜெயம்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதன் முன் சுவடியில் சுந்தரானந்தர் அதீதம் என்ற தலைப்பு காணப்படுகிறது. அதனினும் இது வேறுயது,

ooooooooooooo

வரிசை எண் : 1244 சுவடி எண்: 623

# தட்சிணமூர்த்தி சூத்திரம் 1200க்குச் சுருக்கம்-65

ஏடுகள்: 25. ஏட்டின் நிலைமை: சிறிதுபழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 400. அளவு : 17X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : தட்சிணமூர்த்தி, முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பூரணமாய் முடமூலக் குருவைப் போற்றிப்
புகழான சாலவகை அட்ட கற்மங்
காரணமாய் மைத்திலத மடக்கஞ் சேர்வை
கருத்தான தியானமொடு தந்தி ரங்கள்

**முடிவு :**

சாதகமாய்ப் புலித்தோலை யிடக்கையில் வைத்த
படிஅதைத் திறந்திடவே தோலை மூடு
காதலுடன் தேரையென்ற தவளை யல்லாக்
கைகால்போ யிறகதுபோல்த் தோற்று மாரே. 53

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில் வாலைபூசைசக்கரம், நெகிழ்ந்த பேர்தனக்கு நாககட்டு, ரச குளிகை, யேமநீறு, சீரணியில் பூ ஜை கள், சாலவித்தை, அகசினித் தம்பனம், முட்டையடத்து, வியாதிக்கு செந்தூரம், அடக்கமெளும்ப, தேரைவித்தை முதலியன உள்ளன.

••••••••••••••••••••••••

வரிசை எண் : 1245 சுவடி எண் : 624

## தட்சிணாமூர்த்தி ரச குளிகை 14

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு ; 9-11 வரிகள். கி. எண்ணிக்கை : 150. அளவு : 15 × 4 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றும்.

**தொடக்கம் :**

ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்
சோதிநிற மாகிநின்ற கிணேசன் பாதம்
சொல்தனக்கு யெட்டாத சூச்சா சூச்சம்

**முடிவு :**

யேற்கவே ரசமணியின் மார்க்கந் தானும்
யென்மக்காள் சொல்லிவிட்டேன் யோகமாற்கம்
சேர்க்கவே யிம்முறையை உனக்குச் சொன்னேன்
செழுங்கருணை பதிணலில்க் கிடாட்ச முற்றே. 4

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில் ரசமணி, கெவுனகுளிகை, நுனிநாக்கை அண்ணாக்கில்மோதி லம்பினியோகம் செய்தல், சுவாசபந்தனம் செய்தல், முதலியன காணப் படுகின்றன. இதுபுலத்தியருக்கு உபதேசித்தது. இம்முறையை வெளியில் சொன்னால் கழுதையாய்ப்பிறப்பார்கள் என்று 13ம்பாட்டில் காணப் படுகிறது.

இது, எமது சுவடிஎண் 236 (K) / D 403 போன்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

வரிசை எண்: 1246 சுவடி எண்: 625

# தன்வந்திரி வைத்தியம் 500

ஏடுகள்: 77. ஏட்டின் நிலைமை : நல்லநிலை, பக்கத்திற்கு : 9-11 வரிகள். கி. எண்ணிக்கை: 2000. அளவு: $21\frac{1}{2} \times 4$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

வேள மாமுகன் விண்ணவர் தண்பதம்
நாளு மேனினை வார்வினை நாசமாம்
ஆழி நால்வருங் கோளு முதிர்த்திடா
வாழ்வ தாகிய செல்வம் அமைக்குமே. 1

முடிவு :

பொடிதனை யெடுத்து நீயும்
புகழ்ந்துதான் தேனை விட்டு
வருகடி யுள்ளே கொள்ளும்
விடிசந்தி நேரம் ரெண்டும்
கடிவிசம் பசங்கிச் சூலை
கறுத்திடுங் குட்ட ரோகம்
சடுதியில் சிரங்கு தீரும்
தானிரு பதுனள் கொள்ளே 521
யிறுபதுனளெல்லவனமும் பிளியுந்தள்ளி
சிவகாமி துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், குழந்தையளுக்குக் குளிகை, வாதத்துக்கு, பித்தம் நாற் பதுக்கும், வாதத்தின் குணம், வரள்ச்சூலைக் குணம், குடல்சூலைக்குணம், உதிரச் சூலைக்குணம், வாரிச்சூலைக்குணம், கபாலசூலைக்குணம், வெடிச் சூலைக்குணம், கரப்பான் சூலைக்குணம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1247 சுவடி எண்: 626

# தன்வந்திரி நாதுநிதானம்

ஏடுகள்: 22. ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள். கி. எண்ணிக்கை: 500. அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ்: ஆசிரியர்: தன்வந்திரி முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்:

நாடி பார்க்க

பூங்கர் வனமும் புவிதனி லெல்லோரும்
பாங்கான தர்மவித்தை பார்க்கவே—ஒங்குபுகழ்
தன்னல் விரும்பிச் சாற்றுதற்கு நாள்தோறுங்
கன்னமிரு கொம்புடையோன் காப்பு 1

## முடிவு:

உலத்தி பொடிபண்ணி சிமினி லடைக்கொண்டு
முப்பத்திரண்டு சென்னிக்கும் நினைவு தெரியாத
சென்னிக்கு ரெண்டு பணவிடை நாசியில்
வைத்தாதினல் உடனே யெழுந்திருப்பார்கள்
தும்மலுண்டானல் பிழைப்பார்கள்
யிது அறியவும்

## காலம்:

இல்லை

## குறிப்பு:

இதில், பூதசுரம், அசீரணசுரம், கிஷாயம், அபிகாதசுரம், விஷசுரம், தருணசுரகிஷாயம், எலும்பு பற்றிய அத்திசுரம், கிஷாயம், குருதியை (இரத்தத்தைப்) பற்று சுரகுணம், திரிதோஷ சுரம், சன்னிக்குணம், பித்ததோஷத்துக்கு குடிநீர், செந்நிக்கு நசியம் முதலியன உள்ளன.

•••••••••••••

வரிசை எண்: 1248 சுவடி எண்: 627

# திரட்டு வாகடம்

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை. நல்லநிலை பக்கத்திற்கு: 8-10 வரிகள். கி. எண்ணிக்கை: 200. அளவு: 21$\frac{1}{2}$×3 செ.மீ. எழுத்து: தமிழ், ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

மருந்துவகை

வாதந்தா னெண்ப தாக
வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம்
சிறந்துடல் முடக்கு வாதம்
நூத்தாஞ் சந்து வாதம்
தோன்றிய முகத்து வாதம்
போதமாம் வாதந் தீர
பேசிடும் மருந்து கேளே.

**முடிவு :**

தெள்ளுமண் பூனுக மரைப்பொடி
வெண்காரஞ் சேர கொள்ளும்
வழகிய படர்கொஞ் சிஞ்சி
யுள்ளபடி ஆறும்
பழச்சாத் தரைத்துப் போதுந்
தூதக் கூறும்மே புக்கவசங்கொள்

திரட்டு வாகடம் முற்றும்
சிவகாமி துணை
விநாயகன் துணை
ருமசுவாமி எழுத்து

**காலம் :**

விரோதி வருடம் பிரட்டாசி மாதம், 11ம் தேதி ஆதித்த வாரனுள், எழுதிமுகிந்தது முற்றும். ஸ்ரீ ரஸ்து குருவே துணை.

ருமசெயம்

**குறிப்பு :**

இதில், மருந்துவகை, பித்தத்துக்கு, சென்றுமத்துக்கு, மூலத்துக்கு, கிறுணிக்கு, குன்மம், நீரழிவுக்கு மேகத்துக்கு காமாலைக்கு, கிரந்திக்கு கவிசைகெண்டை, காசரோகம், சன்னிக்கு மாத்திரை, வலிப்புக்கு, கரப்பானுக்கு, விஷபாகத்துக்கு, கண்டமாலை, கண்ணுக்கு மாத்திரை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1249 சுவடி எண் : 628

## திருநடன சூத்திரம்-48

ஏடுகள் 18. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 10 13 வரிகள் கி. எண்ணிக்கை : 400. அளவு : 12$\frac{1}{2}$X3$\frac{1}{2}$ செ. மீ எழுத்து : தமிழ். ஆசிரியர் : தெரியவில்லை. முழுமை : முற்றுமுளது

தொடக்கம் :

நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
நடனதிரு சூத்திரத்தைப் பாடு தற்கு
ஆடியதோர் கணபதியுங் கந்தன் றானும்
அருள்பெருகும் நாதாக்கள் ரிஷிகள் காப்பு

முடிவு :

நானென்ற சாம்பிராணி சூடன் ரெண்டும்
மஞ்சேசிலை மண்செய்து
காடை புடத்தில் மூன்று வெள்ளீர்
சாதிலிங்கம் வெகுநோய்க் காகு
விளங்குகின்ற சூத்திர நாற்பத்தெட்டு முற்றே. 48

காலம்:

இல்லை.

குறிப்பு :

இதில், கெற்பவாயுவுக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1250 சுவடி எண்: 629

## நயனவிதி வாகடம்

ஏடுகள் : 82, (42-125) ஏட்டின் நிலைமை : சிறிது பழுதுபட்டது. பக்கத்திற்கு : 5-6 வரிகள். கி. எண்ணிக்கை ' 1500. அளவு 26X2½செ மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது'

தொடக்கம் :

கண்ணது நோக வேண்டும்
காரண மேதோ வென்னில்
நண்ணி ... .....................
....... மிகப் பருக்கை யாலுந்
திண்ணிய மயிரி லங்கும்
பிசைந்... ............
விண்ணிடை வேர்வை யாலும்
விளைந்திடும் நேரத்

முடிவு :

ஆமணக்க முத்துங் கல்லுப்பும் பிரண்டையும்
துவைத்த காடியில் பிசைந்து குடிக்க, விடும்

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், பில்லக்கண்ணுக்கு, ரத்தினாதியுண்டை, நயனவில்வாதி எண்ணெய், கண்ணுக்கு சுநேத்திரியுண்டை, தாம்புராதியுண்டை, நதம்புராதியுண்டை, கண்ணுக்குப் பொடி, கண்ணுக்குச் சீனப்பொடி, கிளிக்கண்ணுக்கு, புழுக்கடிக்கு, மற்றும் பல வைத்தியங்கள் உள்ளன.

oooooooooooo

வரிசை எண்: 1251 சுவடிஎண்: 630 (a)

# நயன சாத்திரம் அடுக்குநிலை

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: சற்றே பழுது. பக்கத்திற்கு 8–10 வரிகள். கி. எண்ணிக்கை: 75. அளவு: 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

அடுக்கு நிலை

சொல்லிருந்த இடமெங்கே முப்பா ளெங்கே
துவார பாலகரெங்கே முகப்பா ளெங்கே
நல்லசங்க நதியெங்கே வைகுண்ட மெங்கே
நாராயணனு மாலிலைமேல் துயின்ற தெங்கே

**முடிவு:**

ஒவ்வெழுத்து நின்றயிடம் தெளிந்து கண்டோர்
உடலுயிரென் றேகுருத் துரைக்க மாட்டார்
சிவ்வெழுத்து நின்றயிடம் தெளிந்து கண்டோர்
திருவாக்கால்ச் சீயென்ற சொல்வ ராதே

அடுக்குநிலை முற்றும்
குருவே துணை

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

உடலில் மூலாதாரம் முதலான நிலைகளை அடுக்கிக் கூறுவது தத்துவ உருவமாக உள்ளது.

நூலின் தொடக்கத்தில், நயனசாஸ்திரம். அடுக்குநிலை, கவுளிசாஸ்திரம், கூகை காதல் என்று எழுதப்பட்டுள்ளது. இது மை பூசப்படாத சுவடி

இது. எமது இலக்கியச்சுவடிகளின் விளக்கம் ஏழாம்தொகுப்பு சுவடிஎண் 1285 /.D 1710 ல் உள்ளது போன்றது.

வரிசை எண் ; 1252 சுவடி எண் : 630(b)

# மாதுரிச் சுருக்கம்

ஏடுகள் : 8 (4-11) ஏட்டின் நிலைமை ; சற்றே பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு : 23X3 செ. மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

அம்மானுக் கோர்மாவாய் அதுமூன்று மூன்ருகி
அம்மானுக் கேதலையா அறிந்ததுவே - அம்மானும்
வந்தெனக்கு மாசுருக்க மாதிருவைக் கண்டோதக்
கந்தனுக்கு முன்னுதித்தோன் காப்பு.

**முடிவு:**

அமரிஆரு வரையே அப்பால் யெழிலமந்த
கருவுக்குத் துருவமானுய் நீயே – கமரி
ஒருமா னனையெரொம மூலங்கரு வெளியில்மா
தரிவாஞ் சுருக்கமுற் றே 27

தேவிசகாயம்
சிவகாம்பாள் துணை
குருவே துணை
வேலன் துணை
கெணபதி முன்னிற்கவும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இது வெண்பாவில் அமைந்துள்ளது தத்துவக் கருத்துக்களைக் கூறுவது. நூலின் தொடக்கத்தில் நயனசாஸ்திரம், அடுக்குநிலை, கெவுளி சாஸ்திரம், கூகை காதல் என்று எழுதப்பட்டுளது, இது மை பூசப் படாத சுவடி.

இது எமது இலக்கியக் காட்டலாக்கு வால்யூம் 7-ல் சுவடி எண் 1290/D1911ல் உள்ளது போன்றது

---

வரிசை எண் : 1253 சுவடி எண் : 630 (c)

# தத்துவக் கட்டளை

ஏடுகள் : 5 (12–16) ஏட்டின் நிலைமை : சற்றே பழுது. பக்கத்திற்கு 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 150. அளவு : 23X3 செ. மீட்டர். எழுத்து: தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பராபரமாகிய பரமேசுரன் றராதலம் படைக்கத் தானினைந்தருளி பராபரத்திற் பரந்தோன்றி, பரத்திற்சிவன் தோன்றி, சிவத்தில் சத்தி தோன்றி, சத்தியில் நாதந்தோன்றி. நாதத்தில் விந்துதோன்றி, விந்துவில் சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில் மயேசுரன், தோன்றி, மயேசுரத்தில் ருத்திரன்தோன்றி, ருத்திரத்தில் விஷ்ணுதோன்றி, விஷ்ணுவில் பிரம்மா தோன்றி

**முடிவு :**

மேதை, அத்தி, குரும்பி, பீளை, சுக்குலம், நெய்யுப்பிலமாம், இதற்கு சாட்சி பரமஞானம் விளக்கத்தில தெளியாமை ஞடொரு முண்ணு மன்ன மொரு கூரும், மலமாகுமுதிர மொன்றில் களியாம் னின்ற மலமிரண்டே தென்னிற்காயமுடன் மனமென்று களறும். வேதம் பனியாம்ன மேல்னிந்த தொல்பொமாக்கர பளய மலத்தினும்ங் கடையாயப்பாக்க வொண்ணு விளியானுன். காணவே காகமா நாய்கள் வெம்பருந்து லந்தருந்த வியுங் காணே. 1

குருவேதுணை
சிவகாம்பாள் துணை
மீனாட்சிதுணை
தேவிசகாயம்

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இது. எமது இலக்கிய காட்டலாக்கு வால்யூம் 7ல் சுவடிஎண் 1233/ D 1868 ல் உள்ளது போன்றது. இதில் தலைப்பு எழுதப்படவில்லை. மை பூசப்படாத சுவடி

இது உடற்கூற்று வண்ணம் போல் காணப்படுகிறது.

---

வரிசை எண் : 1254 சுவடி எண் : 631

## நாகக் கட்டு

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 6-10 வரிகள். கி. எண்ணிக்கை : 50. அளவு: 12X3 செ. மீ. எழுத்து; தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பிரளாம லகுவாகச் சொல்லக் கேளு
 பேரான வெண்காரம் பலந்தா னென்று
மருளாம லண்டதொரு பலந்தா னென்று
 மட்டுரெண்டு சதுரகள்ளி பாலா லாட்டி

**முடிவு:**

வேதையிலே மூன்ருகந் தங்கம் ரெண்டு
 விளம்பியே யிரும்பிடைக்கு கூடத் தாக்கு
மாதையிலே வீரமிகு லிங்கம் போடு
 மைந்தனே களங்காகு வேதை கேளே 227

## அரிதார பற்பம்

அரிதாரக் கட்டி விரகனெடை 4 ....................
..............ஆரவிட்டு எடுக்கவும்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் 223-ம் செய்யுள் முதல் 227-ம் செய்யுள் வரை உள்ளன. இதன் பின்னர் கிரந்தத்தில் எழுதப்பட்ட செய்யுள் ஒன்று உளது. நாகத்தினைக் கட்டும் முறை இதில் கூறப்பட்டுள்ளது.

oooooooooooo oooooooooooo

வரிசை எண் : 1255 சுவடி எண்

# பிரம்மமுனி பாடல் 50

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி எண்ணிக்கை : 150. அளவு: 24 X 3 செ மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை : முற்றும்.

**தொடக்கம்:**

தொட்டதொரு கண்ணேட்டஞ் சுழிமுனையைப் பத்திநிற்க
யெட்டுரெண்டங் காரத் தியல்வரிய,
பட்டதொரு சித்தியுடன் தீட்சையினல் சிந்தையுறும்
மண்டலத்தில் வாசிவன்ன மயேசனடி
குணடலி தீதாம் பரவுங்கோல் 1

முடிவு :

பரப்பிரம குலம் பாசித் தவிந்தாலே சாரம்
பிரமமுனி தானென்றே வார்க்குரு
நந்தியாசான் முன் கூப்பிட்டுக் கிஞானமுறவருள
வாதசித்தன் பது ........... .... ...... 51

பிரமமுனி பாடல் முற்றும்.

கடுங்காரச் செநீர்வகை

அண்டம் வெண்கரு, ஒரு பீங்கானில் விட்டு எருநலம்பால் ஒரு சேரை வாரு மாங்காய்ப்பால், திருகுகள்ளி, சதுரக்கள்ளி, கொடிக் கள்ளி, படற்கள்ளி, செவிக்கள்ளி, வெள்ளெருக்கு வகைக்கு சேரை 15

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், முருங்க விதைத்தயிலம், கருங்காரச்செயநீர் வகை முதலியன உள்ளன. சில தலைப்புக்கள் அறியக்கூடவில்லை.

❖❖❖❖❖❖❖❖

வரிசை எண் : 1256 சுவடி எண் : 633

## பிரம்மமுனி பாடல் - 50

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 5 வரிகள். கி எண்ணிக்கை : 75. அளவு: 25 X 2½ செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

தொட்டதொரு கண்ணேட்டஞ் சுழிமூனையைப் பத்தி நிற்க
யெட்டுரெண் டோங்காரத் தியல்வரிய பட்டதொரு

முடிவு;

மாத்தடா குன்றியுடன் மால்தேவி கெந்தகந்தான்
சாற்றுவாய் தாரமல்லால் சரியாய்—சேர்த்து
பலம்பத்து சோதார மொன்றுபண்பான நாவியொன்று
பார்வழலைச் சுண்ணமொன்று நேர். 28

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில் 28 பாடல்களே உள்ளன. இது முன்பிரதி போன்றது.

வரிசை எண் : 1257 சுவடி எண் : 634

# பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 384

ஏடுகள் : 80. ஏட்டின் நிலைமை : சிறிதுபழுதுபட்டது. பக்கத்திற்கு 8-10 வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 25X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம் :

சீரரு ளான சோதி
சின்மய மான சோதி
ஆரணி கொன்றை சூடி
ஆரணி யானே போற்றி
வாரணி ரிசிகள் பாதம்
வணங்கியே வைத்திய நூலை
காரண மாகப் பாட
கடவுளர் காப்புத் தானே

## முடிவு :

ஆருன ஞானமொடு வாசி யோகம்
அடங்கினின்ற பூரணமும் அறியச் சொன்னேன்
தேருத சாத்திரமும் தேரச் சொன்னேன்
செப்பினேன் கருக்கிடைசூத் திரந்தான் முற்றே. 384
பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 384

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இது, எமது சுவடி எண் 36 (a) / D 61, 162 (a)/D 257, 317 (j) / D 588 ஆகியவை போன்றது.

இதில் முப்புகுரு, மேகராசாங்கலேகியம், கர்ப்பநோய்க்கு எண்ணெ, காளகண்ட சூரணக்குடோரி, பரங்கிப்பட்டை, பதங்கம், வில்வாதி லேகியம், எழுவகைப்பீனிசத்துக்கும் எண்ணெய், ஆக்கிருணம், ஆருத புண்ணுக்கு கொம்மட்டிக்காய் பதங்கம், ஆடாதோடை லேகியம், பவள பற்பம், அரிதாரபற்பம், கர்ப்பநோய்க்கு மருந்து முதலியன உள்ளன.

இதன் முதலில் வைத்தியம் எழுதிய ஏடுகள் 3 உள்ளன.

வரிசை எண் : 1258 சுவடி எண் : 635

# புண்ணுக்கீசர் பெருநூல்-800

ஏடுகள்:40. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது. பக்கத்திற்கு. 6–8வரிகள் கி. எண்ணிக்கை: 1200. அளவு: $33\frac{1}{2} \times 3$ செ. மீட்டர், எழுத்து: தமிழ். ஆசிரியர்: புண்ணுக்கீசர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்:

வேகமா நெறிசேரும் வினைகளும் ...........
........................யானை முயற்றினைப் போற்றுவாம்

### நூல்

நந்தியடி போற்றுகின்ற நாதர்புண் ணுக்கீசரென்
சிந்தைமகிழ் தேதி யன்பு செய்யவே- முந்தயெண்
ணூராதி தொடுத்தந்த வரையாய்ந்த மெய்ஞானத்
தருளையோத மத்ததந்திமுக னுன்னு.

## முடிவு :

கூறவே நல்லபற்ப மாகுமப்பா
கூறினது செத்துரிக்க வயனக்கேளு. 204
வயனமுள்ள பற்பத்தை சேந்துரிக்க

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில், துருசுக்குரு, வேம்புதுத்தி, திரு நீலகண்ட செந்தூரம், பாசானக்கட்டு, தொட்டிவைப்பு முதலியன உள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

வரிசை எண் : 1259 சுவடி எண் : 636

# புலத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 9. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு:5–6 வரிகள் கி, எண்ணிக்கை : 150. அளவு : $21 \times 2$ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : புலத்தியர். முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

நாடியதோ ரகண்டபரி பூரணமாய் நின்ற
நாதமுற்ற கெணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனுகு மென்னைப் பெற்ற
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்

முடிவு:

போடென்ற வெள்ளிய பற்பந் தன்னை
புகலாதே கசடருக்குக் கொஞ்ச மாகும்
ஞமென்ற ஆணவத்தா லிந்த னூலை
நாட்டிலுள்ளோர்க் கீயாதே நசித்துப்...........
....................................... ....... ..... 16

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது சுவடி எண் 311 (h) / D 569 அகத்தியர்வைத்தியம் ஐம்பது போன்றது. மேலும் இது சுவடி எண் 121 (h) / D 191 போன்றது.

வரிசை எண் : 1260 சுவடி எண் : 637

# புலிப்பாணி பலதிரட்டு - 100

ஏடுகள் : 25. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 500. அளவு : 25X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர்: புலிப்பாணி முனிவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

வேதாந்த நாயகியே ......... .........
வீரமா காளியம்மாள் குத்திர
... ... ... ... ... ... ள்ப்பொருளே அகோ
நாரணியே காரணியே தேவி சக்தி

முடிவு :

தாமேநீ தந்தைதாய் குருக்கள் ருசர்
தயவான பெண்ணொடு சிக்கள் யேனே
நாமேநீ யிவர்களுக்கு குலையிடுக்கம் செய்தோர்
நாசமாம் நிற்குணத்தில் அழுந்து வாரே 101.
... ... ... ...
செளிந்திருக்கும் போகருட கடாட்சந் தன்னை
சிறந்திருக்கும் புலிப்பாணி திரட்டு முற்றே 102

குருவே துணை.

காலம் :

இல்லை.

குறிப்பு:

இது, எமது சுவடி எண், 196 (a) /D. 313 போன்றது.

ooooooooooooooooooooo

வரிசை எண் : 1261 சுவடி எண் 638

# பூபதி வைத்தியம்

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை ; 80. அளவு 10X3½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் ; பூபதி, முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

பேசாமற் சொல்லுகிறேன் பூபதிதா னென்று
பிணந்திரும்பிப் பேசுமடா மருந்தைக் கேளு
வாசானு சூதலிங்கம் லோக வங்கமப்பா
கஞ்சலா சத்துவரியின் றேவி

முடிவு:

புலிபோலே பாயுமடா நோயைக் கண்டால்
புகலாதே செந்தூரம் போகுதூர மங்கலி
காலநோய்க் கெல்லா மாரம் பாணங்
காட்டிரே னிதுபோலே வெகுபோக் குண்டே. 9

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் சிறந்த மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

ooooooooooooo

வரிசை எண் : 1262 சுவடி எண் : 639

# மச்சமுனி சரக்கு வைப்பு—800

ஏடுகள்: 85. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 6–9 வரிகள் கி. எண்ணிக்கை : 2000. அளவு : 29½X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : மச்சமுனி. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதி பராபர தய்யர் மலரடி
நீதியில் வேத நிர்மய மானது

சோதியில் நாதந் துலங்குஞ் சுடரொளி
சாதியில் நந்தி தன்பதங் காப்பே.

முடிவு :

துலங்கும் பெண்ணூறுஞ் சுடரொளி கண்டவன்
களங்கம் கண்டு கற்பூர தீபம்போல்
விளங்கிய யோகம் விரும்பிய மானது
இலங்கிய வாசி யேகாந்த முத்துமே. 201

குரு முன்னிற்க
தேவிசகாயம்
ராமச்சத்திராய பரம குருவே நம:
ஸ்ரீ சாரதாம்பாய நம
அகிலாண்டகோடி பிரமாண்ட நாகுல வாரு
மச்சமுனி எண்ணூறு திருமந்திரம் முற்றும்
குருப்யோ நம;
அகிலாண்டகோடி பிரம்மாண்டாய நம;
ஸ்ரீ ராம ஜெயம்.

காலம்

இல்லை.

குறிப்பு :

இதில், „ராமச்சந்திராய ... ... ... நம;'' என்பது. கிறந்த எழுத்துக்களிலும், „ஸ்ரீ சாரதாம்பய ... ... ... ஸ்ரீ ராமஜெயம்'' வரை தெலுங்கு எழுத்துக்களிலும், எழுதப்பட்டுள்ளன.

இதில், சிவதீட்சை, முதல் தீட்சை முதல் மூன்றுந் தீட்சை வரை, பதிபசுபாசமறிதல், அஞ்செழுத்து மகிமை, ரேசக பூரக கும்பகம் அகத்தியர் தெரிசனம், வாலை பூசை, சிதம்பரபூசை, வயிரவ பூசை முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 325/D 646 போன்றது. அதைவிட இது சுத்தப்பிரதிபோல் காணப்படுகிறது.

oooooooooooooooooooooooo

வரிசை எண்: 1263 சுவடி எண்: 640

# மூலிகை சுக்கிலம்

ஏடுகள்: 22 (58–79) ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 6–7 வரிகள். கி. எண்ணிக்கை. 350. அளவு : 22X2½ செ. மீட்டர், எழுத்து: தமிழ், ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்:

சீதேவியார் செங்கழுநீர் வேர்
நிலஊமத்தம் வெள்ளையெருக்கலை
வெள்ளை விஷ்ட்டு கிரந்தி நல்ல
எருக்கலை வெள்ளைக் குண்டுமணிவேர்
பொடுதலை கையாந்தகரை சென்னையுருவி
ஆக வசீகர மூலிகை-8.

### முடிவு :

ஓம் நமச்சியவாயமே நமா நமா நமா
நமச்சிவாயமே நம சிறுபிள்ளையைப்
புணரவேர் தோன்றிக் கிழங்கும் விஷ்ட்டுனு
கிராந்தியும் சிவந்தி முட்டையும் இது மூன்றுங்
கூட்டி மத்திச்சு யோனியில் தடவிப் புணரவும்.

### காலம்:

இல்லை

### குறிப்பு :

இதில், மூலிகை பிடுங்க, வெத்திலை ஆகிய தலைப்புக்கள் மட்டும் உள்ளன. பலவித சிறந்த, வசீகர மூலிகைகள் இதில் பேசப்படுகின்றன. பலவகை மருந்துகளும் உள்ளன.

ooooooooooooo

வரிசை எண் : 1264 சுவடி எண் : 641

## மூலிகை வகை

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு 5–9 வரிகள். கி. எண்ணிக்கை : 400. அளவு : 17X2½ செ. மீட்டர் எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

### தொடக்கம் :

... ... ... கன்நீற் இராசவசீகரம் நீல ஊமத்து வசீகரம்
... ... ... கு லோக வசீகரம், வெள்ளைப்பூ விஷ்ணுகிரந்தி
செனவசீகரம் ... ... ... சம்பை சருவ வசியம்
வெள்ளைக் குன்றுமணி மிகவசீகரம்

### முடிவு:

கண்டங் கண்டமாக நறுக்கி பானையிலிட்டு அடைத்து தயில மெறக்கி இந்த தயிலத்துக்கு தூபதீபங் காட்டி புரவற்றி புறவற்றிசுவாகா

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில் மூலிகை வகை, மோகனம், மூலிகை விபரம்' பேதனம் ஆகியவைகளும், கடைசி ஏட்டில் மந்திரமும் உள்ளன.

வரிசை எண் : 1265 சுவடி எண் : 642

## மூலிகை வண்ணம்

ஏடுகள்: 7 ஏட்டின் நிலைமை: பழுதுபட்டது பக்கத்திற்கு: 6-7. வரிகள். கி: எண்ணிக்கை: 100 அளவு 18X3 செ. மீட்டர், எழுத்து: தமிழ், ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

சம்புடனே வேர் விறையை யுண்ம்பவர்க் கிருணிமூலம்
சென்ம்புடனே தீறுமென்று குப்பமுனி தாமுரைத்தார்
சித்திர பிலத்த மூல மெத்தாவலா யுணர்ந்து
சத்தமாயிலுங் கிஷாயம் வைத்தாகிலுங் குடிக்கில்

**முடிவு :**

மாக்கொழுந்துஞல் நசியம் மூக்கதனிலே விடவே
த்தாக்குடனே கூடுவாள் போக்கிவிடுமே தலையில்
......................மூலிகைப் பிறையோகமே 1.

கணபதி துணையாக வேணும்
வேலுண்டு வினையில்லை
சிவமயம்
குருமுன்னிற்கவும்.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில், மூலிகைகளை பயன்படுத்தும் முறை கூறப்பட்டுள்ளது.

வரிசை எண். 1266 சுவடி எண் : 643

# ரோம ரிஷி-500

ஏடுகள் : 95. ஏட்டின் நிலைமை ; சிறிது பழுது. பக்கத்திற்கு ; 6-8 வரிகள். கி. எண்ணிக்கை ; 3000 அளவு : 33X3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

மூலமுத லாதார வடிவாய் நின்ற
முற்தியெனுங் கிணேசனுட பாதங் காப்புச்
சாலமெல்லாங் கண்டறிந்துநின்ற தாயின் பாதஞ்
சனகாதி மூலருட பாதம் போற்றி

**முடிவு:**

வைத்தப்பா மோகினிமந் திரத்தைக் கேளு
வலுவாக்கு வாணிசருவ மோகினி வாவர
வருக வருக வென்று
மெய்க்கவே சொல்லிவைத்தேன் லெட்சம்போடு
வேதாந்த மோகினியை வசமாய்ப் போவாள் 443.
..................................................

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இதில், முப்புவகை, இசனுப்பு வகை, நாதம், லிங்கக்கட்டு, லிங்க மெழுகு, துருசுச்சுன்னம், ரசமணி, கருவூமத்தின் விபரம், கோளிரசம் வெடியுப்புச் செயநீர், ஆறுவகை செயநீர். சிங்கி வைப்பு முதலியன உள்ளன.

வரிசை எண்: 1267 சுவடி எண்: 644

# ரோமரிஷி சுருக்கம் - 16

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7-8 வரிகள் கி. எண்ணிக்கை: 80 அளவு: 24×3 செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: ரோமரிஷி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

தந்திமுகத் தோன் சதங்கைத் தாளே காப்பு
சகலபொரு ளாய்நிறைந்த தாயார் காப்பு
முந்தியுரைத் தேன்முதல்நூல் லன்ப துக்குள்
மூலமுத லணமுத்திரி தோணு வாசி வாதம்.

**முடிவு :**

வேகாதோ இனயினமுஞ் சேந்தா லய்யா
வெண்கிளிஞ்சி கெற்பணிநீர் விட்டோர்க் கெல்லாம்
போகாதோ குருமுடிக்கும் பாக மெல்லாம்
பூட்டறிந்து பார்த்தவர்க்கும் பொருள்தானே முற்றே. 16.

குருமயம்
ரோமரிஷி சுருக்கம் முகிர்ந்தது முற்றும்.
குருவே துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் சிறந்த மருத்துவ முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1268 சுவடி எண் : 645

## ரோமரிஷி சுருக்கம் – 16.

ஏடுகள் : 6. எட்டின் நிலைமை ; பழுதுபட்ட நிலை : பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை: 80. அளவு: 24X3செ.மீ. ஆசிரியர் : ரோமரிஷி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

தந்திமுகத் தோன்சதங்கைத் தாளே காப்பு
சகலபொரு ளாய்நிறை தாயார் காப்பு
முந்தியுரைத் தோன் முதல்னூ லன்ப துக்குள்
மூலமுத லானமுத்திரிகோண வாசி வாதம்.

**முடிவு:**

வேகாதோ இனயினமுஞ் சேந்தா லய்யா
வெண்கிளிஞ்சி கெர்ப்பநீர் விட்டோர்க் கெல்லாம்

போகாதோ குருமுடிக்கும் பாக மெல்லாம்
பூட்டறிந்து பாற்றவர்க்குப் பொருள்தான் முற்றே. 16.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது, முன்பிரதி போன்றது. ஓரங்கள் எலிகடித்துள்ளன.

oooooooooooo

வரிசை எண்: 1269 சுவடி எண் 646.

## ரோமரிஷி சூத்திரம் – 100.

ஏடுகள் : 29. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 6–9 வரிகள் கி. எண்ணிக்கை : 600. அளவு : 22×3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : ரோமரிஷி முழுமை; முற்றுமுளது

**தொடக்கம் :**

மூல வட்டங் குருவான பாதங் காப்பு
முத்திக்கி வித்தான முதலே காப்பு
மேல வட்ட மானபரப் பிரம்மங் காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு

**முடிவு :**

உப்பல்லோ பிண்டத்தில் சேந்த போது
உடலுயிரு மென்றாகி தண்ணீ ராச்சு
அப்பல்லோ முப்பூவுங் காணி யாணி
அதைவிட்டால்க் கூடாது வழலை மார்க்கம்
செப்பல்லோ பந்துக்கு மூட லாச்சு
தீட்சணமா யிந்தனூல் தெளிவோ ரெம்ப
முப்பொருளு மொன்றாகி நின்ற சோதி
மூலவட்டக் குருவாலே மொழிதான் முற்றே.

ரோமரிஷி சூத்திரம் நூறு முகிந்தது.
தேவி சகாயம்
குருவே துணை

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது எமது சுவடிஎண் 272/D 468 போன்றது இதில், வழலை, சுத்த கங்கை சிங்கி வித்தை, கிளிஞ்சி நீர், தங்கக்குரு, முப்புமார்க்கம், வெள்ளி பற்பம், அயச்செந்தூரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1270 சுவடி எண் : 647

## ரோமரிஷி வாத சூத்திரம்-500

ஏடுகள் : 10 ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு : 8–10 வரிகள் கி. எண்ணிக்கை : 300. அளவு : 31 × 3½ செ. மீட்டர் எழுத்து தமிழ், ஆசிரியர் : ரோமரிஷி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

வாரணமா முகத்தோனும் வல்லபையுங் காப்பு
வாக்கிலிருந் தோதுகின்ற வாணி காப்பு
பூரணமாய் நின்றகுரு ஞதன் காப்பு
புகழ்பெரிய சித்தருட பாதங் காப்பு

**முடிவு:**

காரய்யா அடிமுடிக்கி மூல விந்து
கண்டீரோ கடல்நீரின் சுருவைத்தானும்
ஆரப்பா காண்பதும் யோகி காண்பா
னப்பனே குருநூலன் பதுதான் முற்றே. 51

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இது, எமது சுவடிஎண் 353 (e) / D 704 ரோமரிஷி சூத்திரம் 50 ன் வேறுயது. இதில் நிருவிகற்ப சமாதி முதலான பலவகை செய்திகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் 1271 சுவடி எண்: 648

## மேக வாகடம்

ஏடுகள்: 20. ஏட்டின் நிலைமை: சிறிதுபழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை. 400. அளவு : 24 × 3 செ, மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

மண்டலந் தன்னி லுள்ள
மனுஷாய்ப் பெண்ணு ளோர்க்குங்
கொண்டதோர் பிரமே கந்தான்
கொள்ளுமுன் னெடுக்கு நாய்கள்
கண்டிடு முடலங் கைகால்

களன்றுளன் நெறித்துக் காந்தி
யுண்டநீர் சுவரிக் காட்டா
துடைத்துநீர் பாயு மன்றே. 1

முடிவு

வேறு

சகல களிச்சலுக்கு வெள்ளியுண்டை வெள்ளி-50
சூதம்-10 வெள்ளியுருக்கித் தெளியி முகத்திலிரத்தை
........... ...டு ஒன்றித்தால்த் தகடாய்த் தட்டித
மோர் விட்டரை..... ...........

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், 3. 4 வது ஏடுகள் வெற்றேடாயுள்ளன இதிலசலக்கழிச்சலுக்கு உண்டை, முதலியன உள்ளன.

வரிசை எண் : 1272 சுவடி எண் : 649.

## லிங்கக்கட்டு முதலியன

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 9–11 வரிகள் கி. எண்ணிக்கை: 100 அளவு: 21½X3½ செ. மீட்டர். எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்;

### லிங்கக்கட்டு

லிங்கக்கட்டு நாலுசமபாகம் பொடிசெய்து அண்டத்தையுடைத்து
அரிதாரம் மஞ்சள் கருவைத் தள்ளி வெள்ளை விட்டு
கெந்தகம் யிந்தப் பொடியைப் போட்டு மேலு சில்லு போட்டு
மனோசிலை சீலை மண் யேழு செய்து சட்டியில் மணல்கீழும்
ரசம் மேலும் யேழரை நாழிகை யெரிக்கவும்

முடிவு:

கொல்லு கொல்லு ராமனுத சாமியானை கொல்லு ஒன்றனையு மென்னையும் படைத்த பரமேசுவரனுனை அய்யடித்தாளானை எதிரி மகிளியை யடை அடை தவசியானை அடை அடை சிவாயநம.

ஓங்காரி ஓம் பிடாரி ஓம் நமசிவய

என்று உருச்செய்யவும் வெள்ளை அரளிவேர் குளிசமாடி வாயிலிட்டு தியானம் பண்ணவும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், கருவங்கக்கூட்டுச்செந்தூரம், நாகக்கட்டு, சதுரங்கங் குதிரடிக்கி பாட்டு, சதுரங்கம் குதிரையடி, மகிளி அடைக்க மந்திரம் முதலியன உள்ளன. குதிரையடி சக்கரம் உள்ளது.

---

வரிசை எண்: 1273 சுவடி எண்: 650

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 128 ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 6-9 வரிகள் கி. எண்ணிக்கை: 2500. அளவு: 22X3 செ. மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

**தீராச் சுரத்துக்கு**
**குளிர்சுரத்துக்கு**

ஒன்றே கொன்றே யுத்தம் தாளியின்
    வெரு ரோகணியுவேர்ப்பாரு
நன்றே முத்தக்காசு சுக்கு
    நறிய கோட்டம் சிறுமூல
மின்றே யோரொன் றிருகளஞ்சி
    யிடுக் காய்த்தே ரெண்டெட்டாக்கி
சென்றே திப்பிலி மேல்த்தூவி
    சென்றூர் சுரத்தார் தினச்சுதப்பால் 27

**முடிவு:**

**பில்வாதித் தயிலம்**

யிடித்த பொடியைத் தேங்காயில்
    யிட்டே செலுத்திக் கண்மூடி
மடித்த கோளிப் பிடமிட்டு

மதனன் வில்கட்டியா லரைத்து
அடுத்த வியாதி பிலமறிந்து
அருந்தப் போகும் வியாதிகேள்
படுத்தகுன்மம் பாண்டு பெருவயறு சோகை
பத்திய மிச்சா பத்தியமே.

**காலம்**

இல்லை.

**குறிப்பு:**

இதில் செய்யுட்கள் 27 முதல் தொடங்குகின்றன. 150 வரை செய்யுட்கள் உள்ளன. பின்னர் பல தலைப்புகளில் மருத்துவம் பேசப்படுகின்றன. நல்ல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1274 சுவடி எண் : 651

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு ; 5-6 வரிகள். கி. எண்ணிக்கை : 100. அளவு : 12X2½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**கன்னாப்புத்துக்கு; நரம்புச் சிலந்திக்கு**

நன்னாரி வேரும் ரசமும் பச்சைப் புனுகு மரைத்து
மாட்டுக் கொம்புச் சிமிளில் வைத்துக் கொள்ளவும்
புத்துமேல் பூசி முத்துருக்கந்தனை அரைத்து
வில்லை பிடித்துக் கட்டவும். கன்னப்புத்து தீரும்.

**முடிவு:**

**வெள்ளெழுத்துக்கு**

————நந்தியாவட்டம் புளியும் பூத்தானிதைந்து
மாலையிற் றேன்விட்டரைத்தே விளிக்கிடு மாசு வெள்ளை
போலவும் வெள்ளெழுத்தெல்லா மகன்றிடுமே.
போக்கிது வே ————

**காலம்:**

இல்லை.

## குறிப்பு:

இதில், மேகத்துக்கு, நரம்புச் சிலந்திக்குக் கட்டவும். டாக்கர் மருந்து ரசபற்பம், வெட்டுபட்ட காயத்துக்கும், புரைக்கு மெண்ணெய், தாம்பிர பற்பம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1275 சுவடி எண் : 652

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது பக்கத்திற்கு : 7-10 வரிகள். கி. எண்ணிக்கை : 50. அளவு : $12\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

## தொடக்கம்:

### பித்தத்துக்குத் தயிலம்

| | | | |
|---|---|---|---|
| கரிப்பான் சத்து படி | $\frac{1}{2}$ | சீந்திக்கொடி சாறு படி | $\frac{1}{2}$ |
| ஞெச்சிச்சாறு படி | $\frac{1}{2}$ | முசுமுசுக்கைச் சாறு படி | $\frac{1}{2}$ |
| கருவேப்பிலை சாறு படி | $\frac{1}{2}$ | பிலாக்காய்ச் சந்தனம் பலம் | 1 |
| எலுமிச்சம்பழச்சாறு படி | $\frac{1}{2}$ | தேவதாரிக் கட்டை பலம் | 1 |
| பொடுதலைச்சாறு படி | $\frac{1}{2}$ | கிளியூர பட்டை பலம் | $\frac{1}{4}$ |
| பொனஞங்கணிச் சாறு படி | $\frac{1}{2}$ | பூலாங்கிழங்கு பலம் | $\frac{1}{4}$ |

## முடிவு:

மூன்றுதரம் ஓட்டிலே உவருப்பை பரப்பி அதின் மேலே உப்பை வைத்து புடமிடவும். துரிசுக்கு அந்த உப்பைக் கவசங் கட்டவும். சரக்குக் கெல்லாம் பூசிப் புடமிடவும். கட்டும்.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், பீத்தத்துக்குத் தயிலம், கலிக்கம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1276 சுவடி எண் 653

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 5-8 வரிகள். கி. எண்ணிக்கை : 350. அளவு : 28X3 செ.மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம்

## லோக திராவகம்

நீலத்துருசு பலம் 10 சீனகாரம் பலம் 10
யிணாங்கன் பலம் 10 நவச்சாரம் பலம் 10
சவுட்டுப்பு பலம் 10

இதுவெல்லாம் யிடித்து அஞ்சு பங்கு பண்ணி
ஒரு பங்கைக் கலயத்தில் போட்டு வாலச் சட்டி
வைத்து திராவகம் யிறக்கி நாலு பங்கு சரக்குக்கு

முடிவு :

அறிவின் செய்கை விதுடு நருவத்தவனைப்
பித்தென்றுஞ் சொல்வார்
வீணுதி வீணர் சிலர் அறிய மாட்டார்
சிறுபகலி பெனும்ங் குறளி சத்தத்தென்றும்
செகந்தனிலே பதினெண்பேத மறைந்திடாதே. 216

காலம் :

இல்லை.

குறிப்பு :

இது மை பூசப்படாத சுவடி.

இதில், லோக திராவகம், துருசுச் சுன்னம், மோடி வித்தை முதலியன உள்ளன. 42-ம் ஏடு முதல் 70-ம் ஏடுவரை உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை.

●●●●●●●●●●●●

வரிசை எண்: 1277 சுவடி எண் : 654

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 7, ஏட்டின் நிலைமை : சிறிது பழுது பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 100. அளவு 16X3½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் ; அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

தானென்ற துருசு அது குருவே யானல்
சாகாமல்ச் செத்திருந்த பசுமை வேணும்
மானென்ற சாரமது உருகும் போது
மயிர்போலே புகைந்தோடி மறுக வேணும்

முடிவு :

திட்டாந்த சீவனைக் கொண்டு அய்யன்
சொப்பரத்தில செலுத்திவிட்டான் காண்
கெட்டவதி சயமென்றே கிரிகைக்
குள்நின்று கிலேசப் படாதே.
தட்டாமல் தன்னொளிக் குள்ளே
தறையற்றலை னந்தமெய்து நின்றோமே.

காலம் :

இல்லை

குறிப்பு :

பக்கங்கள் இடமில்லாததால் ஏட்டின் வரிசை தெரியவில்லை. இதில் துருசுவகை, சாரசுத்தி முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1278 சுவடி எண் : 655

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8–9 வரிகள். கி எண்ணிக்கை : 500. அளவு : 21X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுற்றது.

தொடக்கம் :

வயத்திலே உருந்தகெண்ட ராமை வாய்வுத் திரச்சி முதலாகிய வியாதி........ மருந்து, யிந்துப்புபலம் 1. மூறை வருந்து பழைய வெல்லம் பலம 2.

முடிவு :

### பத்தியம்

கரப்பான் வஸ்துவும் வாயுவான பதார்த்தமும், அவபத்தியமும் ஒரு மண்டலம் நிறுத்தவும்.

### தலைமுழுக

வேப்பெண்ணை அஞ்சுமுழுக்கு, பின்பு பசுவின்நெய்யஞ்சு முழுக்கு முழுகவும். பின் விளக்கெண்ணை முழுக

காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில். மூளை மாறலுக்கு, அறுவகை மூலத்துக்கு மருந்து, மூல முளைக்குபுகை. நீரில் வெள்ளை விழுகிறதுக்கு, புருசன் பறுமுகம் பாராமல் மருந்து, மருந்தீடு, நாலாமுறைக்கு மூக்கில் ரத்தம் விழுகிறதுக்கு பவள பற்பம், தாம்புர சுத்தி, ரத்தபீனிசத்துக்கு தலைமுழுக நெய், மேகங்களுக்கு நெய் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1279 சுவடி எண் : 656

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 64. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1200. அளவு 22X3 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

## தொடக்கம் :

அஞ்சனு தேவி மந்திரம்

ஓம் ஆயி ஓம் அஞ்சனு தேவி வருக வருக
என் மகன் அனுமன் ஆதித்தன் கனியாய்
பாய்ந்து பிழைந்தாப்போலே நான்
நினைத்த காரியத்தைப் பாய்ந்து பிடித்து
வெளி வெளியாய் வருக சுவாகா

## முடிவு :

மிடுக்கையும் நித்திரை வருகையும்
மவசமாய் விழுகையுமாய்ப் புருவ
மத்தியத்திலே நடுச்சக்கர மிப்படிக்கு
மத்திய———வத்தை அஞ்சுக்கு வினவுடனே
விபரமறியவும்
இனிமே யாவத்தை யாவன் பு

## காலம் ;

இல்லை

## குறிப்பு :

இதில், அனுமான் மந்திரம், இளம்பிள்ளை வாதத்துக்கு, சாயாத வாதத்துக்கு, இருமலுக்கு, பித்த சேரானத்துக்கு, உடம்பு குத்திர வாதத் துக்கு, குதிரை வலிப்புக்கு, மாலைக்கண்ணுக்கு, புகைச்சலுக்கு, கண்ணில் துன்மாங்கிஷத்துக்கு, தொண்டை கட்டினதுக்கு படர் தாமரைக்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1280 சுவடி எண் : 657

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : சிறு பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு $24\frac{1}{2}$X3 செ.மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம்:

### திப்பிலாதிச் சூரணம்

திப்பிலி, மிளகு, ஆடாதொடை வேர்பட்டை பொடி, முசுமுசுக்கை வேர் பொடி, சீரகம் செந்தொட்டி வேர் பொடி, தூதுவளங்காய் பொடி யிவளவும் சமயெடையாகப் பொடி செய்து கொண்டு டி பொடிக்கு

## முடிவு :

பூவரசம்———பலம் 10 கிரதம் மூனுபங்குஞ் சேர்த்து
மணத்தக்காளியிலைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி
சூரியபுடத்தில் வைத்து காய்ந்தவுடனே பூப்புடத்தில்
தயிலம் வாங்கிறது டி தயிலம் கல்கண்டு அனுப்பானத்தில்
பணவிடை ரெண்டு வேளை சாப்பிட மேகம் யிருபத்தொன்றும்
-கேள்கும்

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இதில், தலைப்புக்கள் சரிவரத் தெரியவில்லை. தாளக செந்தூரம், பவளச் சுன்னம், பவளபற்பம், பாண்டு முதலான வீக்கங்களுக்கு பாலரசம் யேற்குவிதம், தயிலம், பேதி, வகுத்து வலி, மந்தங்கள், யிநாநி முதலியன உள்ளன.

இதில் கடைசியில் யிநாநி என்றுள்ளதால், இது யுனானி மருத்துவமாக இருக்கலாம்.

---

வரிசை எண் : 1281 சுவடி எண் ; 658

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது பக்கத்திற்கு ; 8-11 வரிகள். கி. எண்ணிக்கை : 100 (நூறு) அளவு : $20\frac{1}{2}$X3 செ.மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் ;**

## கண்ணுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| சாதிபத்திரி | வால்மிளகு | கடுக்காய் |
| பீதரோகணி | கிரும்பு | மஞ்சள் |
| துருசு | தாளிசபத்திரி | நன்னாரி வேர் |
| துத்தம் | சீரகம் | வெள்ளைக்காக்கணவேர் |

வெள்ளைச் சாரணை வேர் இவைகள் வகைக்கு

விராகனிடை 1

**முடிவு :**

இது மாத்திரை செம்பு கொண்டு நாலு வெரல் நீளம்
ரெண்டு உண்டாக்கி யிரு விரல்க் குளல் ஞசியில்
லெத்தி இந்தப் பொடியிட்டு ஊத எடந்திருக்கும்

வேறு

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில், கண்ணுக்கு மருந்து, கண் ரோகங்களுக்கு மருந்து, நேத்திர வியாதிக்கு மருந்து, எலி கடிக்கு மருந்து, முதலியன கூறப்பட்டுள்ளன. இது மை பூசப்படாத சுவடி.

---

வரிசை எண் : 1282 சுவடி எண் : 659

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 250. அளவு : 13X2 செ.மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

## துருசு சுன்னம் செய் மருந்து

ரசபற்பம்—1 சைனையறம் (?)—1 ரசகற்பூரம்—1
ஆலத்திக் கற்பூரம்—1 சீனிக்காரம்—1 நவச்சாரம்—1
சோசபீசம்—1 வெள்ளைப்பாசாணம் கூட வகைக்கு 4

**முடிவு :**

ஆறம் புடைமணி மார்பா
 அழகா வுந்தன் திருநாட்டில்
யீறம் புடைமறகள் லெல்லாம்
 யிலையன வுதிந்து நிப்பதென்ன
வாறம் சொல்லி வழக்குரைத்து
 மண்டுல யிருந்து ஓரம்சொல்
ஓறம் சொல்வான் கெளையதுபோல்
 உப்பு உதிந்தாப்போலே உதிந்துபோகச் சிவா

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில், மருந்துகளும் மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன ஓரம் எலிகடித்துள்ளது.

---

வரிசை எண் : 1283 சுவடி எண் ; 660

# வைத்தியம்

ஏடுகள் : 140. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 7–8 வரிகள். கி எண்ணிக்கை : 4500. அளவு : 32X3½ செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

## மூலசூரணம்-நீராழிவுக்கு

முன்னோ ருரைத்த மொளி ... ...
 மூலசூரணங் கூட்டும் வகை
மின்னே திரிபலை திறிகடுகு
 மேவுஞ் சீரகம் யிருவரையுந்
தன்னூர் மதிரஞ் சிறுதேக்கு
 த(ா)ரங் கோட்டச் செவியமுடன்
பண்ணூர் தார மிலவங்கம்
 பச்சிலை நாகப் பூவுடனே.

**முடிவு :**

தாகிடுந் தண்ணீர் தாம்பெரிய நாவரளும்
மோகிடுங் கண்ணில் மூள ... ... ... ருகும்
ஆகுங்க ளுளகு மஞ்ச ... ... ...

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதன் தொடக்கத்தில் 'வைத்தியம் வசன நடை' என்று எழுதப்பட்டுள்ளது. ஆனல் செய்யுட்களாக உள்ளன.

இதில், பல்லகம் இச்சாபத்தியம், இருமலுக்கு மருந்து, நீரளிவுக்கு குடகரிமாய்ப்புக்கு' பித்தத்துக்கு எண்ணெய், விஷத்துக்கு எண்ணெய்' கண்ணுக்குக் கறுத்த குளிகை, குண்டுக் காயத்துக்கு. மீன் தடுக்க மந்திரம், நீர்க்கறுப்பு, சவ்வடைப்பு, யோனிசூலை முதலியன உள்ளன.

106 வது ஏடு இல்லை.

---

வரிசை எண் : 1284 சுவடி எண் : 661. (a)

# இராமதேவர் சாத்திரம் - 500.

ஏடுகள் ; 109. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6-10 வரிகள். கி. எண்ணிக்கை : 2000. அளவு : 38X3½ செ. மீட்டர், எழுத்து : தமிழ். ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது

**தொடக்கம் :**

ஆதியந்த மேநிறைந்த சோதி பாதம்
மகண்டபரி பூரணத்தின் னறிவிற் கூடி
பாதியந்த முப்பொருளும் மூன்று மொன்ருய்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்

**முடிவு :**

செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
சேர்ந்துவெல்லா மீசனென்று தெளிந்து காணும்
மெய்யான குருபதத்தைப் பணிந்து போற்றி
வருந்தினேன் கறுக்கிடைசூத் திரந்தான் முற்றே. 523.

சிவகடாட்சம் உண்டாக வேணும்
மனேன்மணி பாதமே துணை உண்டாகவும்.
ராமதேவர் பாதமே துணையாயிருந்து ரட்சிக்க வேணும்.
சிவமயம்

**காலம் :**

விரோதிகிருது வருடம் மார்கழி மாதம் முதல்தேதி, சனிவாரம் இராமதேவர் அருளிச்செய்த 500. இவை எழுதியது. இந்த பொத்தகம் தோப்பூர் முருக்கேரி உள்கடை, கோத்திரம் பரத்துவாச மகாரிஷி கோத்திரம் ஷெ யூர் கரியப்ப வுடையான் குமாரன் எலப்ப ஒடையான் குமாரன்

ராமபத்திர ஒடையான் குமாரன், கோவிலூர் சாமியார் பூரணனந்த சாமியார் மரபில் வாசம் செய்யும் ஆருமுகம் பரமாத்துமாவின் கிருபையினால் சிவ ஆத்துமாவில் சஞ்சரிக்கும் ஆருமுகம் எழுதியது.

இதைப் பார்க்கும் ஞான சுரூபியான கனவான் எளியேன் யென்னை அங்கீகரிக்க. இச்சிறுவன் பிரார்த்திக்கின்றனன். *(இவ்வேடு. இராம தேவர் அட்டாங்கபட்சணியின் பின்னுள்ளது).*

**குறிப்பு :**

இது மை பூசப்படாத சுவடி. இது' எமது சுவடி எண் 365(b)D/ 727 போன்றது. இதில் அதைவிட பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படு-கின்றன.

✱✱✱✱

வரிசை என்: 1285 சுவடி எண்: 661(b)

# இராமதேவர் அட்டாங்க பட்சணி

ஏடுகள்: *12* ஏட்டின் நிலைமை: *மிகமிகப்பழுது* பக்கத்திற்கு: *6-8* வரிகள் கி. எண்ணிக்கை: 400. அளவு : $38 \times 3\frac{1}{2}$ செ. மீட்டர். எழுத்து: தமிழ் ஆசிரியர்: இராமதேவர். முழுமை, முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியிலே வாலைமனோன் மணித்தா கூவி
அளைத்திட்டு ஆதியந்தம் மறியச் சொன்னள்
சோதியிலே கருவுருவே உண்ணிப் பாரு
சொல்ல வொண்ண அதிசெயங்கள் தானே தோத்தும்

**முடிவு:**

யெட்டுரெண்டு மறிந்தவர்க்கும் மெய்தும் மெய்தும்
யில்லாட்டால் முன்னூல்தான் கிட்டா கிட்டாது
துஷ்ட்டருடன் ஒருநாளும் கூட வேண்டாம்

துடியாக ஒருவருடன் பேச வேண்டாம்
திட்டமுடன் இந்நூல்தான் அன்பத் தொன்றும்
யோகமாம் அண்ணே யிருந்து கொண்டு
அவிட்டால் யோகமதைத தினமும் பாரு
அருளான மனோன்மணிதன் காப்பு முத்தே. 51

ஸ்ரீராமதேவ சாமிகள் அருளிச் செய்த பட்சணி பாடல் 51
முடிந்தது முற்றும்.

**காலம்:**

விரோதிகிறது வருடம் தை மாதம் 27-ம் தேதி சுக்கிரவாரம், முடிந்தது. இவை புத்தகம் கோவிலூர் பரிபூரணாநந்தசாமியார் மரவில் யிருநின்ற ஆறுமுகம் எழுதியது.

அகத்தியமா முனியே சரணம்.
தட்சணாமூர்த்தி திருவடிகளே சரணம்
வாலை சுப்பிரமணியர் துணை.
விநாயகர் துணை யுண்டாகவும்
தேவி துணையுண்டாகவும்
வாலை மனோன்மணியின் கிறுபையுண்டாகவும்

**குறிப்பு:**

இது எமது சுவடி எண். 316(b) /D. 577 போன்றது பாடவேறு-பாடுகள் மிகுந்துள்ள இதில் 51 படால்கள் உள்ளன· அதில் 50 பாடல்-களே உள்ளன இது ஒரு இரசவாத நூல். சயநீர்வகை, அஞ்சன முறைகள், வசீகரணத்திலதம் முதலியன உள்ளன. இது, மை பூசப்-படாத சுவடி மேலும் இது, 328 (e) / 371 போன்றது. அதிலும் 51 பாடல்கள் உள்ளன.

***

வரிசை எண் : 1286 சுவடி எண் : 661(c)

# கருவூரார் பூசாவிதி

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு. 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 300. அளவு : 35X3½ செ.மீ. எழுத்து தமிழ். ஆசிரியர் : கருவூரார். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியென்ற வாலையவ ளிருந்த வீடு
ஆச்சரியம் மெத்தமெத்த (வதுதான்) பாரு

சோதியந்தம் நடுவீடு பீட மாக
சொகுசாக வீத்திருந்தான் துரைப்பெண் ணுத்தாள்

முடிவு :

ஒளிவுதனில் ஒளிவு தரும் முறுதி சொல்ல
உற்பனத்தி லுற்பனமாய் உறுதி தோணு
............ .... ...... ... ... ........
............ .. பெண் ணுதி முற்றே. 31

இவை கறுவூரர் பூசாவிதி 31 முடிந்து விட்டது.

காலம் :

இவை பொத்தகம் தோப்பூர் கரியனென்ற அம்மமியப்ப ஒடையான் குமாரன் யெல்லப்ப ஒடையான் குமாரன் ருமபத்திர ஒடையான் குமா-ரன் ஆறுமுகம் கோவிலூர் மடாலயத்தில் வாசம் செய்யும் பூரணானந்த சுவாமியார் மரபில் யிராநின்ற ஆறுமுகம் எழுதியது. வேணும்.

திருச்சிற்றம்பலம்

விரோதிகிருது வருடம் மாசி மாதம் 20-ம் தேதி சனி வாரம் மக நட்சத்திரம் பவரணி கூடிய தினத்தில் எழுதியது.

குறிப்பு :

இது மை பூசப்படாத சுவடி. இது எமது சுவடி எண் 226(f)/D 362 போன்றது. அது 'வாலை பூசாவிதி' என்ற தலைப்பில் உள்ளது. இதில் பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன.

இதன் பின்னர் 'வங்க சுத்தி, துரிசு பற்பம்' என்ற ஒரு ஏடு உள்ளது. இதில் 23-ம் பாடல் முதல் 27-ம் பாடல் வரை உள்ளன சுவடியின் முன்னும் பின்னும் வெற்றேடுகள் உள்ளன.

---

வரிசை எண் : 1287 சுவடி எண் : 662

# தேரையர் வைத்தியம் - 1000

ஏடுகள் : 55. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி எண்ணிக்கை : 1800. அளவு : $23 \times 3\frac{1}{2}$ செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தேரையர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

ஆ.......... புதல்வர் சரண்
டாதி லுள்ள பிணயக லுப்படி
வாதி யுத்தமர் சித்தர் பதம்பணிந்
தோதி வத்தரோ ராயிரத் தொன்றுமே

**முடிவு :**

(மிகவும் செல்லரித்துள்ளதால் எழுத்துக்கள் புரியுமாறில்லை)
———று பக்கமும் பாத்திடாய்
சுரம்பாதின மோடுமே . —538

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் 51-வது ஏடு இல்லை. இதன் ஏடுகள் மிகவும் மடித்துள்ளதால் கையாளுதற்கே. இயலாத நிலையில் உள்ளன.

வரிசை எண் : 1288

சுவடி எண்: 663

## தட்சணாமூர்த்தி கேசரி - 50

ஏடுகள்:10 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6-10 வரிகள். கி. எண்ணிக்கை : 300. அளவு : 27×3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீர்தரு ஞான தேவி
திருமகள் சோதி காப்பு
ஆறணி கொன்றை
அணிந்தநல் லானே காப்பு
பாரணில் வேத ஞானக்
கிறுகையும் பாட வேண்டி
கார்முகில் மேனி யாற
கணபதி காப்புத் தாமே.

**முடிவு :**

சந்தான மாவதெப்போ அறிவ தெப்போ
சண்டாள னிவன்வந்தா லென்ன செய்வாய்
யென்தானம் பொதிகைதனில் வந்தா யாஞல்
யேமனில்லை விளையில்லை யென்று விள்ளே. 50

**காலம் ;**

ருத்திரோத்காரி வருடம் மார்கழி மாதம் 21ம்தேதி சனிவாரம் எழுதி முடிந்தது. மார்கழி மாதம் 10ம தேதி பொதன் கிழமை ரோகணி உற்பத்தியாகுது.

**குறிப்பு :**

ஏடுகள் எல்லாவற்றிலும் தொடக்கத்தில் 'தட்சிணமூர்த்தி கேசரி அன்பது' என்றே எழுதப்பட்டுள்ளன. தத்துவரூபமாக எழுதப்பட்டுள்ளது.

---

வரிசை எண் : 1289 சுவடி எண் : 664 (a)

## போகர்சுவாமிகள் பூசாவிதி-40

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை பக்கத்திற்கு 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 400. அளவு : 25½X3½ செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : போகநாதர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பாரப்பா வாலைதனை தியானஞ் செய்ய
பாங்கான நவகோண மெட்டுஞ் சூழ
சேரப்பா யிருவளையம் வாசல் னலு
சிரப்பாக நீங்கார மிட்டு நன்ருய்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள ஜெயவீர வாகு தேவர்
ஆரப்பா அறைதனிலே கிழக்கைத் தொட்டு
அகார உகார மகார சவ்வும் போடே

**முடிவு :**

காணப்பா தத்துவத்தைப் பிரித்து நன்ருய்
கைமுறையாய்க் காலாங்கி யாசான் சொன்னூர்

ஆணப்பா ஆண்பிள்ளை யாரென் ருக்கா
லமுர்தமுண்டு நிலையில்நின்ருல் அவனே சித்தன்
வீணப்பா மத்ததெல்லாம் நாய்வாலைப் பத்தி
வெள்ளத்தைக் கடத்துவோ மென்றே வெற்றி
பூணப்பா யுந்தமுறை யாருங் காணுர்
போகர்முறை யுயர்ந்ததூத் திரமுடிவு முற்றே .

**காலம் :**

சுபகிருது வருஷம் பங்குனிமாதம் 15-ம் தேதி சனிக்கிழமையன்று யெழுதி முடிந்தது முஷ்த்தும் .

தேவிசகாயம்
சிவகடாட்சம்
குருவே துணை
முனியன் கையெழுத்து
சிவமயம்
வாணி நமோஷ்த்து

**குறிப்பு :**

இதில் ஸ்ரீ சக்கரம் எனப்படும் வாலை சக்கரத்தின் முறை கூறப்-பட்டுள்ளதோடு இதனைப் பூசை செய்யும் முறை ( 13 செய்யுட்களில்) பிராணுயாம முறைகள் , போகர் பெயர் வரக்காரணம் ,குளிகை செய் முறை, ஞானத்தின் கரு, அப்பிரகச் செந்தூரம் முதலியன உள்ளன.

26-ம் பாட்டில் , முடிவென்ன ஒன்றுமில்லை எல்லாம் மாய்கை , முன்னின்ற நீயல்லால் பொருள் காணேனே ' என்றுளது .

இது எமது சுவடி எண் 186 (f) /D. 299 போன்றது.

---

வரிசை எண் : 1290 சுவடி எண் : 664 (b)

# இராமதேவர் சூத்திரம் -500

ஏடுகள் : 103. எட்டின் நிலைமை : பழுதுபட்டது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி . எண்ணிக்கை : 2300. அளவு : 25½ X 3½ செ. மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : இராமதேவர் . முழுமை : முற்றற்றது

**தொடக்கம் ;**

ஆதியத்த மெய்நிறந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் நிலிச் கூடி

யாதியந்த முப்பொருளும் முற்று மொன்றாய்
பரவெளியாய் நின்றபரா பரையுன் பாதம்

**முடிவு :**

அடங்குமே புலியடங்கும் சபை யடங்கும்
மைந்தனே மண்ணும் விண்ணும் மடங்கிப் போகும்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 406

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 365 (b) / D. 727 ; 661 (a) / D. 1284 போன்றது. இதில் பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன பிழைகள் மலிந்து காணப்படுகின்றன.

ooooooooooooo

வரிசை எண் : 1291 சுவடி எண் ; 664 (c)

# குருமுனிவாக்கியம் பூசாவிதி

ஏடுகள் : 59. ஏட்டின் நிலைமை : மிகப்பழுதுபட்டது. பக்கத்திற்கு 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 1200. அளவு : 25½X3½ செ. மீட்டர் எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

வானைத் தாவிய பொதிய மலையில் வாழு
மகத்தான ரிஷியுடை வாய்க்கில் நேர்மை
பானைத் தாவிய பூசா விதியென தென்றும்
பரிவான சிவயோகம் பண்போர் கேளிர்

**முடிவு :**

பணிமாறு காலத்தே சகல சித்தும்
பரிவாகத் தாவென்று கையில் வாங்கி
பணிமாறு காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணுவாய் பூசைவிதி தீட்சை முத்தே. 204

குருபாதமே கெதியுண்டாவதாகவும்

**காலம் :**

சுபகிருது வருஷம் மாசிமாதம் 12ம்தேதி புதன்கிழமை சுவாதி நட்சத்திரம் அஷ்டமி யிப்பேர்பட்ட சுபதினத்தில் திருநீர்மலையில் எழுதியது.

வாலை பாதமே துணை.

**குறிப்பு :**

இது மை பூசப்படாத சுவடி. இது எமது சுவடிஎண் 19 (b)/ D 27. அகத்தியர் தீட்சாவிதி இருநூறு போன்றது. இதில் பாடவேறுபாடுகள் உள்ளன. இதில், பூசாவிதி எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 1292. சுவடிஎண் : 665 [a]

# தன்வந்திரி சித்தர் அகராதி நிகண்டு

ஏடுகள் : 11 (12). ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 6-8 வரிகள். கி. எண்ணிக்கை ; 400, அளவு : 40X3 செ,மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : தன்வந்திரி சித்தர். முழுமை : முற்றுமுளது

**தொடக்கம் :**

அஷ்டவர்க்கத்தின் பேர்
ஆதிமுதலான அனைத்தாகமப் பொருளை
ஓதி..................... மூனை ரதத்தே—தீதகலும்
சிற்பதத்தைச் சிந்தைசெய்து சிவனூர் பயின்றருளுங்
க(ற்)பகத்தைக் கைதொழுதக் கால்.

சற்குரு பாதமே துணை
அபிராமி அம்மன்துணை

அகராதி நிகண்டு

அமிர்தவல்லியாவது சீந்தி
அங்குலமாவது அபிஞசி
அரேணுகமாவது வால்மிளகு
அசுவகெந்தியாவது அமுக்குரா.

**முடிவு :**

வெடியென்றது தூலை
வெடி வெருகல் என்றல் முடக்கல்
அதிவிடைய மென்றது ............யில்

ஆத்தங்கரையில் வசம்பு யிலைபோலே அஞ்சாறுயிலை
யிருக்கும்
அதினுடைய கிளங்கு நாக்கில் வச்சு மென்றால் விரு
விருட்டிக்காணும். மெண்றறிவார்கள் வேறு
அகராதி நிகண்டு முத்தும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், மூலிகைகள் முதலானவற்றின் வேறுபெயர்கள் அகர முதலி யகாத்தரப்பட்டுள்ளன. இதன் கடைசிப்பகுதி 12-ம் ஏட்டின் தொடக்கத்தில் உள்ளது. 6 பத்திசுளாக எழுதப்பட்டுள்ளன.

ʀʀʀʀʀʀʀ

**வரிசை எண் : 1293** **சுவடி எண் : 665 (b)**

## பல கலம்பகத்தில் நிகண்டு

**ஏடுகள்: 3 (12-14) எட்டின் நிலைமை:** மிகமிகப்பழுது. **பக்கத்திற்கு: 6–8 வரிகள் கி. எண்ணிக்கை : 125 அளவு : 40X3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் :** அறியக் கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

நிகண்டு
புண்டரிக மென்றுது தாமரை
முதியார்கூந்த லென்பது சவுரிக்கொத்து
பேரிளம் பெருங் குரும்பை யென்றது வீளி
அமுதவல்லி யென்றது சீந்தி
தலைவிரிச்சா னென்றது கொடிமுடி
அந்தரத் தாமரை யென்றது குளிர்தாமரை
அந்தரப் புக்கியாவது யுப்பு.
தாயைக்கொண்ணுன் வாழை.

**முடிவு :**

விஷத்துவயிரவ னென்பது நீர்வள்ளி.
தேசிலாமிச்சு. சித்தமென்பது மல்லிகை முன்னை
கெருடக்கொடியாவது கொல்லங் கோவை
சிறுபுள்ளடியாவது பெரிகாரை
தலைவிரிச்சா னென்பது பேய்க்கொம்மட்டி.
இந்தப்படி பாத்துக் கொள்ளவும்,
பலகலம்பக நிகண்டு முத்தும்
வாலையபிராமி துணை.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் பல கலம்பகங்களிலிருந்து அரிய சொற்கள் எடுத்தெழுதப் பட்டு, அதற்குரிய பொருள்களும் கூறப்பட்டுள்ளன.

15-வது ஏடு இல்லை. 6 பத்திகளாக எழுதப்பட்டுள்ளன.

❀❀❀❀❀❀

**வரிசை எண் : 1294** **சுவடி எண் : 665 [c]**

# வாகட நிகண்டு

ஏடுகள் : 20½ (16—36½) ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு 40×3செ.மீ எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

15- வது ஏடு இல்லாததால் தொடக்கம் இல்லை போலும்

அத்திடம் வேம்பு
அரியசம் கொன்றை
அங்காரவல்லி குரிஞ்சா
அமுத்து பூற்பதி சிறுகுறிஞ்சா
அரிமல் மாவிலிங்கை

**முடிவு :**

வேம்பு கருவேம்பு
நிலவேம்பு சிவனார் வேம்பு
வேணுபத்திரி மூங்கில்
வெள்ளி வல்லாரை
வெள்ளி விரை
வெள்ளிலை பத்திரம்—விளாம்பிசின்
ரோகிணி கடுகுரோகணி
வோணம் பறை
வெண்ணீறு கூகைநீறு

வாகட நிகண்டு முத்தும்
சித்தி விநயகன் துணை
வாகட நிகண்டு முத்தும்
அரி ஓம்

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது முன்னது போன்ற சுவடி. இதிலும் மூலிகை அகராதி காணப் படுகின்றது. 6 பத்திகளாக எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1295 சுவடி எண் : 665 [d]

# நஞ்சுதின்றபேருக்கு தன்வந்திரி வாகடம்

ஏடு : ½ (37ம் ஏட்டின் பின்புறம்) ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள், கி. எண்ணிக்கை : 15 அளவு 40X3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : தன்வந்திரி, முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

எட்டிக்கி வைவல் எழுத்தாணி தாணிக்காய்
வட்டமுலைத் தாமரையா லுமத்தைக்கி—ஒட்டியே
ஆவாரை கள்ளி அவரியொடு கடுக்காய்
மேலிந் நெயிதேனுக்கு வேந்தன்

**முடிவு :**

நீலிக்குத் தீருமென்று நிச்சயித்தார் மந்திரியும்
பாலித்த நஞ்சுவகை பதினெட்டும் போமென்பார்
சிவனார் கிழங்குதின்றார்க்குச் சண்டிஎலை
யெந்தநஞ்சு தின்றாலு மில்லைப் போம்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது அரசன் மந்திரி உரையாடல் போல விஷவைத்தியம் கூறு கின்றது. செய்யுட்களாக உள்ளன. செய்யுட்கள் சரியில்லை.

வரிசை எண் : 1296 சுவடி எண். : 665 (e)

# நஞ்சுதின்றபேருக்கு அகத்தியர் வாகடம்

ஏடு : 1. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு :6 வரிகள். கி.எண்ணிக்கை : 15. அளவு : 40 × 3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை ; முற்றுமுளது.

## தொடக்கம் :

### நஞ்சு-18

எட்டிக்கி ஞவல் எழுசுண்டி தானிக்கி
வட்டத் தாமரையா மத்தைக்கி - யெட்டியெழு
காட்டி லொருவனுக்குக் கால்படியாம் பச்சரிசி
நீட்டி யரைத்ததை நீயந்த - ஞட்டமுடன்

## முடிவு :

நீலிக்குத் தீருமென்று நிச்சயித்தார் மாமுனிவர்
பாலித்த நஞ்சு பதினெட்டும் - ஆவித்
தவிநயம் முமந்த ... ... யெண்ணேயும் வெந்நீரிலிட
எந்த நஞ்சு தின்றுலு மில்லைப் போம்.

## காலம் :

இல்லை.

## குறிப்பு :

இது கலிவெண்பாவாலமைந்தது போலும் முன்னது போல இருப்பினும் இது நன்ருக உளது. அது தன்வந்திரி. என்றும், இது அகத்தியர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

வரிசை எண் : 1297 சுவடி எண் : 665 (f)

# கும்பமுனி சித்த வல்லாதி

ஏடு : 1. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 35. அளவு : 40X3. செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

அத்திமுக னைத்துதித்து நல்ல
அன்பான வல்லாதி லின்பமாய் சொல்லுவேன்
சித்திரமூலம் வெள்ளருகு சிவனார் வேம்புடன்
சங்கம்வேர் குபர மூத்தின தேங்காயி
னெத்து மூலமாம் கெருடன் அமுக்குரா வேரும்

**முடிவு :**

நல்ல சுங்கன் வெள்ளாடு விரால் குறவை புத்தியாய்
வல்லாதி தன்னை நல்ல போதரவாகவே நேரங்கள்
கண்டு உளங்கள் கண்டாய் திறுத்து உறவான
எண்ணை முழுகுவா யெண்ணை.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் 162(d)/D. 260-ன் வேருயது.

**வரிசை எண் : 1298** **சுவடி எண் : 666 (a)**

## அகத்தியர் சௌமிய சாகரம் - 1000.

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 13 வரிகள். கி. எண்ணிக்கை : 500. அளவு ; 28½X4. செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதியென்ற பூரணமாய் வெளியாய் நின்ற
அகண்டசதா சிவத்தினிட அருளே போற்றி
தாதியெனுஞ் சுழிமுனையிற் பிறவை யான
ஞான சவும்மிய சாகரத்தின் தருவைப் போற்றி

**முடிவு :**

கொள்ளப்பா முப்பூவை யெடுத்து மைந்தா
முழுசெயலரல் சீசாவில் பதனம் பண்ணு

அள்ளடா அகோரமென்ற செபத்தால் மைந்தா
அப்பனே லெட்சமுருத் தியானஞ் செய்து
மொள்ளடா யெடு ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... 105

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

இதில், 104 பாடல்களே முழுமையாயுள்ளன. ஏடுகள் மிகப் பொடிந்து உதிரும் நிலையில் உள்ளன,

இது எமது சுவடி எண். 348/D. 691. ன் வேறுயது. அதில் 1001 பாடல்கள் உள்ளன.

---

வரிசை எண் : 1299 சுவடி எண் : 666 (b)

## தட்சிணாமூர்த்தி ஞான காவியம் - 1000-

ஏடுகள் : 48. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 12 -13 வரிகள். கி. எண்ணிக்கை : 2500. அளவு : 28½X4. செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதிபர மானபதி கருணை ... ... ... து
அடிமுடியும் நடுவான அருளே காப்பு
பாதிமதி சடைக்கணிந்த பரனே காப்பு
பரஞ்சுடர்க்கும் பாதியுடல் பகுத்த சோதி.

**முடிவு :**

கேளடா பிறைவிந்து அங்கோ ணந்தான்
கெணிதமுடன் கோணமஞ்சில் எழுத்தைக் கேளு
வாளடா அஞ்செழுத்தும் வளையப் போட்டு
வரிசையுடன் பிறைநடுவில் மகாரம் போட்டு
மீளடா அதனிடத்தில் ஹரியைப் போட்டு
வேதாந்த பூசைவிதி படிக்கச் செய்து
ஏளடா மந்திரமோயெட் டெழுத்தைத் தூக்கி
யிருத்திடுநீ சித்திரம்போல் குறியைப் பாரே. 352

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இச்சுவடியில் உள்ள ஏடுகள் மிகமிக மடித்த நிலையில் இருக்கின்றன. இதில் ஞானத்தைப் பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1300 சுவடி எண் : 666 (c)

# அகத்தியர் ஞான காவியம் பஞ்ச நாதாக்கள் உபதேசம்

ஏடுகள் : 108. ஏட்டின நிலைமை : மிகமிகப்பழுதுபட்ட நிலை. பக்கத்திற்கு : 11-13 வரிகள் கி. எண்ணிக்கை : 5000 அளவு : 28½X4. செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது

**தொடக்கம் :**

ஆதியந்தம் பூரணமாய் சுழியாய் நின்ற
அமர்ந்தசுழி மூலகண பதியே போற்றி
ஞதிமறை யோரிகளர னுமைக்குச் சொன்ன
ஞானகருக் குருவினுட ரவியே போற்றி

**முடிவு :**

கோணடா குருத்தியானஞ் செபமே செய்தால்
கோடான கோடிசித்தும் குறையா … … …
யேனடா யென்குருத்தான் சுப்பிரமணியன்
யெடுத்துரைத்த வாடைபொடி யியம்பி னேமே. 989

**காலம் :**

இல்லை.

**குறிப்பு :**

ஏடுகள் மடிந்துபோய் உதிரும் நிலையில் உள்ளன. இது 10 பகுதிகளாக உள்ளன.

இதில், ஐங்கோணம் கெணபதி, மூக்கோண சக்கரம், அட்சரம் அத்திப்பலகை, ஆறணியில் புண்ணிய புருஷாள், பருவம், பூருவபட்சம் உத்திரம், அமாவாசி, வாதகாவியம், செயசித்தியாம், முதல்காண்ட யோகசித்தி முதலான பல தலைப்புக்கள் உள்ளன.